விலை: 30.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 05 ஞாயிற்றுக்கிழமை (19.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 151

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## உயிரோடு கலந்த உறவுகளை நினைத்து

# கண்ணீரில் மூழ்கியது முள்ளிவாய்க்கால்

**(முல்லைத்தீவு) தமிழின அழிப்புக்கான கொடிய யுத்தம் முடிவடைந்து 10 ஆண்டுகள் கடந்த நிலையில் உயிரோடு கலந்த தமது உறவுகளை நினைத்து முள்ளிவாய்க்கால் முற்றமே நேற்று கண்ணீரில் மூழ்கியது.**



இலங்கையின் உள்நாட்டு போர் முடிந்து பத்தாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

நேற்று காலை 10.30 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு முதல் நிகழ்வாக உயிரிழந்த அனைத்து உறவுகளின் ஆத்மா சாந்தியடைய இரண்டு நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்டது.

பின்னர் 10.32 மணிக்கு இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலில் தாயை பறிகொடுத்த நிலையில் தனது ஒரு கையினையும் இழந்த சிறுமி ஒருவர் பிரதான ஈகை சுடரினை ஏற்றி நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இருந்த சுடர்கள் ஒவ்வொ 16

## யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்




(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 10 ஆம் ஆண்டு நினைவு தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் நினைவு தூபியில் நினைவுகூரப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் தூபி முன்றிலில் மாணவர்களும், ஊழி 16

## மே- 18 இன அழிப்புக்கு எதிரான தமிழ்த் தேச எழுச்சி நாள்

### முள்ளிவாய்க்காலில் நேற்று பிரகடனம்



மே-18ஐ இன அழிப்புக்கு எதிரான தமிழ்த் தேச எழுச்சி நாளாகவும் 2019 ஆம் ஆண்டை இன அழிப்புக்கு எதிரானதும் அரசியல் நீதிக்கான சர்வதேச வலுச்சேர்க்கும் ஆண்டாகவும் பிரகடனம் செய்கின்றோம் என முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுகட்டமைப்பு அறிவித்துள்ளது. 12

## முள்ளிவாய்க்கால் நினைவை முன்னிட்டு பிரித்தானியாவில் மாபெரும் பேரணி

(லண்டன்)

இலங்கை அரசின் மாபெரும் இன அழிப்பு முள்ளிவாய்காலில் நடைபெற்று 10 ஆண்டுகள் போய்விட்டது. இந்த இன அழிப்புக்கான நீதி எம் மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. சர்வதேச சமூகமும் எமக்கு இழைக்கப்பட்ட அநீதியை பாராமுகமாக இருப்பதை கண்டித்தும் முள்ளிவாய்க்காலில் சிங்கள பேரினவாதத்தால் கொல்லப்பட்ட அப்பாவிமக்களுக்காகவும் நீதி வேண்டி புலம்பெயர் தமிழ் மக்களும் அமைப்புக்களும் இந்த வாரம் முழுவதும் எழுச்சி வாரமாக பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

உண்ணாவிரதம் மற்றும் இரத்ததானம். பிரித்தா 16



## அமைதியை பேணுவதற்கு எதிர்க்கட்சி முழு ஆதரவு

### மகிந்த ஜேர்மனியிடம் உறுதி

(கொழும்பு)

இலங்கையில் அமைதியைப் பேணுவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளைப் பிரதான எதிர்க்கட்சி ஆதரிக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த 16

## வெளிநாட்டு பெண்ணொருவர் முள்ளிவாய்க்காலில் அஞ்சலி

(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று உணர்வு பூர்வமாக முள்ளிவாய்க்காலில் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் 15



## நீதிப் பொறிமுறையை நடைமுறைப்படுத்த

### இலங்கைக்கு பிரித்தானியா ஆதரவு

(கொழும்பு)

இலங்கையின் நிலைமாறு கால நீதிப் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவு தெரிவிப்பதாக பிரித்தானிய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

பிரித்தானிய வெளிவிவகாரத் துறை அலுவலகத்தின் ஆசிய பிராந்தியத்திற்கான அமைச்சர் மார்க் ஃபீல்ட் நேற்று சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். யுத்தம் முடிந்து 10 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் 16

## புத்தளத்தை சேர்ந்த முஸ்லிம் இளைஞன் கொக்குவிலில் கைது

(யாழ்ப்பாணம்)

புத்தளம் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கொக்குவில், கருவப்புலம் வீதியில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த குறித்த இளைஞனை சந்தேகத்தின் பேரில் இராணுவத் 16

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்தில் காவடி நேர்த்திகளை மேற்கொள்ளலாம்

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை பொங்கலுக்கு நாளை 20 ஆம் திகதி பறவைகாவடி, தூக்குகாவடி நேர்த்திகளை ஆலய வளாகத்தில் மாத்திரம் மேற்கொள்ளலாம் என ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. பொங்கல் தொடர்பாக முதலில் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தயாசிறியிடம் 3 மணிநேரம் வாக்குமூலம்

ஹெட்டிப்பொலையில் கடந்த தினங்களில இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில், சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர விடம் நேற்று விசாரணை நடத்தப்பட்டது.

கொழும்பு பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் நேற்று முற்பகல் 9.30க்கு முன்னிலையான தயா சிறி ஜயசேகர, மூன்றரை மணி நேரம் வாக்குமூலம் வழங்கியதன் பின்னர் அங்கி ருந்து வெளியேறினார்.

குழப்பம் விளைவித்தமைக்காக பிங் கிரிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட ஆறு பேர், ஹெட்டிபொல பொலிஸ் நிலை யத்துக்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, கடந்த 13ம் திகதி குழப்பநிலை உருவானது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர குறித்த பகுதிக்கு சென் றிருந்தார்.

இதன் நிமித்தம் வாக்குமூலம் பதிவு செய்வதற்காக அவர் நேற்று பொலிஸாரால் அழைக்கப்பட்டிருந்தார். (ம-3)


## வேலைவாய்ப்பு

யாழ்.மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக் கப்பட்ட Brownson உற்பத்திப் பொருட் கள் விற்பனை செய்வதற்கான ஆண் விற்பனை பிரதிநிதி உடன் தேவை.

தொடர்புகளுக்கு: (8838)

077 071 3048
077 305 0688

## பணியாளர் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள எமது நிறுவனத் துக்கு பெண் பணியாளர் தேவை. O/L (Or) A/L படித்த 18-30 வயதுக்குட்பட்டவர்கள் யாழ்.நகரில் இருந்து 5Km உட்பட்டவர்களு க்கு முன்னுரிமை வழங்கப்படும். நேர்முகத் தேர்வு 21.05.2019, 22.05.2019 நேரில் சமுகம் தரவும் அடிப்படை சம்பளம் 15000/=

தொடர்புகளுக்கு: (8838)

SKT LOTTERS
இலக்கம் 108, மானிப்பாய் வீதி,
KKS வீதி அருகாமை யாழ்ப்பாணம்.
077 516 4928/021 221 5777


# அமெரிக்காவின் தலையீடு தொடர்பில்

## 24ம் திகதி விவாதம்

அமெரிக்கா இலங்கையில் மேற்கொள் கின்ற தலையீடுகள் தொடர்பான பாராளு மன்ற விவாதம் ஒன்று இந்த மாதம் 24ம் திகதி இடம்பெற வுள்ளது.

ஜேவிபியின் பாராளுமன்ற உறுப் பினர் பிமல் ரத்நாய க்க இதனைத் தெரி வித்துள்ளார்.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையில் பாது காப்பு சம்பந்தமான உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஏற்கெனவே சோஃபா என்ற உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப் பட்டு அதனை புதுப் பிப்பதற்கான நடவ டிக்கைகள் இரகசி யமாக மேற்கொள் ளப்படுகின்றன.

இதில் இலங் கையின் இறைமைக்கு பாதிப்பை ஏற் படுத்தும் அபாயம் இருக்கிறது.

இந்த நிலையிலேயே குறித்த விவா தத்தை கோரி இருப்பதாக அவர் குறிப்பிட் டுள்ளார். (ம-3)


# மரண அறிவித்தல்



## செல்லையா நாதன்

(நீதன் மரக்காலை உரிமையாளர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25-04-1953 | 16-05-2019 |

மலையந்தோட்டம் கொற றாவத்தையைப் பிறப்பிட மாகவும் "சரிபவன்" சமரபாகு, வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நாதன் அவர்கள் கடந்த 16.05.2019 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் இந்திராவதியின் அன்புக் கணவரும் நவனீதன், சரிதா, ராகுலன் (லண்டன்), சஞ்ஜீவன், நிரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பார்த்தீபன், மகாஜினி, ஞானதுளசி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-6418)

'சரிபவன்'
சமரபாகு,
வல்வெட்டித்துறை.

தகவல்:-
செ.வீரபத்திரன் (சகோதரன்)
வீ.பார்த்தீபன் (மருமகன்)

## ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம் கொக்குவில்

### விஷேட பொதுக்கூட்டம்

மேற்படி ஆலயத்தின் பரிபாலன சபைக்கு புதிய பொருளாளரை தெரிவு செய்வதற்கான விஷேட பொதுக்கூட்டம் 25.05.2019ம் திகதி சனிக் கிழமை பி.ப 4.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து அங்கத்தவர்களையும் தவ றாது சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள் கின்றோம்.

நன்றி


செயலாளர்
பரிபாலன சபை

(8849)

# ஆரி பயிற்சி வகுப்புகள்

யாழ்.நகரில்

சிறந்த 50 டிசைன்கள்




அனுமதி கட்டணம் ரூபா.3,000.00 இனை செலுத்தி இணைந்து கொள்ளுங்கள் !!!

மேலதிக தொடர்புகளுக்கு 0777874964

(C-6421)

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

## யாழ். கலாலயா பயிற்சியகம்



இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

### மகளிருக்கான பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- FACIALS (முக அழகுக்கலை) Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும்.
- கேக் ஐசிங் - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream, Piping Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- உணவு தயாரித்தல் - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.



பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- அத்துடன் பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்
29.05.2019 புதன் காலை 10.00 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்
01.06.2019 சனி காலை 10.00மணி

மேலும் விபரங்களை பி.ப 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-

Guru

# தாய் நாடு குருதியில் நனைந்தது போதும்

## கர்தினால் ஆண்டகை கோரிக்கை



(பம்பலப்பிட்டி)

தாய் நாடு குருதியில் நனைந்தது போதும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டி புனித மரியாள் தேவாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற விசேட ஆராதனையில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர், 'உலகில் உண்மையில் கடவுள் இருந்தால், ஏன் இப்படியான சம்பவங்கள் நடக்கின்றன. ஏன் அதற்கு இடமளிக்கின்றார் என்று சிலர் நினைக்கலாம்.

மனிதனின் சுயநலம் காரணமாக இப்படியான சம்பவங்கள் நடக்கின்றன. இவை கடவுள் திட்டமிட்டவை அல்ல.

கொலை செய்வதும் மற்றவரின் உயிரைப் பறிப்பது கடவுளின் சட்டத்தில் இல்லை. தமது உயிர்களைக்கூட கவனத்தில் கொள்ளாது இந்த முட்டாள் மனிதர்கள் மேற்கொண்ட நடவடிக்கை குறித்து உண்மையில் நாம் கவலையடைகின்றோம்.

1971 ஆம் ஆண்டு முதல் நாம் மனிதர்களைக் கொலை செய்வதை நன்றாக செய்து வந்தோம்.

இலங்கை மண் தேவைக்கும் அதிகமாக குருதியில் நனைந்து விட்டது. மேலும் எமது தாய் மண்ணை குருதியில் நனைக்கக் கூடாது' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சிறீதரன் எம்.பி. வீட்டில் இராணுவம் சோதனை!

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் வீடு நேற்று இராணுவத்தினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டிலேயே இவ்வாறு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நேற்று இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்குச் சென்ற நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான ஆவணங்கள் இருப்பதாகத் தெரிவித்து குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



இருப்பினும் சோதனை நடவடிக்கையின் போது எந்தவொரு பொருட்களையும் இராணுவத்தினர் மீட்கவில்லை எனவும் இச்சம்பவம் தொடர்பில் சபாநாயகருக்கு தெரிவித்ததாக சிறீதரன் தெரிவித்தார். (இ-10)

## பத்து வருடங்களாகிவிட்ட நிலையிலும்

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிவழங்க இலங்கை அரசு தவறிவிட்டது

## சர்வதேச மனிதவுரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து பத்து வருடங்களாகிவிட்ட போதிலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை அரசாங்கம் நீதி வழங்கத் தவறிவிட்டது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கடந்த 2015 ஒக்டோபர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இலங்கை அரசாங்கம் யுத்தகால மீறல்களுக்கு நீதி வழங்குவதாகவும் மனித உரிமையை ஊக்குவிப்பதாகவும் உறுதியளித்தது எனத் தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் இந்தக் கடப்பாடுகள் தொடர்பில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் நீதி வழங்குவதற்கும் பொறுப்புக்கூறுவதற்கும் எந்த முயற்சிகளும் இடம்பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

2009 இல் இலங்கையில் யுத்தம் முடிவிற்கு வந்தமை அழிக்கப்பட்ட வாழ்வை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை மாத்திரமல்லாமல் உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றிற்கான மதிப்பை மீண்டும் உருவாக்குவதற்கான வாய்ப்பையும் வழங்கியிருந்தது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கையில் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் இந்த வாய்ப்பைத் தவறவிட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ள அவர் இருதரப்பினதும் அநீதிகளை விசாரணை செய்யவும் அவை தவறிவிட்டன.

யுத்தக் குற்றங்களுக்கு காரணமானவர்களைப் பொறுப்புக்கூறச்செய்ய தவறிவிட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மை மற்றும் இழப்பீட்டை வழங்க தவறிவிட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து பத்தாண்டுகளாகின்ற நிலையிலும் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகளுக்கு பின்னரும் அனைத்து இலங்கையர்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் மீண்டும் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது நடைபெறவேண்டும் என்றால் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவது, இழப்பீடு வழங்குவது உட்பட தனது கடப்பாடுகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் எனவும் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார். (இ-7)

# சமாதானத்தையும் உறுதிப்பாட்டையும் நிலைநாட்டுங்கள்

## சுவிஸ் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் சமாதானத்தையும், உறுதிப்பாட்டையும் நிலைநாட்டுமாறு சுவிஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

சுவிஸ் வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில், 'இலங்கையின் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் சுவிஸில் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

அண்மைக்காலமாக இலங்கையில் வன்முறைகள் அதிகரித்துள்ளன. தொடர்ந்தும் சிறுபான்மையினருக்கு எதிராகத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கான காரணங்களை இன்றும் இலங்கையின் அரசாங்கங்கள் நிவர்த்தி செய்யவில்லை. இந்த நிலையில் இலங்கையில் சமாதானத்துக்காக முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயார்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# 38 இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு இராணுவ வெற்றியின் 10 ஆண்டு நிறைவு நினைவு தினம் நேற்றாகும்.

இந்நிலையில், இன்று ஞாயிற்றுக்கிழமை தேசிய போர் வீரர்களின் தினம் கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு 38 சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு ஜனாதிபதி தலைமையில் உயர் பதவி வழங்கப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

## வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(திருகோணமலை)

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை கைவசம் வைத்திருந்த நபர் ஒருவர் உப்புவெளி - மொங்காயுத்து பிரதேசத்தில் வைத்து நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை - கிஷன்

ணியா பிரதேசத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது குறித்த துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 8 ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)


# பட்டதாரிகள் 72 பேருக்கு கல்வியமைச்சால் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத் தகவல் தொடர்பாடல் பட்டதாரிகள் 57 பேருக்கும் ஏற்கனவே நியமனம் வழங்கப்பட்டதில் விடுபட்ட கணித, விஞ்ஞான, ஆங்கிலப் பட்டதாரிகள் 15 பேருக்கும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழிலுள்ள வடமாகாண கல்வி அமைச்சில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படுமென வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் அறிவித்துள்ளார். (இ-10)

# ஹோலிக்கு அக்னிப் பரீட்சை

## உலகக்கிண்ணத் தொடரில் காத்திருப்பு



உலக கிண்ணத் தொடரில் பங்கேற்கும் இந்திய அணி மீது எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இதில், அணித் தலைவராகச் சாதித்துக் காட்ட வேண்டிய கட்டாயத்தில் ஹோலி உள்ளார்.

இங்கிலாந்தில் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் வரும் 30ஆம் திகதி முதல் ஜூலை 14 வரை நடக்ககின்றது. மொத்தம் 10 அணிகள் மோதுகின்றன. இதற்கான இந்திய அணிக்கு தலைவராக ஹோலி உள்ளார்.

அவுஸ்திரேலிய மண்ணில் முதல் டெஸ்ட் தொடர் வென்று காட்டியவர் ஹோலி. தனிப்பட்ட முறையில் இவர் சிறந்த வீரர் என்பதில் மாற்றமில்லை. ஏழு வாரங்கள் நடக்கும் இத்தொடரில் ஹோலி, 12,000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டலாம்.

ஏற்கெனவே 41 சதங்கள் அடித்த இவர், கூடுதலாக சில சதங்கள் விளாசலாம். ஆனால் மிகப்பெரிய உலக கிண்ணத் தொடரில் அணித் தலைவராக ஜொலிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். நான்காவது இடத்திற்கு சரியான வீரரை தேர்வு செய்ய வேண்டும். மூன்று வேகப்பந்து வீச்சாளர்களா அல்லது குல்தீப், சகால் என இரு 'சுழல்' தாக்குதலா என்பதை முடிவு செய்ய வேண்டும். இப்படி சிறந்த அணியை தேர்வு செய்வதில் ஹோலிக்கு பெரும் சவால் காத்திருக்கிறது.

ஆடுகளங்கள் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக இருக்கும் நிலையில், ஆரம்பத் தில் ரோகித் சதங்கள் அடிக்கலாம். ஐ.சி.சி., தொடர் என்றாலே அசத்தும் ஷிகர் தவான் ஓட்ட மழை பொழியலாம்.

**எங்கு பிரச்சினை**

இதற்கு பின் தான் பிரச்னை வருகிறது. 'துடுப்பாட்ட' வரிசையில் நான்காவது இடத்தில் யாரை தேர்வு செய்வது என்பது குழப்பமாக உள்ளது. தமிழக 'சகலதுறை வீரர்' விஜய் சங்கர், தினேஷ் கார்த்திக், லோகேஷ் ராகுல் மத்தியில்- போட்டி காணப்படுகிறது. 2018 முத்தரப்பு தொடர் இறுதிப் போட்டியில் கிண்ணம் வெல்ல உதவினார் தினேஷ் கார்த்திக் (8 பந்து, 29 ஓட்.,). மற்றபடி, இவரது 14 ஆண்டுகால கிரிக்கெட் வரலாற்றில் வேறு பெரிய இன்னிங்ஸ் எதுவும் நினைவில் இல்லை.

**கேதர் தேறுவாரா?**

அடுத்து தோனி, 6வது இடத்தில் கேதர் ஜாதவ் வருகிறார். சமீபத்திய ஐ.பி.எல்., தொடரில் இவரது துடுப்பாட்டம் சுமார் தான். பந்துவீச்சும் செய்யவில்லை. 7வதாக வரும் ஹர்திக் பாண்ட்யா, இத்தொடரில் இந்திய அணிக்கு பல திருப்பு முனைகளை கொடுப்பார் என நம்பப்படுகிறது.


**உதவுமா 'சுழல்'**

பந்துவீச்சில் குல்தீப் யாதவ், சகால் மீது அணி நிர்வாகம் அதிக நம்பிக்கை வைத்துள்ளது. பிரிமியர் தொடரில் குல்தீப் 'போர்ம்' சரியில்லை என நீக்கப்பட்டார். அடுத்து வரும் பும்ரா, இந்திய அணிக்கு 'மேட்ச் வின்னராக' இருப்பது உறுதி. ஷமியுடன் இணைவது எதிரணிகளுக்கு தொல்லையாக இருக்கும்.

**தோனி எப்படி?**

தோனியை பொறுத்தவரையில் இது கடைசி உலக கிண்ணத் தொடராக இருக்கும். ஐ.பி.எல்., தொடரில் கடைசிகட்ட ஓவர்களில் இளம் இந்திய பந்துவீச்சாளர்களை சமாளித்து அதிக ஓட்டங்கள் சேர்த்தார். ரபாடா (தெ.ஆப்.,), கம்மின்ஸ் (ஆஸி.,), மொஹமட் அமிர் (பாக்.,) உள்ளிட்டோர் இம்முறை தொல்லை கொடுக்கலாம். 35 முதல் 50 ஓவர்கள் வரை தோனியின் துடுப்பாட்ட 'ஸ்டிரைக் ரேட்' 70 ஆக உள்ளது ஏமாற்றம்.

## இப்ராகிமோவிச்சுக்கு தடை




எம்.எல்.எஸ்., கால்பந்து போட்டியில் எதிரணி கோல்காப்பாளருடன் மோதலில் ஈடுபட்ட கேலக்சி வீரர் இப்ராகிமோவிச்சிற்கு இரண்டு போட்டியில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கழக அணிகளுக்கு இடையே மேஜர் லீக் கால்பந்து (எம்.எல்.எஸ்.,) தொடர் நடக்கிறது. கடந்த 11ஆம் திகதி நடந்த போட்டியில் நியூயோர்க் சிட்டி அணி 2-0 என கேலக்சியை வீழ்த்தியது. இதன் கடைசி கட்டத்தில், கேலக்சி வீரர் இப்ராகி மோவிச் (சுவீடன்) கோல் முயற்சியை, எதிரணி கோல்காப்பாளர் சியான் ஜோன்சன் (அமெரிக்கா) தடுத்தார். இதனால், ஜோன்சனின் கழுத்தில் கைவைத்து கீழே தள்ளினார் இப்ராகிமோவிச். இதில் இருவருக்கும் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. இந்த செயலுக்கு, எம்.எல்.எஸ்., ஒழுங்கு நடவடிக்கை குழு தண்டனை விதித்துள்ளது. இதன்படி, இப்ராகிமோவிச்சிற்கு அடுத்த இரண்டு போட்டியில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

நடப்பு சீசனில் 10 போட்டிகளில் 9 கோல் அடித்துள்ள இப்ராகிமோவிச், கொலாரடோ (மே 20), ஆர்லான்டோ சிட்டி (மே 25) அணிக்கு எதிரான போட்டியில் பங்கேற்க முடியாது.

## இங்கிலாந்து வெற்றி




பாகிஸ்தானுக்கு எதிரான நான்காவது ஒரு நாள் போட்டியில் 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி ஒருநாள் தொடரை கைப்பற்றியது.

இங்கிலாந்து சென்ற பாகிஸ்தான் ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் மூன்று போட்டி முடிவில் இங்கிலாந்து 2-0 என முன்னிலையில் இருந்தது. நான்காவது போட்டி நொட்டிங்காமில் நடந்தது.

மோர்கன் தடை காரணமாக பட்லர் அணித் தலைமையைப் பொறுப்பேற்றார்.

நாணயச்சுழற்சியில் வென்ற பட்லர் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**பாபர் ஆறுதல்**

பாகிஸ்தான் அணிக்கு இமாம் அல் ஹக், பகர் ஜமான் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. இமாம் (6) ஓட்டங்கள் எடுத்த போது, மார்க் உட் வீசிய பந்து இவரது இடது கையில் தாக்கியது. 143 கி.மீ., வேகத்தில் வந்து தாக்கியதால் வெளியில் துடித்த இவர் 'ரிட்டயர்ட் ஹேர்ட்' ஆனார். பகர் ஜமான் 57 ஓட்டங்கள் எடுத்தார். ஹபீஸ் 59 ஓட்டங்கள் எடுக்க, பாபர் ஆசம் 115 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். சோயப் மலிக் (41) 'ஹிட்' விக்கெட் ஆனார்.

50 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 340 ஓட்டங்களை குவித்தது. அணித் தலைவர் சர்பராஸ் (21) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**ரோய் அபாரம்**

கடின இலக்கைத் துரத்திய இங்கிலாந்து அணிக்கு வின்ஸ் (43) சற்று உதவ, ஜேசன் ரோய் 114 ஓட்டங்கள் குவித்து கைகொடுத்தார். ஜோ ரூட் 36 ஓட்டங்கள் எடுக்க, பட்லர், மொயீன் அலி 'டக்' அவுட்டாகினர். பின் வரிசையில் ரொம் கர்ரான் 31 ஓட்டங்கள் எடுத்து உதவினார். இங்கிலாந்து அணி 49.3 ஓவரில் 341/7 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஸ்ரோக்ஸ் (71), ரஷித் (12) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஒரு போட்டி மீதமுள்ள நிலையில், இங்கிலாந்து அணி ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.




## சச்சினா... அக்தரா

உலகக் கிண்ண அரங்கில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டியில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது.

இது, 2003ல் தென்னாபிரிக்காவின் செஞ்சூரியனில் நடந்த லீக் போட்டியிலும் தொடர்ந்தது. சயீட் அன்வர் (101) சதம் கடந்த கைகொடுக்க பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களை எடுத்தது.



பின் களமிறங்கிய இந்திய அணிக்கு பாகிஸ்தான் 'வேகப்புயல்கள்' நெருக்கடி கொடுப்பர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அக்ரம் வீசிய முதல் ஓவரிலேயே சச்சின், சேவக் தலா ஒரு பவுண்டரி அடித்தனர். அக்தர் வீசிய அடுத்த ஓவரில் திருப்பு முனை ஏற்பட்டது. இதில் ஒரு இமாலய சிக்சர் விளாசிய சச்சின், பாகிஸ்தானின் நம்பிக்கையை தகர்த்தார். அடுத்த இரண்டு பந்துகளில் வரிசையாக இரண்டு பவுண்டரிகள் அடித்து, வெற்றிக்கான அடித்தளம் அமைத்தார்.

அப்போதைய அணித் தலைவர் கங்குலி 'டக்-அவுட்' ஆன போதும், டிராவிட் (44), யுவராஜ் சிங் (50) கைகொடுத்தனர். அபாரமாக ஆடிய சச்சின், 75 பந்துகளில் 98 ஓட்டங்கள் (12 பவுண்டரிகள், ஒரு சிக்சர்) அடித்து வெற்றியை உறுதி செய்தார்.

இந்திய அணி 45.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 276 ஓட்டங்கள் எடுத்து, 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அக்தரை பொறுத்தவரை சச்சினை ஆட்டமிழக்கச் செய்து ஆறுதலைத் தேடினார்.

**தெரியுமா?**

கடந்த 1979ல் நடந்த உலகக் கிண்ணத் தொடரில் இரண்டு நெருங்கிய உறவினர்கள் இந்திய அணிக்காக விளையாடினர். ஒருவர் சுனில் கவாஸ்கர். மற்றொருவர் இவரது தங்கை கணவர் குண்டப்பா விஸ்வநாத்.

31ம் நாள் நினைவஞ்சலி



எமது கழகத்தின் முன்னாள் தலைவர்
அமரர் நா.சிவச்சந்திரன்
(ஆசிரியர் - யாழ்.இந்துக் கல்லூரி)
அவர்களின் இழப்பால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.
(8850)
லெவின் ஸ்ரார்
விளையாட்டுக் கழகம்

# வெசாக் பண்டிகையை முன்னிட்டு 762 சிறைக் கைதிகள் விடுதலை



வெசாக் பௌர்ணமி தினத்தையொட்டி பொது மன்னிப்பின் கீழ் 762 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலை விளையாட்டு மைதானத்தில் நேற்று இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி வெலிக்கடை சிறைச்சாலையில் 117 கைதிகள், பல்லேகல சிறைச்சாலையில் 62 கைதிகள், மாஹர சிறைச்சாலையில் 55 கைதிகள், அநுராதபுர சிறைச்சாலையில் 50 கைதிகள், பல்லன் சேன சிறைச்சாலையில் 53 கைதிகள் என்ற அடிப்படையில் சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிறைச்சாலை வரலாற்றிலே இம்முறை தான் அதிகமான சிறைக்கைதிகள் விடுதலைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 120 இலங்கையர்களை கடத்திய இந்தோனேசியர்களுக்கு சிறை

(ரீயூனியன்)

இலங்கையிலிருந்து ரீயூனியன் தீவுக்கு 120 இலங்கையர்களை படகில் அழைத்துச் சென்ற விவகாரத்தில் 3 இந்தோனேசிய ஆட்கடத்தல்காரர்களுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான விசாரணை கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போதே 3 இந்தோனேசியர்களுக்கும் 12 மாதங்கள் முதல் 15 மாதங்கள் வரை சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக ரீயூனியன் தீவிலிருந்து செயற்படும் Imaz Press என்ற செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதம் முதல், 273 இலங்கையர்கள் ரீயூனியன் தீவுக்குச் சென்றடைந்துள்ளனர். அதில் 130 பேர் இன்றும் அத்தீவில் வசித்து வருகின்றனர்.

சமீப ஆண்டுகளாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களின் முயற்சிகள், கடுமையான கட்டுப்பாடுகளின் காரணமாக தோல்வியடைந்து வருகின்றது. இந்த நிலைமையை கருத்திற்கொண்டு, பிரான்ஸின் தீவுப் பகுதிக்குச் செல்லும் முயற்சியை இலங்கையர்கள் மேற்கொண்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இதற்கு முன்னர் கடந்த ஏப்ரல் 13 ஆம் திகதி மீன்பிடிப் படகு மூலம் 120 இலங்கையர்கள் 4000 கிலோமீற்றர் தூரம் பயணித்து இந்தியப் பெருங்கடலில் அமைந்திருக்கும் ரீயூனியன் தீவுக்குச் சென்றடைந்திருந்தனர். இதற்காக ஒவ்வொருவரும் தலா 2 இலட்சம் இந்திய ரூபாய் முதல் சுமார் 5 இலட்சம் ரூபாய் வரை ஆட்கடத்தல்காரர்களிடம் வழங்கியிருந்தனர்.

இந்தியப் பெருங்கடலில் அமைந்திருக்கும் ரீயூனியன் தீவு, பிரெஞ்சு அரசு நிர்வகிக்கும் தீவாக இருந்து வருகின்றது. இந்தத் தீவுக்குச் சென்ற இலங்கையர்கள், பிரெஞ்சு அரசிடம் தஞ்சம் கோரும் முயற்சியை மேற்கொண்டிருந்தனர்.

இதனை ஆட்கடத்தல் சம்பவமாக அணுகிய பிரெஞ்சு அரசு, அவர்களுக்கு தஞ்சமளிக்க மறுத்து 120 பேரில் 60 பேரை நாடுகடத்தியது. இந்தச் சூழலில், இவர்களை அழைத்துச் சென்ற 3 இந்தோனேசிய படகோட்டிகளும் சட்டவிரோத குடியேற்றத்துக்கு துணை புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வடமாகாண 5 மாவட்டங்களுக்கிடையிலான சொகுசு பேருந்துச் சேவையை ஆரம்பிக்கவும்

## ஆளுநரிடம் ஜெயசேகரன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கிடையிலான வசதிமிக்க சொகுசு பேருந்துச் சேவைகளை ஆரம்பிப்பதற்கு பொதுமக்கள் மத்தியில் இருந்து பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ஆனால் இன்றுவரை அதன் சேவை ஆரம்பிக்கப்படவில்லை. இந்தச் சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் அரச ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் உல்லாசப் பயணிகள் இதன்மூலம் பயன்பெறுவார்கள். அத்துடன் வடமாகாணத்திற்கான உல்லாசத்துறை வளர்ச்சியடையக் கூடிய சாத்தியக்கூறும் நிறையவே உள்ளன என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இ.ஜெயசேகரன் தெரிவித்துள்ளார்.

இந்தச்சேவையை ஆரம்பிப்பதற்கு வடமாகாணத்தைச் சேர்ந்த யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையம் ஆயத்தமாகவே உள்ளதாக அறிகின்றேன்.

ஆகவே இந்தச்சேவையை உடன் ஆரம்பிப்பதற்கு எந்தத் தடையும் இல்லை.

இந்தச் சேவை ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் பயணிகளின் நன்மைக்கு அப்பால் இதன்மூலம் பலபேர் வேலைவாய்ப்பு பெறுவதற்கும் வாய்ப்புள்ளது. வடமாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் நகரங்களுக்கிடையிலான சொகுசு பஸ் சேவை அந்தந்த மாகாணங்களில் திறம்பட நடத்தப்படுகின்றது.

வடமாகாணத்தில் அதற்குரிய வாய்ப்புக்கள் நிறையவே இருந்தும் இந்தச் சேவைக்கான அனுமதி இன்னும் வழங்கப்படவில்லை.

இந்தக் கோரிக்கை தொடர்பாக 08.04.2019 அன்று நடைபெற்ற கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

வடமாகாணத்தின் மேற்படி ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தளங்களுக்கு விஜயம் செய்யும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் மகிழ்ச்சியோடு ரம்மியமான சூழ்நிலையில் தங்கள் பிரயாணங்களை மேற்கொள்ள முடியும்.

இவ்வசதியை அளிப்பதன் மூலம் வடமாகாணத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு எமது வடமாகாணத்தின் பொருளாதாரமும் விருத்தியடையும்.

ஆகவே மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்தில் எடுத்து வடமாகாண போக்குவரத்து அதிகார சபையின் அனுமதியோடு இந்தச் சேவைகளை உடனே ஆரம்பிப்பதற்கு இந்த மாகாணத்தின் ஆளுநர் என்ற வகையில் தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தங்களிடம் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இது சம்பந்தமாக மேலதிக விபரங்கள், விளக்கங்கள் ஏதும் தேவைப்படின் யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையத்தினை அழைத்து தங்களுடன் ஒரு கலந்துரையாடலை மேற்கொள்ள நாம் ஆயத்தமாக உள்ளோம். அதற்குரிய நேரத்தை ஒதுக்கித் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன் என ஆளுநருக்கு அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

# செப்புத் தொழிற்சாலையில் வேலைசெய்த மற்றுமொரு சந்தேகநபரும் கைதானார்

(கொழும்பு)

சினமன்கிராண்ட் ஹோட்டலில் தற்கொலைத் தாக்குதல் நடத்திய மொஹம்மட் இப்ராஹீம் இன்சாப் அஹமட் என்பவருக்குச் சொந்தமான, குண்டுகள் தயாரிக்க பயன்படுத்தப்பட்ட இடமாகச் சந்தேகிக்கப்படும் வெல்லம்பிட்டி செப்புத் தொழிற்சாலையில் வேலை செய்தவராக மற்றொரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவனல்லையைச் சேர்ந்த மொஹம்மட் லைலஸ் மொஹம்மட் சல்மான் நூர் பாரிஸ் எனும் நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்று முன் தினம் கொழும்பு மேலதிக நீதவான் பியந்த லியனகே முன்னிலையில் ஆஜர் செய்யப் பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக் கப்பட்டுள்ளார்.

அத்துடன் ஏற்கனவே இந்த விவகாரத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து வரும் 10 ஆவது சந்தேக நபரான கருப்பையா ராஜேந்திரன் அப்துல்லாவும் மன்றில் அஜர்செய்யப்பட்டார்.

இதன்போது அவரையும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (7)


## கண்ணீர் அஞ்சலி

திருமதி மீனலோசனி சண்முகானந்தன்



பங்குப்பரிவர்த்தனை யாழ். கிளையில் பணியாற்றும் சண்முகானந்தன் சபானந்தன் அவர்களின் அன்புத் தாயார் மீனலோசனி சண்முகானந்தன் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள், பங்குப்பரிவர்த்தனை, யாழ்.கிளை.


## இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி. புத | செவ். ராகு |
| | இராசி பலன் | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பரணி | | |
| சனி, கேது | சந். குரு | | |

19.05.2019

வைகாசி 05, ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு

பிரதமை பின்னிரவு 2.55 மணிவரை

அனுசம் பின்னிரவு 3.18 மணிவரை

சுபநேரம் 8.52-10.22 மணிவரை

இராகுகாலம் 4.22-5.52 மணிவரை

வளவன்

**மேடம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், பண விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**இடபம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் சந்திப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**கடகம்:** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சுயமுயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வார்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி:** உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், போசன சுகமுண்டு, பிரயாணங்களால் பலனுண்டு, வருமானம் பெருக வழி அமைத்துக் கொள்வீர்கள்.

**துலாம்:** உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பிறர் உதவியுண்டு, எதிலும் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு:** எடுத்த காரியத்தை நிறைவு செய்ய அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**மகரம்:** உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள்.


**கும்பம்:** விடாமுயற்சியின் மூலம் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**மீனம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், பயணங்களால் பலனுண்டு, வாக்கு மேன்மையுண்டு.





யாழ்ப்பாணம்- நல்லூர் சிவன் கோவில் (அம்மன்) தேர்த்திருவிழா நேற்று சனிக்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது. (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)





சாவகச்சேரி-சங்கத்தானை சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலய இரதோற்சவத் திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது. (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# ஆடியபாதம் வீதியில் அதிரடிப் படையினரால் மோட்டார் குண்டு மீட்பு



(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஆடியபாதப் பகுதியில் உள்ள வீட்டிலிருந்து மோட்டார் குண்டு ஒன்று நேற்றுக்காலை விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது. கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறித்த பகுதியில் நேற்றுக்காலை சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது வீடொன்றின் கழிவுகள் சேகரிக்கும் பகுதியிலிருந்து வெடிக்காத நிலையில் குறித்த மோட்டார் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இம் மோட்டார் குண்டு பல வருடங்கள் பழைமையானது என கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-10)

## பெயர்ப் பலகைகளில் தமிழ்மொழி முதன்மைப்படுத்தப்பட வேண்டும்

(சாவகச்சேரி)

தமிழ்ப்பிரதேசங்களிலுள்ள சகல பெயர்ப்பலகைகளிலும் தமிழ் மொழி முதன்மைப்படுத்தப்பட வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் செ.ஜெயபாலன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரிப் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழ்மொழியானது இரண்டாம் பட்சமாக அல்லது சிறிய அளவில் காணப்படுகிறது. வடக்கு, கிழக்கின் ஆட்சி மொழியாக தமிழ் மொழி இருப்பதனால் எமது பிரதேச சபைக்கு உட்பட்ட சகல அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளிலும் தமிழ் மொழி முதன்மைப் படுத்த வேண்டும்.

தமிழ் மொழிக்கு அடுத்த படியாகவே மற்றைய மொழிகள் இடம்பெற வேண்டும் என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (5-30)

## சுகாதாரப் பணி உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கான நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

சுகாதாரப் பணி உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் முகமாக நடத்தப்படும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்ப்பட்டியல்கள் அந்தந்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் கிடைக்காதவர்கள் பட்டியல்களைப் பார்வையிட்டு தமது பெயர்கள் உள்ளமையை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

அவ்வாறு பட்டியலில் பெயர் காணப்படுமாயின் சம்பந்தப்பட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க முடியும் என வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (5)

### வாய்த் தர்க்கம்

## அயலவரின் தாக்குதலால் வயோதிபப் பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

காணிப் பிணக்கு காரணமாக வயோதிபப் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி இளவாலை சேந்தான்குளப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பி.றோஸ்மேரி (வயது-65) என்ற வயோதிபப் பெண் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, குறித்த வயோதிபப் பெண் அயல் வீட்டுத் திருமண வைபவத்திற்குச் சென்ற வேளை அயல் வீட்டில் உள்ளவர்களால் காணிக் கொள்வனவு தொடர்பாகக் கதைப்பதற்கு குறித்த வயோதிபப் பெண்ணை அழைத்தனர்.

அங்கு இடம்பெற்ற வாய்த் தகராற்றைத் தொடர்ந்து குறித்த வயோதிபப் பெண்ணை அயல் வீட்டார் கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

தாக்குதலுக்குள்ளான வயோதிபப் பெண் தலையிலும் கழுத்திலும் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-10)

## இந்து சாதனம் வெளிவந்துவிட்டது

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையின் வெளியீடான "இந்து சாதனம்" வைகாசி மாத இதழ் வெளிவந்துவிட்டது. (5)




## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாதகல்பாணாக வெட்டி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலய கண்ணகி அம்மன் வருடாந்த விசாகப் பொங்கல் விழாவை முன்னிட்டு நடத்தப்படும் சிறப்புச்சொற்பொழிவு நாளை 20 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் ஆலயப் பிரதான மண்டபத்தில், சமயஜோதி நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறும்.

இதில் "விசாகமும் பொங்கல் வழிபாடும்" என்னும் தலைப்பில் சிறப்புச்சொற்பொழிவை சிவநெறிச்செம்மல் இளம்சைவப் புலவர் ச.நவநீதன் ஆற்றுவார். (5)

## சிறப்புப் பட்டிமன்றம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை - சரவணை கர்ணன் தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணி சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தில் வைரவர் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் சிறப்புப் பட்டிமன்றம் நாளை மறுதினம் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 6.30 மணியளவில் ஆலயப் பிரதான மண்டபத்தில் சமயஜோதி நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

இதில் "இன்றைய காலத்தில் மனித முன்னேற்றத்திற்கு பெரிதும் வேண்டப்படுவது ஆலயங்களின் சமயப்பணியே" என ஆசிரியர் சமுகந்தன், ஆசிரியர் நி.பாபுதரன், ஆசிரியர் த.மனோஜ்குமார் ஆகியோரும் "ஆலயங்களின் சமூகப்பணியே" என ஆசிரியர் ச.நவநீதன், கலாசார உத்தியோகத்தர் பொன் சந்திரவேல், இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் க.கு.சுதாகரன் ஆகியோரும் வாதிடுவர். (5)

## யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட பரீட்சைகள் 22 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பித்தல் தொடர்பில் முக்கியமான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவக் கலாநிதி எஸ்.ரவிராஜ் வெளியிட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் வருமாறு.

மருத்துவ பீடத்தின் விடுதிகளில் தங்கியிருந்த சகல மாணவர்களுக்குமான விடுதி வசதிகள் நாளை மறுதினம் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்படும்.

39 ஆவது அணிக்கான முதலாவது மருத்துவ பட்ட பரீட்சைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை 21 ஆம் திகதி முதல் மருத்துவ பீடாதிபதி அலுவலகத்தில் மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

40, 41 ஆம் அணிகளுக்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் ஜூன் 10 ஆம் திகதி ஆரம்பமாகும்.

37, 38 ஆம் அணிகளுக்கான Pre-Professorial Clinical appointments மற்றும் கல்வி நடவடிக்கைகள் யாவும் 22 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறும்.

36 ஆம் அணிக்கான Professorial Clinical appointments ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஒழுங்கின் படி தொடர்ந்து நடைபெறும் என அறிவித்துள்ளார்,

இதேவேளை, மருத்துவ பீட இணை மருத்துவ விஞ்ஞான அலகின் மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானம், தாதியியல் மற்றும் மருந்தகவியல் துறைகளுக்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகும் எனவும் விடுதிகளில் தங்கியிருந்த இணை மருத்துவ விஞ்ஞான மாணவர்களுக்கான விடுதி வசதிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்படும் எனவும் மருத்துவ பீடாதிபதி மேலும் அறிவித்துள்ளார். (5-9)

## இலங்கைப் புகையிரதப் பாதுகாவலர் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)


இலங்கை புகையிரதத்திணைக்களத்தால் புகையிரத பாதுகாவலர் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட (02) திறமை சித்திகளுடன் இரு அமர்வுக்கு மேற்படாத 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல். 18 வயதுக்கு குறைடாதவர் ஆகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் போன்றன விண்ணப்பதாரர்களின் தகைமையாக இருத்தல் வேண்டும். என்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபாய் 600 ஐ தபால் நிலையத்தில் செலுத்தி பெறும் பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும் என்றும் வர்த்தமானியில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ் விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம் ஒழுங்கமைப்புத் திணைக்கள மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ. இல.1503, கொழும்பு. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு வர்த்தமானியைப் பார்க்கவும். (5-10)

# இலங்கையில் தாக்குதல்களுக்கு இலக்கான முஸ்லிம்களுக்கு நட்டஈடு வழங்குங்கள்

## தமிழ்நாடு தௌஹீத் ஜமாத் கோரிக்கை



உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களைத் தொடர்ந்து அண்மையில் முஸ்லிம் மக்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், பள்ளிவாசல்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு தௌஹீத் ஜமாத் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்நாடு தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர்கள் நேற்று முன்தினம் சென் னையிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளைச் சந்தித்து உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து தமது கவலையை வெளிப்படுத்தியதுடன், அத்தாக்குதல்களுக்கு பின்னர் முஸ்லிம் சமூகத்தை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வன்முறைத் தாக்குதல்களைத் தடுக் குமாறும் அவர்கள் கேட்டுக் கொண்டதாக இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

"தீவிரவாதம் எந்த மதத்தையும் சார்ந்ததில்லை என்பதுடன், உலகின் எந்தப் பாகத்தில் தீவிரவாத செயற்பாடுகள் இடம்பெற்றாலும் முஸ்லிம்களாகிய நாங்கள் அதனைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம்.

அத்தோடு இலங்கையில் மீண் டும் சமாதானம் திரும்ப வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றோம்" என்றும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் போதே முஸ்லிம் எதிர்ப்பு வன்முறையாளர்கள் இத்தகைய தாக்குதலை மேற்கொண்டிருக்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ள மொஹம்மட், இந்த வன்முறைகளால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (7)


# சேவை நலன் பாராட்டு

## திருமதி மோகனாம்பாள் சிவகுமார்

(B.A(Hons), PGDE, SLTS.I) Assignment Marking Examiner
Open University, Jaffna



யா/நவாலி மகா வித்தியாலயத்தில் புவியியல் பாட ஆசிரியராக கடமையாற்றி இன்று (19.05.2019) ஞாயிற்றுக்கிழமை சேவையிலிருந்து ஓய்வுபெறும் திருமதி. மோகனாம்பாள் சிவகுமார் அவர்கள் தமது ஓய்வுக் காலத்தில் எல்லா நலன்களும் பெற்று புகழோடும் மகிழ்வோடும் சிறப்புடன் வாழ உள மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்:

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/நவாலி மகா வித்தியாலயம்
(8831)


# ஷரியா பல்கலை தேவை இல்லை

## பிரதமர் ரணில் அறிவிப்பு



இலங்கைக்கு, ஷரியா பல்கலைக்கழகமொன்று தேவையில்லையென, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அலரி மாளிகையில் வைத்து, நேற்று முன்தினம் அறிவித்தார். மத்ரஸாக்கள் உள்ளிட்ட இஸ்லாமியக் கல்வி நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சட்டமூலம் தொடர்பில், தபால் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் அப்துல் ஹலீம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து, ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே, பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

# காட்டு யானை தாக்கி ஒருவர் பலி

(பதுளை)

பதுளை - கொஸ்லாந்தை பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் 9 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொஸ்லாந்தையைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார் என கொஸ்லாந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

குறித்த நபர், சந்திரபுரம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றுக்கு சென்று கொஸ்லாந்தை வனப்பகுதி ஊடான பாதையில் வீடு திரும்பியபோது, காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என்றும், சடலம் மீதான பிரேத பரிசோதனைகளுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)


Canada STUDENT VISA



உங்களின் எதிர்காலம் பிள்ளைகள்!

நாளை பற்றிய கவலையை தவிர்த்து
கனடாவில் இலகுவான முறையில்
உங்கள் பிள்ளைகளின் உயர் கல்வியினை
தொடரக்கூடிய Student Visa
ஏற்பாடுகளை விரைவில்
செய்து தருபவர்கள்.

குறைந்த கட்டணம்

WITHOUT IELTS

AVAILABLE COURSES
- Business Administration
- Computer Service Technician
- Community Service Worker
- Web Designing / Graphic Designing
- Civil Engineering Design & Technology
- International Hospitality Management etc...

Every Month Intake

VISIT VISA

பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா
சென்று வருவதற்கான Visit Visa
ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.



TOURIST VISA

தனியாகவோ, குடும்பத்தினருடனோ
கனடாவிற்கு உல்லாசமாக சென்றுவர
Tourist Visa ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.



BUSINESS VISA

உங்கள் வர்த்தகத்தினை மேலும்
பெருக்கும் நோக்கத்துடன் கனடா சென்று வர
Business Visa ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.





USA விசா



Student Visa Without IELTS
Visit Visa / Tourist Visa / Business Visa
சகலதும் செய்து தரப்படும்.

flex Institute
Step Towards a Bright Future



6A, Parakumba Place, Colombo 06.
www.flexinstitute.lk
flexinstitute04@gmail.com
Flex Institute
Hotline: 0777- 761 346



FLEX Graphic

# இறுதிப்போரில் இறந்த உயிர்களை நினைந்து ரெ


























# நெக்குருகி நின்றது முள்ளிவாய்க்கால் முற்றம்


























(படங்கள்:-டிலக்சன், பரந்தன், பனிக்கன்குளம் செய்தியாளர்கள்)





# பத்திரிகையாளர்களைத் தாக்கிய புலனாய்வு அதிகாரியை மீண்டும் பணியில் அமர்த்துவதா?

## லசந்தவின் மகள் கடும் கண்டனம்



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் காலத்தில் பத்திரிகையாளர்கள் மீதான படுகொலைகள் மற்றும் தாக்குதல்களில் ஈடுபட்டார் எனக் கருதப்படும் இலங்கை புலனாய்வுப் பிரிவு அதிகாரி பிரபாத் புலத்வத்தே மீண்டும் பணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை குறித்து படுகொலை செய்யப்பட்ட சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்சா விக்கிரமதுங்க கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இராணுவத்தில் உள்ள விசேட படையணி ஒன்றிற்குள் மேஜர் பிரபாத்புலத்வத்தே கொலைகளில் ஈடுபடும் குழுவொன்றை இயக்கிக்கொண்டிருந்தார் என சி.ஐ.டியினரே குற்றம்சாட்டியுள்ளனர். இதனை நான் இலங்கை இராணுவத் தளபதிக்கும் தெரிவித்துள்ளேன் என அகிம்சா விக்கிரமதுங்க தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் இந்த அதிகாரிக்கு எதிராக இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பல அதிகாரிகளும் பொதுமக்களும் துணிச்சலுடன் முன்வந்து ஆதாரங்களை வழங்கியுள்ளதை புலப்படுத்தியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலத்வத்தேயினை மீண்டும் முக்கிய பதவிக்கு நியமிப்பது அவரது பிழையான நடவடிக்கைகள் குறித்து குரல் கொடுத்த இராணுவ அதிகாரிகள் மற்றும் ஏனைய சாட்சியங்களுக்கு மிகவும் ஆபத்தான சூழலை ஏற்படுத்தும் எனவும் அகிம்சா தெரிவித்துள்ளார்.

புலத்வத்தே தனது அரசியல் எஜமானர்களின் அறிவுறுத்தலின் கீழ் அரசியல் நோக்கங்களுக்காக பத்திரிகையாளர்களை அச்சுறுத்திக் கொண்டிருந்த வேளை விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெல்வதற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான திறமையான புலனாய்வுப் பிரிவினருக்கு இது பிழையான செய்தியை சொல்வதாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதை சூழ்நிலையில் தனிப்பட்ட பகைகளைத் தீர்த்துக்கொள்ள முயலாத திறமையும் தொழில் சார் தன்மையும் கொண்ட புலனாய்வுத் துறையினரே இலங்கைக்கு தேவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புலத்வத்தேம் அவரது எஜமானர்களும் நியாயப்படுத்தப்படுவதையும் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு அனுமதிக்கப்படுவதையும் விரும்புபவர்களின் அச்சுறுத்தலுக்கு அடிபணிய வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# 'மூன்று குழந்தைகளின் நினைவுகள் எப்போதும் இதயத்தில் இருக்கும்'

## டென்மார்க் தம்பதி உருக்கமான அறிக்கை



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதலில், தங்களது மூன்று பிள்ளைகளையும் பறிகொடுத்த டென்மார்க்கைச் சேர்ந்த கோடீஸ்வர தம்பதியினர், உருக்கமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

டென்மார்க்கைச் சேர்ந்த கோடீஸ்வரத் தொழிலதிபரான அன்டர்ஸ் ஹோல்ச் மற்றும் அன்னி தம்பதியரின் மூன்று பிள்ளைகளான அல்மா (வயது-15), அக்னீஸ் (வயது-12) மற்றும் அல்பிரட் (வயது-5) ஆகிய மூவருமே உயிரிழந்தனர்.

இந்நிலையில், பிள்ளைகளை இழந்து தவித்துக் கொண்டிருக்கும் தங்களுக்கு, ஆறுதலான வார்த்தைகளைக் கூறி மனதைத் தேற்றியவர்களுக்கு நன்றி என்று கூறியே அந்தத் தம்பதி இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

"எங்கள் மூன்று பிள்ளைகளை இழந்த பின்னர் எங்களுக்குக் கிடைத்த இரங்கல்கள், அனுதாபங்கள் மற்றும் மனதைத் தேற்றும் வார்த்தைகளுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"எங்களுக்கு ஆறுதல் அளிக்கக் கூறப்பட்ட பல வார்த்தைகள், எங்கள் இதயத்தைத் தொட்டன. இலங்கைத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கும் எங்களின் இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். "எங்களது மூன்று குழந்தைகளின் நினைவுகள் மற்றும் எண்ணங்கள், எப்போதும் எங்கள் இதயத்தில் இருக்கும்" என்று, அந்த அறிக்கையில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)

# றிசாத்துக்கு எதிரான பிரேரணை குறித்து கட்சித் தலைவர்களுடன் பேச வேண்டிய அவசியமில்லை



(பத்தரமுல்ல)

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாட வேண்டிய எந்தவொரு அவசியமும் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

பத்தரமுல்லை நெலும் மாவத்தையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகரிடம் சமர்ப்பித்திருக்கின்றோம்.

இது விடயத்தில் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாட வேண்டிய எந்தவொரு அவசியமும் இல்லை, நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தும் தினத்தை சபாநாயகரே தீர்மானிக்க முடியும்.

எனவே அடுத்து பாராளுமன்றம் கூடும் போது நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடத்துகின்ற தினத்தை சபாநாயகர் அறிவிக்க வேண்டும் என்பதுடன், நாட்டை முறையாக நிர்வகிக்க முடியாத இந்த அரசாங்கம் பதவி விலக வேண்டும் எனவும் அவர் இதன் போது தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன்

## கோத்தபாய திட்டவட்டம்



ஜனாதிபதித் தேர்தலில் நான் நிச்சயம் போட்டியிடுவேன் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அல்- ஜசீரா தொலைக்காட்சிக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"நிச்சயமாக நான் போட்டியிடுவேன்.

நான் அதனை முடிவு செய்து விட்டேன்.

இல்லாவிட்டால், நான் அமெரிக்கக் குடியுரிமையை கைவிட வேண்டிய தேவை இல்லை" என்றும் கோத்தபாய தெரிவித்தார். (இ-7)

# மருந்துப் பொருட்களின் விலைகள் மீள அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் விலை குறைக்கப்பட்டிருந்த 60 மருந்து வகைகளின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவால் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானி அறிவித்தலிலேயே இவ்வாறு 60 மருந்து வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எல்பென்டசோல் 400 மி.கிராமின் விலை 36.04 ரூபாவாகவும் எமொக்ஸின் க்லவுஸிலிக் ஹசிட் 156 மி.கிராம் 345.35 ரூபாவாகவும், எஸ்பிரீத் 75 மி.கிராம் 3.60 ரூபாவாகவுமரையும், எஸ்பிரீத் 100 மி.கிராம் 6.37 ரூபாவாகவும், பெக்லோ மெதசோன் 100 மி.கிராம் 609.61 ரூபாவாகவும் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன.

இதேபோன்றே ஏனைய மருந்து வகைகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (இ-7)

## பாலத்தடியில் மீன் விற்ற போது

# மின்னல் தாக்கி சிறுவன் பலி!

(திருக்கோவில்)

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் மின்னல் தாக்கி காஞ்சிரம்குடா ஸ்ரீவள்ளிபுரம் கிராமத்தைச் சேர்ந்த 15 வயது சிறுவன் ஒருவன் பலியாகியுள்ளதுடன் பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக மரங்கள் முறிந்து விழுந்து பல வீடுகளும் சேதமடைந்துள்ளன.

திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பலத்த காற்றுடன் மழை பெய்ததுடன் மின்னல் தாக்கமும் அதிகமாகக் காணப்பட்டது.

இந்நிலையில் காஞ்சிரம்குடா பாலத்தடியில் மீன் விற்றுக் கொண்டிருந்த ஸ்ரீவள்ளிபுரம் கிராமத்தைச் சேர்ந்த 15 வயதுடைய ராஜகுமார் எனும் சிறுவன் மின்னல் தாக்கி மரணமடைந்துள்ளான்.

இதேவேளை விநாயகபுரம், காஞ்சிரம்குடா ஆகிய கிராமங்களில் பலத்த காற்று காரணமாகப் பல வீடுகளின் கூரைகளும் சேதமடைந்துள்ளன.

குறித்த சிறுவனின் சடலம் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 110 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 120 | 120 |
| தக்காளி | 100 | 120 | 140 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 250 | 150 | 140 |
| கோவா | 120 | 100 | 100 | 90 |
| கரட் | 100 | 90 | 120 | 80 |
| பூசணி | 80 | 50 | 60 | 40 |
| புடோல் | 100 | 120 | 100 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 65 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 120 | 130 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 70 |
| பாகற்காய் | 150 | 200 | 240 | 180 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 60 | 50 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 80 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 80 |
| பீற்றூட் | 150 | 80 | 120 | 90 |
| கறிமிளகாய் | 150 | 100 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 140 | 80 | 60 | 50 |
| போஞ்சி | 250 | 200 | 240 | 240 |
| கத்தரிப்பிஞ்சு/பூசணிப்பிஞ்சு | 80 | 60 | – | 100 |
| கீரை-1பிடி | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 350 | 350 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 45 | 30 | 35 |
| இராசவள்ளி | 180 | 180 | 150 | 110 |
| வெங்காயப்பூ | 220 | 220 | 240 | 240 |
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 35 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | – | 100 | 60 | 100 |

# சமூக வலைத்தளங்கள் மூலமே சர்வதேச பயங்கரவாதம் புத்துயிர்

## அமைச்சர் சம்பிக்க சுட்டிக்காட்டு

(அம்பாந்தோட்டை)

பயங்கரவாதத்தையும், அடிப்படைவாதத்தையும் பூண்டோடு அழிக்க புதிய சட்டங்களை உருவாக்குவதையே பாராளுமன்றத்தின் ஊடாக நாம் செய்ய வேண்டிய முதல் பணியாகவுள்ளதென மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமூக வலைத்தளங்கள் ஊடாகவே சர்வதேசப் பயங்கரவாதம் புத்துயிர் பெற்றுவருவதாக தெரிவித்த அவர், அரபு மொழியையும், அரபு கலாசாரங்களையும் இங்கு கொண்டு வர சில முஸ்லிம் தரப்பினர் கடந்த இரண்டு தசாப்தகாலமாக முற்பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத்தை ஒழிப்பதென்பது பாதுகாப்புத்துறையினரால் மாத்திரம் தீர்வுகாணும் விடயமல்ல. இதில் சட்ட ரீதியான, சமூக ரீதியான, அரசியல் ரீதியான பக்கங்கள் உள்ளன. சர்வதேசப் பயங்கரவாதம் உயிர்பெறுவது சமூக வலைத்தளங்களிலாகும். முகநூல் அல்லது ஏனைய சமூக வலைத்தளங்களில் உள்ள உபாயமார்க்கங்களின் ஊடாகத்தான் சர்வதேச பயங்கரவாதம் தலைதூக்கி வருகிறது.

ஆகவே, எமக்கு புதிய சட்டங்கள் அவசியம். சர்வதேச பயங்கரவாதத்தையும், அடிப்படைவாதத்தையும் ஒழிக்கும் புதிய சட்டங்களை உருவாக்குவதுதான் பாராளுமன்றத்தின் ஊடாக நாம் செய்ய வேண்டிய முதல் பணியாகவுள்ளது. கட்சி பேதங்கள் கடந்து நாம் அனைவரும் இதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அதேபோன்று எமது நாட்டில் வாழும் முஸ்லிம்களுக்கும் பாரிய பொறுப்பொன்றுள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களாக இலங்கையின் கலாசாரம் மற்றும் தனித்துவத்தை பேணுவதற்குப்பதிலாக அரபு கலாசாரத்தையும், அரபு தனித்துவத்தையுமே இந் நாட்டில் உருவாக்க சிலர் முயற்சிக்கின்றனர்.

சிங்களம், தமிழ் மொழியை கற்றுக்கொள்வதற்குப் பதிலாக அரபு மொழியை கற்றுக்கொள்கின்றனர்.

அதே போன்று அராபிய உடைகளையும், கலாசார நிகழ்வுகளையும் இங்கு கொண்டு வருகின்றனர் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# ஐ.எஸ்.பயங்கரவாதிகளுக்கு எதிராக புத்தளத்தில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்






(புத்தளம்)

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து புத்தளம் முஸ்லிம்கள் பெரும் ஊர்வலமொன்றை நேற்று முன்தினம் நடத்தியுள்ளனர்.


ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் வீதியில் பதாகைகளுடன் வலம்வந்து, பின்னர் புத்தளம் கடல்ஓரப் பகுதியில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் அழிந்து போகட்டும் என பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

புத்தளம் நகரபிதா கே.ஏ. பாயிஸ் மற்றும் புத்தளம் பிரதான முஸ்லிம் பள்ளிவாசல் உட்பட பல பள்ளிவாசல்களையும் சேர்ந்த ஜமா அத்தாரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஜும்ஆ தொழுகையின் பின்னர் நடைபவனியாக வந்த முஸ்லிம்கள் கரையோரப் பகுதியில் சுமார் 2 மணி நேரம் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 30 வருடங்களாக யுத்தத்தால் அவதியுற்ற இந்த நாட்டு மக்களை மீண்டும் அந்த அழிவை நோக்கித் திருப்ப நடவடிக்கை எடுத்துள்ள இந்த ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு சாபம் உண்டாவதாக என அனைத்து முஸ்லிம்களும் கூடிநின்று குரல் எழுப்பினர். (இ-7)

# இலங்கை ரயில்வே வரலாற்றில் முப்பது வருடங்களின் பின் புரட்சி



(கொழும்பு)

இலங்கை ரயில்வே வரலாற்றில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் விதத்தில் முப்பது வருடங்களுக்குப் பின்னர் பத்து கொள்கலன் கேரியர் வேகன்கள் கொழும்பு துறைமுகத்தில் வந்திறங்கின.

தற்போது இலங்கை ரயில்வே திணைக்களம் 25 கொள்கலன் கேரியர் வேகன்களை சொந்தமாக வைத்துள்ளன. போக்குவரத்து மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு இந்திய கடன் திட்டத்தின் கீழ், 20 கொள்கலன் கேரியர் வேகன்களை இறக்குமதி செய்யத் திட்டமிட்டிருந்தன.

இந்நிலையில், அதன் முதலாவது 10 கொள்கலன் கேரியர் வேகன்கள் கொழும்பு துறைமுகத்தில் வந்திறங்கின.

கொள்கலன் கேரியர் வேகன்கள் MIIKE PANAMA என்ற கப்பல் மூலமே இலங்கைக்கு இவை கொண்டுவரப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படும் மொத்த கொள்கலன் கேரியர் வேகன்களை 30 ஆகும்.

அதில் எரிபொருள் கேரியரில் ஒன்றின் விலை சுமார் 15.2 மில்லியன் ரூபாயாகும். ஒரு கேரியரிலில் 45,000 லீற்றர் எரிபொருள் (10,000 கலன்கள்) எடுத்துச்செல்ல முடியும். (இ-7)

# மலையகத்தில் வெசாக்





(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று வெசாக் தின கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. இந்நிலையில் நாடளாவிய ரீதியில் காணப்படும் பௌத்த வணக்கஸ்தலங்களில் விஷேட வழிபாடுகள் நடைபெற்றன.

இதேவேளை மலையகத்தின் பல பாகங்களிலும் வெசாக் தினக் கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்றன.

அந்த வகையில் ஹற்றன், கொட்டகலை, தலவாக்கலை, மஸ்கெலியா, பொகவந்தலாவ, அக்கரப்பத்தனை, நுவரெலியா ஆகிய பகுதிகளிலும் வெசாக் தினக்கொண்டாட்டங்கள் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்வின் போது இன, மத, பேதமின்றி கிராம மக்கள் தோட்டப்புற மக்கள், பொலிஸ் அதிகாரிகள், முஸ்லிம், இந்து மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# வன்முறைகளில் ஈடுபட்டவர்களை கைதுசெய்து சட்டத்தை நிலைநாட்டுக

## ஆளுநர் அசாத் சாலி வலியுறுத்து

(கொழும்பு)

வன்முறைகளில் ஈடுபட்டவர்களை கைதுசெய்து சட்டத்தை கடுமையாக நிலைநாட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்த மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி, அதன் மூலமே எதிர்காலத்தில் இவ்வாறான வன்முறைகள் இடம்பெறுவதை தடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

மினுவாங்கொடை பிரதேசத்தில் வன்முறையாளர்களால் தாக்குதலுக்குள்ளான இடங்களை பார்வையிடச்சென்ற ஆளுநர், தாக்கப்பட்ட ஜும்ஆ பள்ளிவாசலின் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்காக மேல்மாகாண சபையின் சார்பாக 1.5 மில்லியன் ரூபாவுக்கான காசோலையை பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் நேற்று முன்தினம் கையளித்த பின்னர் ஊடகங்களை சந்தித்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் முஸ்லிம் சமூகத்தில் பெரும்பாலானவர்கள் தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரானவர்கள். இருந்தபோதும் பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெற்று மூன்று வாரங்களின் பின்னர் முஸ்லிம் மக்களுக்கு எதிராக திட்டமிட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (இ-7)



# மே 18-இன அழிப்புக்கு எதிரான தமிழ்த் தேச எழுச்சி நாள்

## முள்ளிவாய்க்காலில் நேற்றுப் பிரகடனம்

(மனிக்கன்குளம்)

**அந்திய மீட்பர்களை விடுத்து மக்கள் சக்தியில் நம்பிக்கை வைத்து, நினைவு கூரலை சமூக இயக்கமாக மாற்றி சபதம் செய்வோம் என முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 10 ஆம் ஆண்டு நினைவு தினமான நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பினால் (வடக்கு- கிழக்கு) வெளியிடப்பட்ட பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

குறித்த பிரகடனத்தில் தமிழர்களுக்கு எதிராக சிங்கள-பௌத்த இலங்கை பேரினவாத அரசு வரலாற்றில் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து, கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை கட்டம் கட்டமாக அரங்கேற்றி வந்துள்ளது. இவ் இனப்படுகொலை முள்ளிவாய்க்காலில் அதி உச்சத்தை அடைந்து இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட எமது இரத்த உறவுகளை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம். கொல்லப்பட்ட எமது உறவுகளின் கனவுகளை நினைக்கின்றோம். முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தின் ஒருதசாப்தத்தை நினைவுகூரும் ஒட்டுமொத்த தமிழினம் அவலங்களை மட்டும் நினைவு கூரவில்லை. சிங்கள—பௌத்த இலங்கை பேரினவாத அரசின் அடக்குமுறைக்கெதிராக தமிழினம் வெகுண்டெழுந்த வரலாற்றையும் அவற்றின் வெவ்வேறு வடிவங்களையும், கூட்டு உரிமைக்கான தியாகத்தையும் நினைவு கூருவது எம் ஒவ்வொருவரதும் வரலாற்றுக்கடமை.

தமிழர் உரிமைக்கான போராட்டத்தை இலங்கை அரசு பயங்கரவாத முத்திரை குத்தி அதன் நியாயத்தன்மையை கேள்விக்குட்படுத்தி வந்துள்ளது. சர்வதேசமயப்படுத்தப்பட்ட பயங்கரவாத பிரசாரத்தினூடு ஆயுதப் போராட்ட வடிவம் மௌனிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் ஆயுத மௌனிப்பின் பின் தமிழர் போராட்ட வடிவங்கள் வெவ்வேறு வழிகளில் முன்னெடுக்கப்பட்டன. பின் முள்ளிவாய்க்கால் தசாப்தத்தில் வரலாற்றில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான நீதிவேண்டிய கோரிக்கை வலுப்பெற்றது. தமிழர்கள் ஓர் இன அடையாளத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக கொல்லப்பட்டார்கள், சித்திரவதை செய்யப்பட்டார்கள், வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டார்கள், வன்புணரப்பட்டார்கள்.

பூர்வீகவாழ்விடங்களிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டார்கள். தமிழர்கள் வந்தேறு குடிகளாக சித்திரிக்கப்பட்டு இலங்கை சிங்கள-பௌத்ததேசம். அதுசிங்கள-பௌத்தர்களுக்கு மட்டும் சொந்தமானது என காலனித்துவத்தில் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் இலங்கை அரசு நவ காலனித்துவத்தை கட்டமைத்தது. இது தமிழினத்தின் ஒட்டுமொத்த இருப்பை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

தமிழினத்தின் மீது நடந்தேறும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை ஐ.நாவும் சர்வதேச சமூகமும் வெறுமனே அவதானித்துக் கொண்டிருப்பது கவலைக்குரியதானது.

பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக் கான நீதி வேண்டி தமிழர்கள் ஒரு தசாப்த காலமாக ஐ.நாவின், சர்வதேச சமூகத்தின் உதவியை நாடியுள்ளார்கள். நடந்தேறிய அநீதிகளையும், உரிமைமீறல்களையும் விசாரிப்பதற்கான சர்வதேச நீதி விசாரணை இன்னும் ஆரம்பித்ததாகத் தெரியவில்லை.

இலங்கை அரசு பின் முள்ளிவாய்க்கால் வரலாற்றுத் தளத்தில் தமிழர் தாயகமான வடக்கு- கிழக்கில் சிங்கள-பௌத்தமயமாக்கத்தையும், இராணுவமயமாக்கத்தையும் விஸ்தரித்து இராணுவ இருப்பை நியாயப்படுத்தி தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தமிழர்களின் பூர்வீகநிலங்கள் படைத்தரப்பாலும், மகாவலி அபிவிருத்தித் திட்டத்தாலும், தொல்லியல், வனவளத் திணைக்களங்களாலும் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழர் மத்தியில் இலங்கை அரசு பயத்தை தக்கவைத்துக் கொண்டு உளவியல் யுத்தம் செய்து கொண்டிருக்கின்றது. ஆயுதம் மௌனிக்கப்பட்டு ஒரு தசாப்தமாகியும் கைதுகளும், எச்சரிக்கைகளும், மிரட்டல்களும் தொடர்ந்தவண்ணமுள்ளன. பேச்சுரிமைக்கான வெளி நசுக்கப்பட்டுள்ளது.

ஒரு தேசத்தின் கலை-கலாசார பண்பாட்டு விழுமியங்களை பேணிப்பாதுகாப்பதற்கு அடிப்படையான பூரண அரசியல் சுதந்திரத்தை அனுபவிப்பதென்பது எல்லா தேசங்களினதும் விட்டுக் கொடுக்கவே முடியாத அடிப்படை உரிமையாகும். சமூக கட்டுமானத்தின் அனைத்து அடிப்படை அம்சங்களிலும் சிங்கள தேசத்தில் இருந்தும் தனித்துவமாக வேறுபடுத்திப் பார்க்கக் கூடிய தனிசிறப்பியல்பான அம்சங்களைக் கொண்டிருப்பதன் மூலம் இலங்கைத்தீவில் தமிழர்கள் ஒரு தேசமாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

சிங்களவருக்கு இருப்பது போன்று அதைவிட தொன்மையானதும் செழிப்பானதுமான வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டிருப்பதனாலும், சிங்களமொழியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட மிகத் தொன்மையான மொழிப்பாரம்பரியத்தைக் கொண்டிருப்பதோடு காலத்திற்கேற்ற நவீன மாற்றங்களை தன்னகத்தே உள்ளீர்த்து தனித்துவமான மொழியைக் கொண்டிருப்பதாலும், இலங்கைத்தீவில் வடகிழக்கு பகுதியை தமிழ் தாயகமாகக் கொண்டு வரலாற்றுப்பூர்வகுடிகளாக வாழ்வதாலும், சிங்கள அரசானது திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு மூலம் இலங்கைத்தீவில் தமிழர்களின் இருப்பை அழிப்பதற்கான எத்தனங்களில் தொடர்ந்தும் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் ஒருதசாப்தம் நிறைவடைந்தும் நினைவுகூருவதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. நினைவுகூருவது பாதிக்கப்பட்ட மக்களின் உரிமை. நினைவு கூருவதற்கான உரிமை மறுக்கப்படுவது உண்மையை மறுப்பதும் மறைப்பதுமாகும். இலங்கை அரசு மறுப்புவாதத்தை நிறுவனமயப்படுத்தி உண்மைகளை வரலாற்றில் மறுத்து வந்துள்ளது. சாட்சியங்களை பொய்யர்களாக்கி அவர்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குட்படுத்துகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின், கையளிக்கப்பட்டவர்களின் விசாரணைகிடப்பில் போடப்பட்டுள்ளது. குற்றவாளிகள் தொடர்ந்தும் வெற்றி வீரர்களாக உலாவருகின்றனர்.

பின் முள்ளிவாய்க்கால் வரலாற்றுத் தசாப்தத்தில் ஒன்று கூடியுள்ள தமிழ் மக்களாகிய நாங்கள் நினைவுகூரலை அணிதிரட்டலாக மாற்ற வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளோம். அந்நிய மீட்பர்களை விடுத்து மக்கள் சக்தியில் நம்பிக்கை வைத்து, நினைவுகூரலை சமூக இயக்கமாக மாற்றி சபதம் செய்வோம். எங்கள் உறவுகளின் கல்லறைகளின் மீது சத்தியம் செய்வோம்.

முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலைக்கு சர்வதேச நீதிவேண்டி இனப்படுகொலையாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த, தமிழர்கள் ஒரு தேச அங்கீகாரத்திற்குரியவர்கள் என்பதையும் தமிழர்களின் தனித்துவமான இறையாண்மையினதும் ஒருபோதும் பாரதீனப்படுத்தப்பட முடியாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் தமிழர்களின் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும் என்பதையும் தமிழர்கள் சார்பில் கோர, தமிழர் இன அடையாள இருப்பின் மீது கட்டவிழ்க்கப்பட்டுள்ள இனப்படுகொலையைத் தடுக்க, தமிழர் சமூக அமைப்புக்களை பலப்படுத்தி விருதலைக்காக முனைப்புடன் உழைப்பதற்கு மக்கள் பலத்தை நம்பி நினைவு கூரலை போராட்ட வடிவமாக, சமூக இயக்கமாக மாற்ற வேண்டிய சூழலுக்குள் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது. அடக்குமுறைக்குள் வாழும் சமூகத்திற்கு நினைவுகூரல் ஒரு போராட்ட வடிவமே.

தமிழ்த் தேசிய நினைவுத்திறம் அடக்கு முறைக்கெதிரான ஊடகம் என்பதை நினைவிற்கொண்டு உறுதி பூணுவோம் தமிழர் உரிமையை வென்றெடுப்பதற்கான பயணத்தில் இணைவோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (9-281)

---

## இரு துருவங்களாக ஜனாதிபதியும் பிரதமரும்

# இலங்கையில் அரசியல் ஸ்திரமற்ற நிலை-ராதா



(ஹற்றன்)

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு காரணமாக இருவரும் இரு துருவங்களாக செயற்படும் நிலையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது என அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டதன் பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் இடையிலான இந்த நிலைமையின் காரணமாக இலங்கையில் அரசியல் ஸ்திரமற்ற தன்மை ஏற்பட்டுள்ளதாகவும் இராதாகிருஷ்ணன் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)



தமிழ் மக்களின் உரிமைப் போர் மௌனிக்கப்பட்டு பெரும் மனித பேரவலம் நடந்தேறிய முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 10 ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்று நந்திக்கடலில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் லோகேஸ்வரன் ஆகியோர் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

(படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

யாமிருக்க பயம் வேண்டாம். பக்தனே உன்னை ஒருபோதும் கைவிடமாட்டேன். ஐயம் வேண்டாம்.

வலம்புரி

T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மாகாண சபைத் தேர்தலை நடத்தாவிடின் அது அரசாங்கத்திற்கு சாதகமாக அமையும்

## டளஸ் அழகப்பெரும சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாது என்ற சூழ்நிலைகளே தற்போது காணப்படுகின்றது என்று மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாகாண சபை தேர்தல் நடத்தாவிடின் அது அரசாங்கத்திற்கு சாதகமாக அமையும். ஆனால் மக்களின் ஜனநாயக உரிமை பகிரங்கமாக மீறப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அடிப்படைவாதிகளின் தாக்குதலை தொடர்ந்து மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலான பேச்சுக்கள் அனைத்தும் முடக்கப்பட்டு விட்டன என அவர் தெரிவித்தார்.

இவ்வருடத்தின் இறுதி பகுதியில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபை தேர்தல் இடம் பெறாது என்று அரசாங்கம் உறுதியாக குறிப்பிட்டது.

ஆளும்தரப்பினரது உறுதிப்பாடு இன்று உண்மையாகி விட்டது. குண்டு தாக்குதலை தொடர்ந்து நாட்டின் அனைத்து துறைகளிலும் அதிக கேள்வி நிலையே ஏற்பட்டன.

மக்களின் அன்றாட செயற்பாடுகளுக்கும் நெருக்கடி நிலை ஏற்பட்டது. தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டுமாயின் பாதுகாப்பு தரப்பினர் முன்னெடுக்கும் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான தகைமைகள் அரசாங்கத்திடம் கிடையாது. தேர்தலின் பெறுபேறுகளை முன்கூட்டியே யூகித்துக் கொண்டமையினால் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டது.

எதிர்க்கட்சியினர் அரசாங்கத்திற்கு தொடர்ந்து பிரயோகித்த அழுத்தத்தின் காரணமாக மாகாண சபை தேர்தல் தொடர்பில் சில முன்னேற்றகரமான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் கடந்த மாதம் 21 ஆம் திகதி குண்டு தாக்குதலை தொடர்ந்து அவையும் மறைக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்துவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இச்சந்தர்ப்பங்களை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளாமல் தேவையற்ற காரணிகளை முன்வைத்தது.

2015ஆம் ஆண்டுக்கு பிறகு மக்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கியுள்ளோம் என்று பெருமிதம் கொள்ளும் அரசாங்கம், மக்களின் அடிப்படை தேர்தல் உரிமை தொடர்பில் கவனத்தில் கொள்ளவில்லை.

தமது அரசியல் தேவைகளுக்காக மக்களின் ஜனநாயக உரிமைகள் பகிரங்கமாகவே மீறப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தமிழர்களுக்கான பொறுப்புக்கூறலை இலங்கை உறுதிப்படுத்த வேண்டும்

## பிரித்தானிய தொழிற்கட்சி தலைவர் ஜெரமி கோர்பின் வலியுறுத்தல்

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை தமிழர்களுக்கான பொறுப்புக்கூறலை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டுமென பிரித்தானியாவின் பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சி வலியுறுத்தியுள்ளது. அத்தோடு, அடுத்த தொழிற்கட்சி அரசாங்கம், இலங்கைவாழ் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்த முன்னின்று செயற்படும் என்று அதன் தலைவர் ஜெரமி கோர்பின் குறிப்பிட்டுள்ளார்.

இறுதி யுத்தத்தின்போது கொல்லப்பட்ட தமிழ் மக்களின் நினைவாய் அனுஷ்டிக்கப்படும் முள்ளிவாய்க்கால் நினைவுதினம் நேற்றாகும். அதனை முன்னிட்டு தொழிற்கட்சி தலைவர் விடுத்துள்ள செய்தியில் இவ்விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் இடம்பெறும் இச்சந்தர்ப்பம் மிகவும் துன்பகரமானதென குறிப்பிட்டுள்ள ஜெரமி கோர்பின், 10 வருடங்களாகியும் நீதி கிடைக்காமை குறித்து வருத்தம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெறும் வன்முறைகள் மற்றும் அடக்குமுறைகளுக்கு முடிவுகட்ட வேண்டும் என்றும் அரசியல் தீர்வும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரமுமே நீடித்த நிலைத்த சமாதானத்திற்கு வழிவகுக்கும் என சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் இன்னும் இலங்கையில் தொடர்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதென ஜெரமி கோர்பின் சுட்டிக் காட்டியுள்ளார்.

இற்றைக்கு 10 வருடங்களுக்கு முன்னர் தமது சொந்தங்களை பறிகொடுத்த மக்களுக்கு ஆறுதல் தெரிவிக்கும் அதேவேளை, தொழிற்கட்சியின் ஆட்சியில் இலங்கை மக்களுக்கான சுயநிர்ணய உரிமை மற்றும் நீதியை பெற்றுக் கொடுக்க இலங்கை மீது இராஜதந்திர ரீதியிலான அழுத்தம் பிரயோகிக்கப்படும் என தொழிற்கட்சியின் தலைவர் ஜெரமி கோர்பின் மேலும் தெரிவித்துள்ளார். (ம-10)

# சர்வகட்சிகள் கூட்டத்துக்கு பிரதமர் ரணில் அழைப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சர்வகட்சிகள் கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் 22ஆம் திகதி மாலை 3 மணிக்கு பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதன்போது நாட்டின் தற்போதைய நிலைவரம், எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களை, சபாநாயகர் கரு ஜயசூரிய எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சந்திக்கவுள்ளார்.

அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்குட்படுத்தும் திகதி தொடர்பாக முடிவெடுக்கும் நோக்கிலேயே இந்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

66 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன், 10 குற்றச்சாட்டுகளுடன் அமைச்சர் ரிஷாத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனவே, இனி விவாதத்துக்கு உட்படுத்த வேண்டிய திகதியை தான் நிர்ணயிக்க வேண்டியுள்ளது. செவ்வாயன்று இது குறித்து விரிவாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-3)

# ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் எப்பாகத்திலும் பதிவு செய்யப்பட்ட பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளைப் பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.45 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலாளர், வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் மற்றும் பதிவாளர் நாயகத் திணைக்களத் தலைமைப் பீட உதவிப் பதிவாளர் நாயகம் ஆகியோர் கலந்து கொள்வர் என பிரதேச செயலர் எஸ்.சுதர்சன் அறிவித்துள்ளார். (இ-7)

# ஆனையிறவில் இருவர் கைது

துப்பாக்கி ரவைகள் வைத்திருந்த இருவர் கிளிநொச்சி ஆனையிறவு சோதனை சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனையிறவுப் பகுதியில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து பயணிகளை சோதனை செய்த போது, ரவைகளை உடமையில் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

# நல்லூர் முருகனுக்கு தீங்கிழைக்க யார் உளர்!

நல்லூர் முருகன் ஆலயத்துக்குக் குண்டு வைக்கப்படுமென்ற அநாமதேய தகவலையடுத்து நல்லூர் முருகனுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

வழிபாட்டுத் தலங்கள், பொதுமக்கள் கூடும் இடங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றுக்கான பாதுகாப்பு முக்கியமானது என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆனால் நம்மைப் பொறுத்தவரை நல்லூர் முருகனுக்குப் பாதுகாப்பு எனும்போது அதனை ஏற்க முடியாமல் இருப்பதுதான் உண்மை.

ஆம், போர் நடந்த காலமெல்லாம் எங்களைப் பாதுகாத்தவன் நல்லூர் முருகன். இந்திய அமைதிப்படை அமளிப் படையாக மாறி தமிழ் மக்களை நோக்கி குண்டு வீசியபோது, தன் ஆலயத்தில் அடைக்கலம் கொடுத்து உயிர் காத்தவன் நல்லூர் முருகன்.

அதனாலன்றோ, **பஞ்சம் பசி வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி** என்று நல்லூர் கந்தப் பெருமானைத் தவத்திரு யோகர் சுவாமிகள் முன்னமே பாடிப் பரவினார்.

உலகம் வாழ் தமிழ் மக்கள் மட்டுமன்றி, ஏனைய இனம், மதம் சார்ந்த மக்களும் நல்லூர் முருகன் மீது அளவு கடந்த அன்பும் பக்தியும் கொண்டுள்ளனர்.

இதற்குக் காரணம் அவன் சூர்பகை அழித்து மக்களைக் காப்பவன். எங்களுக்கான பாதுகாப்புப் படைக்கலமே நல்லூர் முருகன் என்ற நாமம்தான்.

அவனே தமிழர்களின் தனிப் பெருந்தலைவன்.

நல்லூர் இராசதானியில் இருந்து ஆட்சி செய்கின்ற நல்லூர் முருகன் எந்த இன மக்களையும் விலத்தி வைத்தவன் அல்ல.

அதனால்தான் நாள்முழுவதும் நல்லூர் முகனை நோக்கி பௌத்த, கத்தோலிக்க, இஸ்லாமிய மக்கள் வந்த வண்ணமுள்ளனர்.

இதுதான் என்றால், இல்லை இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களும் நல்லூர் முருகனைக் கண்டுவிட வேண்டுமென ஓடோடி வருகின்றனர்.

மேலாடை களைந்து முருகனின் ஆலயத்துக்குள் நுழைகின்ற வெள்ளைக்காரர்கள் முருகனைப் பார்த்து பரவச நிலையில் இருப்பதைக் காணும்போது, நல்லூரின் முன்னைய நினைவுகள் ஞாபகத்துக்கு வருவதுபோல வெள்ளைக்காரர்களின் திகைப்பு சொல்லி நிற்கும்.

ஆக, நல்லூர் முருகன் ஆலயத்தைத் தாக்குதல் என்பது ஒருபோதும் நடக்க முடியாத காரியம். எம்மைப் பொறுத்தவரை நல்லூர் முருகனுடன் எவரும் சேட்டை விட முடியாது. விடவும் மாட்டார்கள்.


வேண்டுமாயின் நல்லூர் முருகனுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள். அந்தப் பாதுகாப்பு; நல்லூர் முருகனுக்குத் தீங்கு செய்வோம் என்று யாரேனும் நினைத்திருந்தால், அவர்களைப் பாதுகாப்பதற்கானதாக இருக்கும்.

ஆம், எவரையும் வாழ வைக்கும் நல்லூர் முருகன் தனக்குத் தீங்கு நினைப்போரையும் காப்பவன்.

ஆகையால் நல்லூர் முருகனுக்கான பாதுகாப்பு என்பது ஒரு நாட்டின் பாதுகாப்பு நடைமுறை சார்ந்தது.

மற்றும்படி நல்லூர் முருகனுக்கு; அவன் ஆலயத்துக்குத் தீங்கு செய்ய யாராலும் முடியாது. இது நாம் வணங்கும் நல்லூர்க் கந்தன் மீது ஆணை.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- தாய் தந்தையரும், நெருங்கிய உறவினரும் விட்டுச் சென்ற சொத்தில் பெண்களுக்கும் பங்கு உண்டு. அச்சொத்து குறைவாகவோ, அதிகமாகவோ இருந்தாலும் சரியே...! இந்தப் பங்கு இறைவனால் நிர்ணயிக்கப்பட்டதாகும்.
- தங்கள் மனைவியரை நெருங்குவதில்லையென்று சபதம் செய்து விலகியிருப்பவர்களுக்கு நான்கு மாதத் தவணையுண்டு. அதற்குள் (தங்கள் மனைவியரிடம்) அவர்கள் திரும்பி விட்டால் நிச்சயமாக இறைவன் மன்னிப்போனும், கருணையுடையோனுமாயிருக் கிறான.
- நீங்கள் அவர்களுடைய செயல்களைச் சகித்து புறக்கணித்து விடுவீர்களானால், மேலும் மன்னிப்பீர்களானால் திண்ணமாக இறைவன் பெரும் மன்னிப்பாளனாகவும், கருணையளிப்பவனாகவும் இருக்கின்றான்.
- அவர்களோடு நல்ல முறையில் வாழ்க்கை நடத்துங்கள். அவர்களுடன் சேர்ந்து வாழ விரும்பாவிட்டாலும், பொறுமையைக் கைக்கொள்ளுங்கள். ஏனெனில் ஒரு விஷயம் உங்களுக்குப் பிடிக்காமல் போகலாம். ஆனால், இறைவன் அதில் அநேக நன்மைகளை வைத்திருக்கக்கூடும். (வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து)

# உலகக் கோப்பை- 2019 அசத்தப்போகும் வேகப்புயல்கள்



இங்கிலாந்தில் நடைபெற உள்ள உலகக்கோப்பை ஒரு நாள் தொடரில் அதிக ஓட்டங்கள் குவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதால், வேகப்பந்து வீச்சாளர்களுக்கு பெரும் சவால் காத்திருக்கிறது. இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலகக்கோப்பை தொடரிலும் அதிகளவில் ஓட்டங்கள் விளாசப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் அங்கு நிலவும் காலநிலை, உலர்ந்த ஆடுகளங்கள் உள்ளிட்ட காரணிகள் ஆகும்.

இந்நிலையில் இலங்கை அணியின் மலிங்க, இந்திய அணியின் பும்ரா, அவுஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க், நியூசிலாந்தின் போல்ட், பாகிஸ்தானின் ஹசன் அலி எப்படி இந்த சவாலை எதிர்கொள்வார்கள் என்கிற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

**லசித் மலிங்க (இலங்கை)**

இலங்கை அணிக்கு மிகப்பெரிய பலமாக வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க உள்ளார். அனுபவ வீரரான அவர், 218 போட்டிகளில் 322 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். இவரது சிறந்த பந்துவீச்சு 6/38 ஆகும். மேலும் ஒரே போட்டியில் 5 விக்கெட்டுகளை 8 முறை வீழ்த்தியுள்ளார்.

சமீபத்தில் நடந்த ஐ.பி.எல் இறுதிப்போட்டியில் கடைசி பந்தை சிறப்பாக வீசி தனது அணியை வெற்றி பெற வைத்தார் மலிங்க. எனவே அதேபோல் ஒரு மாயாஜாலத்தை உலகக்கோப்பையிலும் நிகழ்த்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஜஸ்பிரித் பும்ரா (இந்தியா)**

உலகக்கோப்பை தொடரில் இந்திய அணியின் துருப்பு சீட்டாக பும்ரா இருப்பார் என்று கூறப்படுகிறது. இறுதிக்கட்ட ஓவர்களில் பும்ரா சிறப்பாக பந்துவீசக் கூடியவர். சமீபத்தில் முடிவடைந்த ஐ.பி.எல் தொடரில் 19 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்திய பும்ரா, இதுவரை 49 ஒருநாள் போட்டியில் 85 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அவரது சிறந்த பந்துவீச்சு 5/27 ஆகும்.

**மிட்செல் ஸ்டார்க் (அவுஸ்திரேலியா)**

இடக்கை பந்துவீச்சாளரான மிட்செல் ஸ்டார்க், கடந்த முறை அவுஸ்திரேலியா தனது சொந்த மண்ணில் சம்பியன் பட்டத்தை வென்றதில் முக்கிய பங்கு வகித்தார். அவர் 22 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தார். ஆனால், அதன் 4 ஆண்டுகளில் அதிக முறை காயங்களால் அவதிக்குள்ளானார்.

இதனால் தனது சீரான வேகத்தை இழந்த அவர், துடுப்பாட்ட வீரர்களை மிரட்டக்கூடிய வகையிலான திறனையும் இழந்தார். எனினும் இந்த உலகக் கோப்பையில் அவர் சிறப்பாக செயற்படுவார் என்று அவுஸ்திரேலிய அணி நிர்வாகம் நம்பிக்கை வைத்துள்ளது.

இதுவரை 75 போட்டிகளில் விளையாடியுள்ள ஸ்டார்க், 145 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அவரது சிறந்த பந்துவீச்சு 6/28 ஆகும்.

**டிரெண்ட் போல்ட் (நியூசிலாந்து)**

நியூசிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான டிரெண்ட் போல்ட், கடந்த உலகக் கோப்பையில் 22 விக்கெட்டுகளை கைப்பற்றி அசத்தியவர். சமீபத்தில் பார்மில் இல்லாததால், ஐ.பி.எல் தொடரிலும் அவருக்கு போதுமான வாய்ப்பு கிடைக்கவில்லை. எனினும் உலகக்கோப்பை தொடரில் மீண்டும் பார்முக்கு திரும்பி வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை 79 போட்டிகளில் 147 விக்கெட்டுகளை போல்ட் வீழ்த்தியுள்ளார். அவரது சிறந்த பந்துவீச்சு 7/34 ஆகும்.

**காகிசோ ரபாடா (தென் ஆபிரிக்கா)**

ஐ.சி.சி தரவரிசையில் 5வது இடம் வகிக்கும் ரபாடா, தென் ஆபிரிக்க அணியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர் எந்தவிதமான ஆடுகளத்திலும், ஆட்டத்தின் எந்த தருணத்திலும் விக்கெட் வீழ்த்தும் திறன் கொண்டவர். சீரான வேகத்துடன் பந்தை ஸ்விங் செய்வது தான் இவரது பலம்.

அண்மையில் நடந்த ஐ.பி.எல் தொடரில் 25 விக்கெட்டுகளை வீழ்த்திய ரபாடா, 66 ஒருநாள் போட்டிகளில் 106 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அவரது சிறந்த பந்துவீச்சு 6/16 ஆகும்.

**ஹசன் அலி (பாகிஸ்தான்)**

ஐ.சி.சி சம்பியன்ஸ் டிராபியை பாகிஸ்தான் அணியில் விளையாடிய ஹசன் அலி, அந்த தொடரில் 13 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார். 145 கிலோ மீற்றர் வேகத்தில் பந்துவீசும் திறன் கொண்ட ஹசன் அலி, இந்த உலகக்கோப்பை தொடரில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹசன் அலி 47 போட்டிகளில் 78 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இவரது சிறந்த பந்துவீச்சு 5/34 ஆகும். (க)

# மேற்கிந்திய தீவுகளை வெற்றி கொண்டு வரலாற்று சாதனை படைத்தது பங்களாதேஷ்







பங்களாதேஷ் கிரிக்கெட் அணி முதல் முறையாக முத்தரப்பு ஒருநாள் தொடரை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

அயர்லாந்து-பங்களாதேஷ் மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒருநாள் தொடர் அயர்லாந்தில் நடந்தது. லீக் போட்டிகள் முடிந்த நிலையில், நேற்று முன்தினம் பங்களாதேஷ் மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான இறுதிப்போட்டி நடந்தது.

டப்ளினில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ், பந்துவீச்சை தெரிவு செய்தது. அதன்படி களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணியில், தொடக்க வீரர்களான ஷாய் ஹோப் மற்றும் அம்ப்ரிஸ் இருவரும் அதிரடியில் மிரட்டினர்.

ஷாய் ஹோப் 64 பந்துகளில் 74 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அவுட் ஆனார். சுனில் அம்ப்ரிஸ் அரைசதம் கடந்தார். அணியின் ஸ்கோர், 24 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 152 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, மழை குறுக்கிட்டது.

அப்போது சுனில் அம்ப்ரிஸ் 69 ஓட்டங்களுடனும், டேரன்பிராவோ 3 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். மழை தொடர்ந்து பெய்ததால் போட்டி தள்ளி வைக்கப்பட்டு, பின்னர் 24 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

டக்வொர்த் லீவிஸ் முறைப்படி, வங்கதேச அணிக்கு 24 ஓவர்களில் 210 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து களமிறங்கிய பங்களாதேஷ் அணியில், தமிம் இக்பால் 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த சபீர் ரஹ்மான் ஓட்டங்கள் எடுக்காமல் அவுட் ஆனார். எனினும், மற்றொரு தொடக்க வீரர் சவுமியா சர்க்கர் 41 பந்துகளில் 66 ஓட்டங்கள் என்ற நிலையில் எடுத்தார்.

பின்னர் ரஹீம் (36), மிதுன் (17) ஆகியோர் அவுட் ஆனதைத் தொடர்ந்து, மக்மதுல்லா மற்றும் ஹொசைன் இருவரும் அணியை வெற்றி பாதைக்கு அழைத்துச் சென்றனர். இவர்களின் கூட்டணியின் மூலம் வங்கதேச அணி 22.5 ஓவரிலேயே 5 விக்கெட் இழப்புக்கு 213 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

மேற்கிந்திய அணியின் பந்துவீச்சை துவம்சம் செய்த ஹொசைன், 24 பந்துகளில் 5 சிக்சர்கள் மற்றும் 2 பவுண்டரிகளுடன் 52 ஓட்டங்கள் குவித்து களத்தில் இருந்தார். மக்மதுல்லா 19 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். இந்த வெற்றியின் மூலம், பங்களாதேஷ் அணி முதன்முறையாக முத்தரப்பு ஒருநாள் தொடரை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. (ந)

# கோலியைக் கலாய்ந்த யுவராஜ்



உலகக்கோப்பை தொடரில் இந்திய அணியை தலைமை தாங்கி வழிநடத்தவுள்ள அணித் தலைவர் கோலியை, இந்திய கிரிக்கெட வீரர் யுவராஜ் சிங் கலாய்த்துள்ளார்.

வெளிநாட்டிற்கு சுற்றுலா சென்றுள்ள விராட் கோலி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் புகைப்படம் ஒன்றை வெளியிட்டு, இது எந்த நகரம் என கண்டுபிடிக்க முடியுமா என பதிவிட்டிருந்தார்.

அது இந்தியாவிலுள்ள நகரம் இல்லை என நன்றாக தெரிகிறது. ஆனாலும், விராட் கோலி பதிவில் கமெண்ட் செய்த யுவராஜ் சிங், இது பஞ்சாப் மாநிலத்திலுள்ள கோட்கபுரா போல் தெரிகிறது? ஹர்பஜன் நீ என்ன நினைக்கிறாய்? என கோலியை கலாய்த்துள்ளார்.

கோலி தற்போது இந்திய அணித் தலைவராக இருந்தாலும், ஆரம்ப காலத்தில் இந்திய அணியில் விளையாடிய இளம் வீரர் ஆவார். அப்போது கோலிக்கு யுவராஜ் சீனியர் என்பதால், விளையாட்டாக யுவராஜ் கலாய்த்துள்ளார். கோலி தலைமையிலான இந்திய அணியில் யுவராஜ் சிங் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# டோனி தீவிரவாதி- நண்பர் சுவாரஸ்யம்



டோனியின் நண்பர் சத்ய பிரகாஷ் என்பவர், அவரை நாங்கள் தீவிரவாதி என்று தான் அழைப்போம் என டோனி குறித்த சில சுவாரஸ்ய தகவல்களை பகிர்ந்துள்ளார். உலகக்கோப்பை தொடருக்காக இந்திய அணி தயாராகி வருகிறது. இந்தத் தொடரில் அனுபவ வீரர் டோனியின் பங்கு மிகப்பெரியதாக இருக்கும் என்று முன்னாள் வீரர்கள் பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பல்வேறு கிரிக்கெட் பிரபலங்களும் உலகக் கோப்பை குறித்தும், அதில் விளையாடும் வீரர்கள் குறித்து பல்வேறு தகவல்களைப் பகிர்ந்து வருகின்றனர். அந்த வகையில், டோனியின் பீகார் அணி நண்பரான சத்யபிரகாஷ் என்பவர், டோனியுடனான தனது அனுபவங்களை பகிர்ந்துள்ளார்.

டோனி குறித்து அவர் கூறுகையில், 'நாங்கள் டோனியை தீவிரவாதி என அப்போது அழைப்போம். அவர் களத்துக்குச் சென்றால் 20 பந்துகளில் 40-50 ஓட்டங்கள் அடித்துவிட்டு வந்துவிடுவார். ஆனால் நாட்டுக்காக ஆடும்போது அவர் துறவியைப் போன்று ஆகிவிட்டார்.

அவர் தன்னை முழுவதுமாக மாற்றிக்கொண்டார். அப்போதெல்லாம் டோனி பெரிதாக கப்டன்ஷிப் செய்தது கிடையாது. ஆனால், இப்போது பாருங்கள், உலகின் சிறந்த வீரர்களுக்கு அவர் கப்டனாக இருந்திருக்கிறார். அவர் தொடர்ந்து கற்றுக் கொண்டு இருக்க விரும்புவார். நாங்கள் ஒன்றாக விளையாடிய காலத்தில் அவர் இந்தியில் மட்டுமே பேசுவார். ஆங்கிலத்தில் பேசமாட்டார். ஆனால், இப்போது பாருங்கள், சரளமாக ஆங்கிலத்தில் 'பேசுகிறார்' என தெரிவித்துள்ளார். (க)

# இலங்கையில் அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் பொறிமுறைமை உருவாக்கப்பட வேண்டும்

## கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடே தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அர்த்தமுள்ள வகையில் பொறுப்புக்கூறல் பொறிமுறைமை உருவாக்கப்பட வேண்டுமென கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு பத்து ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

26 ஆண்டுகளாக நீடித்து வந்த யுத்தம் பத்து ஆண்டுகளுக்கு முன்னதாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது எனவும், முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போதும் அதற்கு முன்னரும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டதுடன், பல்லாயிரக் கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் நாடு முழுவதிலும் ஆறாக்காயங்களை ஏற்படுத்திச் சென்றுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஒரு தசாப்த காலமாக யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் கனேடியர்கள் பலரை தாம் தனிப்பட்ட ரீதியில் சந்தித்துள்ளதாகவும் அவர்களின் வலிகள் வேதனைகளை கேட்டறிந்துகொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கனேடியர்களுடனான சந்திப்புக்களின் ஊடாக இலங்கையில் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவது மிக நீண்ட பயணம் என்பதனை புரிந்து கொண்டதாகத் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களினால் நம்பக்கூடிய வகையிலான பொறுப்புக் கூறல் பொறிமுறைமை ஒன்றை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டுமென கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மற்றும் உள்நாட்டு ரீதியில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் இந்த பொறுப்புக்கூறல் பொறிமுறைமை அமையப் பெற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தம் காரணமாக சொந்தங்களை இழந்த, பல்வேறு வழிகளில் இழப்புக்களை எதிர் நோக்கிய மற்றும் பாதிப்புக்குள்ளான அனைவருக்கும் கனேடிய அரசாங்கம் சார்பில் ஆழ்ந்த இரங்கல்களையும் வருத்தத்தையும் வெளியிட்டுக் கொள்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற தீவிரவாத தாக்குதல்களையும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அனைத்து மக்களும் தங்களது நம்பிக்கைகளின் ஊடாக வழிபாடுகளில் ஈடுபடக்கூடிய சுதந்திரம் இருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கனடாவின் வளர்ச்சிக்கு தமிழ் கனேடியர்கள் வழங்கி வரும் பங்களிப்புக்களை அனைத்து கனேடியர்களும் அங்கீகரிக்க வேண்டுமென இந்த சந்தர்ப்பத்தில் கோருவதாக பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடே தெரிவித்துள்ளார். (ம-3)

# வறுமையே சிறைக்கைதிகள் அதிகரிப்பதற்கு காரணம்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

சிறைக் கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வறுமையே அடிப்படை காரணமாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். 762 சிறைக் கைதிகளுக்கு நேற்றைய தினம் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது.

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கக்கூடியவர்களாக 11 ஆயிரம் பேருக்கே இடவசதி உள்ளது.

எனினும், சிறைக் கைதிகளாக 9 ஆயிரத்து 327 பேரும், தடுப்புக் கைதிகளாக 14 ஆயிரத்து 905 பேரும் உள்ளனர்.

அவர்களின் மொத்த எண்ணிக்கை 24 ஆயிரத்து 332 என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில், சிறைச்சாலைகள் மூடப்பட வேண்டுமாயின், வறுமை நிலை போக்கப்பட வேண்டும்.' பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார். (ம-3)

# தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவுகூரல்

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வாலிப முன்னணியின் தலைவர் க.பிருந்தாபன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா பிரதான சுடரை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து ஏனையோர் சுடர்களை ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆர்னோல்ட், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். (ம-3)

# ஈஸ்டர் தின தற்கொலை தாக்குதலை ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் பயன்படுத்தக்கூடாது

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கான வாய்ப்பாக ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

தேர்தலைப் பிற்போடுவதற்கு முயற்சித்தல் அல்லது அரசாங்கத்தின் பதவிக்காலத்தை நீடித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பன ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய கூறியிருந்தார்.

எனவே அரசியலமைப்பை மீறி தேர்தலைப் பிற்போடுவதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. மக்களின் ஜனநாயக உரிமைக்குக் குந்தகம் விளைவிக்கும் இத்தகைய செயற்பாடுகள் குறித்து அரசாங்கம் நினைத்தும் பார்க்கக் கூடாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தொடர் குண்டுத்தாக்குதல்களை தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று அரசியல்வாதிகள் பகிரங்கமாகக் கூறி வந்தாலும் கூட, இதனூடாக தத்தமது அரசியல் நோக்கங்களை மறைமுகமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு எவரும் முயற்சிக்கவில்லை என்றும் கூறமுடியாது.

இந்நிலையிலேயே குண்டுத்தாக்குதல்களை ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கான கேடயமாகப் பயன்படுத்தக் கூடாது. இது தொடர்பில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல்களைத் தொடர்ந்து தற்போது நாட்டில் பாரிய சிக்கல் நிலையொன்று ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் வெகுவாக அச்சமடைந்திருக்கின்றார்கள்.

இந்நிலையிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு அவர்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும். அந்தவகையில் ஒட்டுமொத்த நாட்டையும் மீளக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்திடம் முறையான திட்டமிடலொன்று இருக்க வேண்டும்.

மக்களை பழைய நிலைக்கு திருப்புவதற்கான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கும் அதேவேளை, சர்வதேசத் துடனும் தொடர்புகளைப் பேணும் வகையில் மற்றொரு திட்டம் அவசியம் என அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

### வெளிநாட்டு...

வெளிநாட்டைச் சேர்ந்த பெண்ணொருவரும் நிகழ்வில் பங்கேற்று தனது அகவணக்கத்தை செலுத்தியுள்ளார்.

வயது வேறுபாடின்றி முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டு நேற்றுடன் பத்து வருடங்கள் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

### ஆலய வாளகத்தி...

நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தூக்குகாவடி, பறவைகாவடிகளை எடுக்க முடியாது என கூறப்பட்ட போதிலும் வியாழக்கிழமை எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் ஆலய நிர்வாகம் மேற்படி நேர்த்திகளை மேற்கொள்ள உள்ளவர்களுக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எனவே குறித்த நேர்த்திகளை மேற்கொள்ளவுள்ளவர்கள் ஆலய நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


# பிரான்ஸில் ஆயிரக்கணக்கான புலம்பெயர் உறவுகளால் முள்ளிவாய்க்கால் நினைவுகூரல்

(பரிஸ்)

தமிழின அழிப்பின் நினைவான முள்ளிவாய்க்கால் நினைவு நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகமெங்கும் நினைவு கூரப்பட்டது. அதேவேளை வெளிநாடுகளிலும் புலம் பெயர்ந்த உறவுகளால் நினைவுகூரல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில், பிரான்ஸின் பரிஸில் தமிழர்கள் செறிந்துவாழும் பகுதியான லா சப்பல் பகுதியில் நேற்று சனிக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவு கூரல் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதன்போது நூற்றுக்கணக்கான புலம்பெயர் தமிழர்கள் ஒன்றுகூடி பேரணியாகச் சென்று அஞ்சலி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த



திடலில் உயிரிழந்த தமது தாய்த்தமிழ் உறவுகளுக்காக அஞ்சலியை செலுத்தினர்.

பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுகளைச் சுமந்த குறித்த திடலில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மக்கள் உயிர் நீத்த உறவுகளுக்காக மலர்க்கொத்துகளை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இந்த நினைவுகூரல் நிகழ்வில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இருந்துவந்த புலம்பெயர் உறவுகளும், சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டு தமது அஞ்சலியை செலுத்தினர். (ம-3)

## யாழ். பல்கலைக்...

யர்களும் சுடர் ஏற்றி அகவணக்கம் செய்து மலரஞ்சலி செலுத்தினார்கள். (ம-9)

## புத்தளத்தை சேர்...

தினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன், வியாபாரம் செய்வதற்காக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்துள்ளார் என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞனிடம் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், விசாரணையின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3)

## முள்ளிவாய்க்கா...

னியா பாராளுமன்றத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் என மக்கள் எழுச்சியோடு பங்கேற்றனர்.

அதில் நேற்று பிரித்தானியாவின் கிறீன் பார்க்கில் இருந்து வெஸ்ட் மினிஸ்டர் நோக்கி பேரணி நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான தமிழ் உணர்வாளர்கள் கலந்து கொண்டு முள்ளிவாய்காலில் கொல்லப்பட்ட இலட்சக் கணக்கான தமிழர்களிற்காக சர்வதேசத்திடம் நீதி வேண்டி கையில் தமிழர்களின் தேசியக் கொடியாம் புலிக்கொடி ஏந்திய படி கலந்து கொண்டனர்

இந்த பேரணி பிரித்தானியா நேரம் மாலை 2மணிக்கு ஆரம்பித்து 6 மணி வரை நடைபெற்றது. இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-312)

## கண்ணீரில் மூழ்...

ன்றின் முன் நின்றவர்கள் உறவுகளை நினைந்து சுடர்களை ஏற்றி அஞ்சலித்தனர். இந்த நிகழ்வில் மதத் தலைவர்கள்,அரசியல் பிரமுகர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு (வடக்கு-கிழக்கு) குழுவினரால் மே 18 பிரகடனம் வெளியிடப்பட்டது.

கொளுத்தும் வெயிலிலும் ஆயிரக்கணக்கான மக்கள் முள்ளிவாய்க்கால் மண்ணுக்கு வந்து, இறுதி யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் உறவுகளுக்காக கண்ணீர் மல்க உணர்ச்சிபூர்வமாக தமது அஞ்சலிகளை செலுத்தியுள்ளனர்.

நாட்டில் தற்பொழுது நடக்கும் அசம்பாவிதங்களை பொருட்படுத்தாது மக்கள் முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்கு வந்து படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளை நினைந்து உருகி அஞ்சலி செலுத்தியமையை காணக்கூடியதாக இருந்தது. (ம-3)


**Spoken English With Grammer**
(With Canadian Institute Certificate)

O/L, A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலைக் கழக, கல்லூரி மாணவர்கள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்ல விரும்புவோர் அனைவருக்குமான பயன்தரு வகுப்புக்கள் (சிறுசிறு குழுக்களாகவும், தனிப்படவும் பயிற்சிகள் வழங்கப்படும்)

**புதிய பிரிவுகள் ஆரம்பம் :-**

சனிக்கிழமை, வியாழக்கிழமை பி.ப. 3.00 மணி

ஒவ்வொரு பிரிவுகளிலும் 15 பேர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவதால் பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள். (C-6404)

CTHI T.P 077 104 1923, 021 314 6171
உப்புமடம் சந்தி. K.K.S வீதி
கோண்டாவில். யாழ்ப்பாணம்


## நீதிப் பொறிமுறை...

அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இலங்கையின் நீண்ட கால நட்பு நாடான பிரித்தானியா தொடர்ந்தும் நல்லிணக்கம் ஏற்படுவதற்கும் நிலைமாறுகால நீதிப் பொறிமுறையானது முறையாக இயங்குவதற்கும் ஒத்துழைப்பு வழங்கும்.

அதற்கேற்ப அமைதியான, வளமான மற்றும் நிலையான எதிர்காலத்தை கட்டியெழுப்புவது அவசியம்.இலங்கையில் உள்ளக போர் முடிந்து 10 வது வருடபூர்த்தி நினைவு கூறப்படும் இந்த தருணத்தில் மோதல்களின் போது உயிர்த்தியாகம் செய்தவர்களை நினைவு கூருவதுடன், பாதிக்கப்பட்ட அனைத்து சமூகத்தினருக்குமாக பிரார்த்திப்பதாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கடந்த ஈஸ்டர் தினத்தன்று நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதல் தொடர்பாகவும் பிரித்தானியா மிகுந்த அதிர்ச்சியடைந்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்போது பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த இலங்கை மக்கள் தொடர்பில் தமது அரசாங்கம் ஆழ்ந்த அனுதாபங்களை கொண்டிருப்பதாகவும். இலங்கை மக்களுடன் இந்த தருணத்தில் தோழமையுடன் கரங்கோர்த்திருப்பதாகவும் அமைச்சர் மார்க் ஃபீல்ட் குறிப்பிட்டார்.

எனவே, இனிவரும் காலங்களில் இலங்கையை பன்முகத் தன்மை, பல்கலாசார, பல மதங்கள் கொண்ட சமூகமாகவும், கலாசாரங்களை பேணிப் பாதுகாக்கும் கட்டமைப்பாகவும் அபிவிருத்தி செய்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். இந்த அடிப்படையில் இலங்கை எதிர்காலத்தில் செழித்து வளமிக்கதாக மாறும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (ம-3)

## அமைதியை...

ராஜபக்ஷ ஜேர்மனியிடம் உறுதியளித்திருக்கிறார்.

கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதுவர் ஜோன் ரோட் ராஜபக்ஷவை கடந்த வெள்ளியன்று சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து ஆராய்ந்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து கலந்துரையாடினோம். கடந்த சில வாரங்களாக இடம்பெற்றுவரும் சம்பவங்கள் தொடர்பில் ஜேர்மன் தூதுவர் கவலை வெளியிட்டார். தற்போதைய நெருக்கடியை வெற்றிகொள்வதற்கு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார் என்று ராஜபக்ஷ விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரென்ற வகையில் நாட்டின் தற்போதைய பிரச்சினைக்கு முடிவைக்கண்டு சகஜநிலையை ஏற்படுத்துவதற்குத் தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அரசாங்கத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு எதிரணி உறுதியளித்திருப்பதாக ராஜபக்ஷ ஜேர்மன் தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் இதனையே நாம் கூறியிருக்கின்றோம். வன்முறையில் ஈடுபடுவதைத் தவிர்த்து அமைதி காக்குமாறு பொதுமக்களிடம் நாம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இலங்கையிலுள்ள யுனிசெப் பிரதிநிதி டிம் சட்டெனும் ராஜபக்ஷவை கடந்த வெள்ளியன்று சந்தித்தார். நாட்டின் நிலைவரம் குறித்து ராஜபக்ஷவுடன் கலந்துரையாடிய அவர் நாட்டில் வழமை நிலையைக் கொண்டுவரும் முகமாக பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புவதற்கு பெற்றோரை ராஜபக்ஷ ஊக்குவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த ராஜபக்ஷ தான் ஏற்கெனவே அதனைச் செய்திருப்பதாகவும், அரசாங்கத்தின் மீதும் அதன் நடவடிக்கைகள் மீதும் பொதுமக்கள் நம்பிக்கை இழந்திருப்பதால் பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புவதில் பெற்றோர் தயக்கம் காட்டுவதாகத் தெரிவித்துள்ளார். (ம-3)

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 08 . 01 . 1972



ஆண்டவன் அடியில் 18 . 05 . 2019

## திருமதி ஜெகநாதன் பிரியதர்சினி

தெல்லிப்பழை துர்க்காபுரத்தை பிறப்பிடமாகவும், லண்டன் நகரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகநாதன் பிரியதர்சினி அவர்கள் நேற்று (18.05.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தெல்லிப்பழையை சேர்ந்த கனகரட்ணம் - அருள்மலர் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற முத்தையா தம்பதியினரின் அன்பு மருமகளும், ஜெகநாதன் அவர்களின் அன்பு மனைவியும், குகபாலன் - பத்மதர்சினி, ஸ்ரீறாகவன் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அனுயன், பிரவின் ஆகியோரின் அன்புத் தாயாரும், குகபாலன், ஸ்ரீறாகவன் - ரிஷா, கணநாதன், சிவநாதன், ரகுநாதன் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற இராஜமனோகரன் மற்றும் நித்தியாநந்தன், காலஞ்சென்ற Dr.தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (22.05.2019) புதன்கிழமை லண்டன் நகரில் நடைபெறும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

றாமசேரி,
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.

தகவல்: தந்தை - கனகரத்தினம்
(ஓய்வுபெற்ற இலங்கைவங்கி உதவி பொது முகாமையாளர்) 0212059271, 00441303279884, 00447828528531.

(8853)


# பதவி வெற்றிடம்

- கணனி பக்க வடிவமைப்பாளர்கள் (ஆண்கள் - அனுபவம் உள்ளவர்கள்)
- கணனி பக்க வடிவமைப்பு (ஆண்கள் - பயிலுநர்கள்)

ஆர்வமும் விருப்பமும் உள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

இல. 3,2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
- பொது முகாமையாளர்

## காணி விற்பனைக்குண்டு

யாழ். இந்துக் கல்லூரிக்கும் தட்டாதெரு சந்திக்கும் அண்மையில் 3பரப்பு அல்லது 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. திங்கட்கிழமை (20.05.2019) நேரடியாக பார்வையிடலாம்.

தொடர்பு: 0761004549

## வேலையாள் தேவை

ஆட்டோ, லான்ட்மாஸ்ரர், மோட்டார் சைக்கிள் ஓடத்தெரிந்த வாகனப்பத்திரம் உள்ள ஆண் ஒருவர் வேலைக்கு தேவை.

தொடர்பு: 0767148059 (தி-8412)

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 0768351932, 021 223 2222 (உரும்பிராய்)

## காணி விற்பனைக்கு

பொன்னாலை வீதி, மானிப்பாய் மேற்கில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0772756720, 0779688280 (8828)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை வெல்வெட்டித்துறை

V2 TRAVELS

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976, கே. கே. எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை

(6367)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 217

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 19.05.2019 தொலைபேசி : 021 222 3378










## நெக்குருகும் நினைவேந்தல்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## புத்தர் மோட்சம் பெற்ற நாளும் முள்ளிவாய்க்கால் நினைவு நாளும்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் எண்டு வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட எங்கள் உறவுகளுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

வன்னிப் பெருநிலப் பரப்பில் உயிரிழந்த எம் உறவுளே! உங்களோடு வாழக் கொடுத்து வைக்காதவர்கள் நாங்கள். வாழத் துடித்தீர்கள். ஆனால் பேரினவாதப் பேய்கள் உங்களை விட்டு விடவில்லை. சர்வதேசமே எங்களைக் காப்பாற்று என்று கைநீட்டிக் கேட்டீர்கள். இலங்கை அரசு கட்டளையிட்டு விட்டது. ஆதலால் எங்களால் இயங்க முடியாது என்று ஓடினார்கள். என்ன செய்வது உங்கள் உதிரத்தால் நனைந்து போன எங்கள் ஈழம் உங்களை என்றும் மறக்காது. நீங்கள் விட்ட கண்ணீர் ஒருபோதும் வீண் போகாது. நீங்கள் பட்ட அவலத்திற்கான தண்டனையை சம்பந்தப்பட்டவர்கள் அனுபவித்தேயாக வேண்டும். அதுவரை எம் உறவுகளே அமைதி கொள்க. பண்டிதர் பரமலிங்கத்தின் நினைவேந்தல் உரை நீண்டு நிறைவு பெற்றது.

பண்டிதரின் உரையோடு ஆலடி நிசப்தமாயிற்று. மெல்லிய ரீங்காரம் செய்த ஆலம் சருகுகள் கூட அமைதி கொண்டன. அந்த அமைதி வன்னிப் போரில் உயிரிழந்த மக்களுக்காக அஞ்சலிப்பது போன்று இருந்தது.

சோகத்துடன் கூடிய அந்த நிசப்தத்தை கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:** 2019 மே.18 வெசாக் தினம். கௌதம புத்தபிரான் போதி மரத்தின் கீழ் இருந்து முத்தி பெற்ற நாள். அந்தப் புனிதமான நாள் மோட்சத்துக்குரியது.

அந்தநாளும் முள்ளிவாய்க்கால் நினைவு நாளும் ஒன்றாகி இருப்பது வியக்கத்தக்க ஆச்சரியம் தான்.

**கங்காணி:** சாத்திரியார் சொல்லுறதில நூறு வீதம் உண்மை இருக்குது. முள்ளிவாய்க்கால் சம்பவம் நடந்தது 2009 ஆம் ஆண்டு மே 18. 2019 ஆம் ஆண்டு மே 18 இற்கு இடையில் பத்து ஆண்டுகள். அந்தப் பத்து ஆண்டு நிறைவு புத்தபிரான் மோட்சம் பெற்ற நாளாக இருக்கிறது எண்டால், முள்ளிவாய்க்காலில இறந்து போன எங்கட உறவுகளுக்கு புத்தபிரானுக்கு கிடைத்த அதே மோட்சம் வழங்கப்பட்டு விட்டது என்பது தான் உண்மை.

சாத்திரியாரும் கங்காணியாரும் கூறிய கருத்துக்கள் ஆலடியில் இருந்தவர்களின் இதயத்தை நெருடியது. அந்த நெருடலின் அடையாளமாக விதானையார் விசுவலிங்கம் தன் கன்னத்தின் ஓரங்களைத் துடைத்துக் கொண்டார். மீண்டும் ஆலடியில் அமைதி. அந்த அமைதியைக் கலைக்க மாநாட்டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

சாத்திரியார் சொன்ன மாதிரி புத்தபிரான் பரிநிர்வாணம் அடைந்த நாளில முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வந்திருக்குது.

அதேநேரம் இன்னொரு விடயத்தையும் நாங்கள் கவனிக்க வேணும்.

(இவ் வாறு கூறியபடி வாத்தியார் மௌனித்தார்)

**மூப்பர்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** வெசாக் பண்டிகை எண்டால் வடமாகாணம் முழுவதிலும் வெசாக் பண்டிகை வளைவுகளும் வெளிச்சக் கூடுகளும் அலங்காரப் பந்தல்களும் என ஒரே பௌத்தமயமாக வடபகுதி ஆக்கப்படும். அதிலும் விநோதம் என்னவென்றால், வெசாக் பந்தல்களை அமைப்பதில் படைத்தரப்பின் ஒவ்வொரு பிரிவுகளும் ஈடுபட்டிருக்கும். ஆனால் இந்த முறை...

**சிறாப்பர்:** எந்தெந்தப் பகுதியில எந்தெந்த இனம், மதம் சார் மக்கள் வாழ்கினமோ அவர்களின்ர இடங்களில இன்னொரு சமயச் சடங்கை திணிக்கக் கூடாது என்ற உண்மைத் தத்துவம் 2019 மே 18 வெசாக் நாளில உணர்த்தப்பட்டிருக்கு.

**விதானையார்:** இந்தத் தத்துவங்கள் எதுவும் பேரினவாதிகளுக்குத் தெரியப்போவதில்லை. அண்மைக்காலமாக ஊடகங்களில வாற விடயங்களைப் பார்த்தால், இன்னமும் இந்த நாடு திருந்தவில்லை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது.

**மூப்பர்:** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:** இலங்கை பௌத்த சிங்கள நாடு. ஏனைய மக்கள் விரும்பினால் வாழலாம். இல்லையெண்டால் வெளியேறலாம் எண்டு இப்பவும் சொல்லுகினம் எண்டால் பாருங்களன்.

**மூப்பர்:** இதை நீங்கள் சொல்லுறியள். ஏன் கூட்டமைப்பின்ர தலைமையும் பௌத்த சமயத்திற்கு முன்னுரிமை கொடுப்பது பற்றி எங்களிட்ட எந்த எதிர்ப்பும் இல்லை எண்டு சொன்னவியள் தானே.

**வாத்தியார்:** அதுதான் சொல்லுறன் இலங்கை மதசார்பற்ற நாடு எண்டு முடிவு எடுக்கப்படுமாக இருந்தால்; இலங்கைக்கு நிகராக உலகில எந்த நாடும் வர முடியாது எண்டளவில இலங்கை உலகப் புகழ் பெறும்.

ஆனால் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று கோசமிட்டு, கோசமிட்டு இந்த நாட்டிற்கு ஆபத்துக் கூடிக் கொண்டே வருகுது.

**சிறாப்பர்:** ஒரு முஸ்லிம் மதகுரு கூறின கருத்துக்கள் முகநூலில வந்ததல்லோ.

**கங்காணி:** அவரையும் பிடிச்சுப் போட்டினம்.

**விதானையார்:** என்னைப் பொறுத்தவரை இறைவன் வகுத்த சமயங்கள் அத்தனையும் அன்பு, அஹிம்சை, தர்மம், நீதி என்பவற்றைத் தான் எடுத்துரைக்கின்றன.

ஆனால் அதனைப் பின்பற்றுகிறவர்கள் தான் மத வெறிக்கு ஆளாகினம். அதாலதான் இவ்வளவு பிரச்சினை.

இப்படி விதானையார் கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# இஸ்லாமிய தீவிரவாதத்தின் பின்னணி முஸ்லிம் அரசியல்வாதிகளா?



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதத்தின் ஊடுருவல் இலங்கையின் சமுக நிலைக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்து விட்டது.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் இஸ்லாமிய தீவிரவாதம் நடத்திய மிலேச்சத்தனமான தற்கொலைக் குண்டுத்தாக்குதலின் அதிர்ச்சியில் இருந்து இலங்கை மக்கள் இன்னமும் விடுபட்டதாகத் தெரியவில்லை.

தவிர, இலங்கையின் பாதுகாப்பு என்ற விடயமும் இன்னமும் ஆபத்து நிறைந்ததாகவே காணப்படுகிறது. பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பிவிட்டு ஏங்கி நிற்கின்ற பெற்றோர்களின் பரிதவிப்பு நீண்டு செல்கிறது.

இவற்றுக்கு மேலாக, அனைத்துப் பாடசாலைகளிலும் பொலிஸ், இராணுவம் எனப் படையினர் காவல் காப்பதும் மாணவர்களின் புத்தகப்பைகளைச் சோதனையிடுவதுமான நடவடிக்கைகள் நடந்த வண்ணமுள்ளன.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் படைத்தரப்பு பாடசாலைகளைப் பாதுகாப்பது என்ற விடயம் சாத்தியமானதா? என்றால் இல்லை என்பதே பதிலாகும். அப்படியானால் இவற்றுக் கான முடிவு எப்போது? என்பது தான் இன்னமும் புரியாமல் உள்ளது.

தாக்குதல் இடம்பெறவில்லை என்ற கட்டத்தில் படைத்தரப்பு அசமந்தமடையும் போது, எங்கோ ஒரு மூலையில் குண்டுத் தாக்குதல் நடந்தால் அதுபோதும் இலங்கையில் மீண்டும் அச்சம் நிலைப்பதற்கு.

ஆக, நடக்கக்கூடாதது நடந்து விட்டது. எனவே நிலைமை எப்போதும் பயங்கரமானதாகவும் பயம் மிகுந்ததாகவும் இருக்கும் என்பது தான் யதார்த்தம்.

இவை ஒருபுறமிருக்க, ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதத்தின் மூலத்தையும் அதன் வேர் விழுதுகளையும் பற்றித் தொடர்ந்து வெட்டிச் சரிக்கின்ற நடவடிக்கைகளில் படைத்தரப்பு மிகத் தீவிரமாகச் செயற்படுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

தேடுதல் நடவடிக்கைகளும் சோதனைகளும் புலனாய்வுத் தகவல்களும் இஸ்லாமியத் தீவிர வாதத்தை வேரறுக்கப் பேருதவியாகிறது என்பது உண்மையாயினும் இத்தகைய நடவடிக்கைகளின் போது எந்தத் தொடர்பும் இல்லாத அப்பாவி முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதும் நிறுதிட்டமான உண்மை.

அதேநேரம் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதம் நடத்திய தாக்குதலையடுத்து எல்லா முஸ்லிம் மக்கள் மீதும் ஐயுறவு கொள்வதென்பதும் ஏற்புடையதல்ல.

மாறாக, தாக்குதல் சம்பவங்களுடனும் இஸ்லாமியத் தீவிரவாதத்துடனும் எந்தத் தொடர்புமில்லாத முஸ்லிம் மக்கள் மீது படைத்தரப்பின் கெடுபிடி அதிகரிக்குமாக இருந்தால், இது இஸ்லாமியத் தீவிரவாதத்தின் உயிர்ப்புக்கு உதவுவதாகவே இருக்கும்.

எனவே, இலங்கையில் இருந்து இஸ்லாமியத் தீவிரவாத த்தை வேரறுக்க வேண்டுமாயின் அதற்கு முஸ்லிம் மக்களின் உள்ளார்ந்தமான ஆதரவும் ஒத்துழைப்பும் தேவை என்பதை ஆட்சியாளர்களும் படைத்தரப்பும் ஒருபோதும் மறந்துவிடலாகாது.

இதற்கு மேலாக, இஸ்லாமியத் தீவிரவாதத்தின் மீது கொண்ட கோபத்தை முஸ்லிம் மக்கள் மீது பழிதீர்க்க நினைப்பது எந்தவகையிலும் ஏற்கமுடியாத விடயமாகும்.

சிங்களப் பேரினவாதிகள் முஸ்லிம் மக்களைத் தாக்குவதிலும் அவர்களுடைய சொத்துக்களைச் சேதப்படுத்துவதிலும் ஈடுபடுவதானது இலங்கைத் தீவு முழுவதையும் வெந்தணலாக்குகின்ற செயற்பாடாகவே இருக்கும்.

அண்மையில் நீர்கொழும்பு, கம்பஹா ஆகிய இடங்களில் சில சிங்களக் குழுக்கள் அப்பகுதி முஸ்லிம் மக்கள் மீதும் அவர்களின் சொத்துக்கள் மீதும் தாக்குதல் நடத்தி சேதம் விளை வித்த செயல் ஓர் இனக்கலவரத்தை ஏற்படுத்துகின்ற நோக்குடையது.

குறித்த சம்பவம் உடனடியாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதாயினும் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் மிக அதிகமானதென்றும் எனினும் அவை மறைப்புச் செய்யப்பட்டுள்ளன என்பதுமான மனப்புகைச்சலும் இருக்கவே செய்கிறது.

தவிர, சிங்களக் குழுக்கள் முஸ்லிம் மக்கள் மீதும் அவர்களது வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீதும் தாக்குதல் நடத்திய போது அச்சமடைந்த முஸ்லிம் மக்கள் குறிப்பாக பெண்கள், குழந்தைகள் வயல்வெளிகளிலும் தோட்ட நிலங்களிலும் இரவு பகலெனத் தங்கியிருந்து தங்களைப் பாதுகாத்தனர் என்ற செய்தி இதயத்தை நோகடிப்பதாகும்.

எது எவ்வாறாயினும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதத் தாக்குதலின் எதிரொலிப்பு முஸ்லிம் அரசியல் வாதிகள் மீது திசை திரும்பியுள்ளது.

அதாவது இஸ்லாமியத் தீவிரவாதத்தின் தோற்றுவாய்க்கு மூல காரணம் முஸ்லிம் அரசியல் வாதிகள் என்ற குற்றச்சாட்டு தென்பகுதியில் கடுமையாகியுள்ளது.

இதன் விளைவாக குறித்த சில முஸ்லிம் அரசியல்வாதிகளைக் கைது செய்யவேண்டும். அவர்களின் பதவிகள் பறிக்கப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோசங்கள் வலுக்கத் தொடங்கியுள்ளன.

இதன் ஓர் அம்சமாக பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான றிசாத் பதியுதீனுக்கு எதிராக சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையாகும்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு என்ன நடக்கும் என்பதை விட, நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பதுதான் ஆர்வத்தை ஏற்படுத்துகின்ற விடயமாகவுள்ளது.




தவிர, பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் தமிழ் மக்களுக்கு மிக மோசமான கெடுதியைச் செய்தவர் என்றும் மன்னாரில் தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்புச் செய்வதன் சூத்திரதாரி அவரே என்பதுமான குற்றச் சாட்டுக்கள் தமிழ்மக்கள் மத்தியில் உண்டு.

இந்நிலையில் றிசாத் பதியுதீனுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கூட்டமைப்பு, றிசாத் பதியுதீனைக் காப்பாற்றுமா? அல்லது தமிழ் மக்களுக்குச் செய்ததை அனுபவித்துக்கொள் என்று பாடம் புகட்டுமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

**திருநீலகண்டன்**




## பொது அறிவுத் துணுக்குகள்

- வண்ணப் புகைப்படத்தைக் கண்டுபிடித்தவர், ஜார்ஜ் ஈஸ்ட்மன்.
- ஹார்மோன்களே இல்லாத உயிரினம், பக்றீரியா.
- மனிதன் ஒரு நிமிடத்தில் சுவாசிக்கும் காற்றின் அளவு, சுமார் 15.5. லீற்றர்.
- 'பிக் ஆப்பிள்' என்று அழைக்கப்படும் அமெரிக்க நகரம், நியூயோர்க்.
- 'இந்தியாவின் ஏவுகணை மனிதர்' என்று போற்றப்படுபவர், ஏ.பி.ஜே.அப்துல்கலாம்.
- நீரைவிட இரத்தத்துக்கு 6 மடங்கு அடர்த்தி அதிகம்.
- ஒரு நெருப்புக்கோழியின் முட்டை, 22 கோழி முட்டைகளுக்கு சமம்.
- ஒரு புள்ளியில் சுமார் 70 ஆயிரம் அமீபாக்களை நிரப்பலாம்.
- உலக வானிலை மையம் அமைந்துள்ள இடம் ஜெனீவா.
- யுரேனஸ் கிரகம் சூரியனைச் சுற்றி வரும் காலம், 84 ஆண்டுகள்.
- உலகின் மிக நீளமான நெடுஞ்சாலை, டிரான்ஸ்-கனடா (8 ஆயிரம் கிலோமீற்றர்).
- புத்தர் பிறந்த இடம், லூம்பினி.

➢ "மன்னா! புலவர் எழுதிய பாட்டில் உங்களைப் புகழ்ந்து தானே இருக்கிறது. ஏன் கோபப்படுகிறீர்கள்?"

"அமைச்சரே! ஓலையின் கீழே பாருங்கள். 'மேலே கூறியவை முழுக்க, முழுக்க கற்பனையே! யாரையும் எவரையும் குறிப்பிடுபவை அல்லன்னு எழுதியிருக்கே"

➢ "டாக்டர் ஹார்ட் ஆபரேஷனுக்கு எதுக்கு கோடரி, கடப்பாரை எல்லாம் எடுத்துட்டு வர்றீங்க?"

"நீங்க ஒரு கல்நெஞ்சக்காரர்னு சொன்னாங்க"



➢ "தலைவர் ஒரு துறவி மாதிரின்னு எப்படி சொல்றே?"

"ஆமா! நேர்மை, நாணயம், மனசாட்சி எல்லாத்தையும் துறந்துட்டாரே"



கேதீசன் அக்ஷிதா,
சண்டிக்குளி மகளிர் கல்லூரி


## குருவே துணை

குரு அல்லது ஆசாரியர் இவர்கள் ஆன்மீகத்தின் மானுட வடிவங்கள் என்றும் தெய்வத்துக்கு இணையானவர்கள் என்றும் போற்றப்பெற்றவர்கள். ஆறுமுக நாவலரின் சூடாமணி நிகண்டு என்ற நூலில் ஆசாரியன் என்ற வார்த்தைக்கு ஆசான், தேசிகன், ஓசன், உபாத்தியாயன், பணிக்கன் என்றெல்லாம் பொருள் கூறப்படுகின்றது.

ஓர் ஆசாரியன் எப்படி இருக்க வேண்டும்? ஒரு மாணாக்கன் எப்படி இருக்கக்கூடாது என மகாபாரதத்திலே திருமாலே ஆசாரியராகவும் சீடனாகவும் நடித்துக் காட்டியுள்ளார்.

மகா பாரதத்திலே போர் துவங்கமுன் குருசேத்திரத்தில் எதிரிப்படையில் இருக்கும் எண்ணற்ற வீரர்களையும் தனது பாட்டன் பீஸ்மரையும் குலக்குருவான துரோணரையும் பார்த்து அர்ச்சுனன் மனம் கலங்குகின்றான்.

அப்போது பகவான் அர்ச்சுனனுக்கு கர்மயோகத்தை உபதேசிக்கின்றார். அர்ச்சுனா, அழிவில்லாத இந்த கர்மயோகத்தை நான் சூரியனுக்கு உபதேசித்தேன். சூரியன் மனு



விற்கு உபதேசித்தார். மனு இட்சுவாகுக்கு உபதேசித்தார். இப்போது நானே மீண்டும் உனக்கு உபதேசிக்கிறேன் என்றார். அப்போது அர்ச்சுனன் கிருஷ்ணா நீ உண்மையில்லாததை சொல்கிறாய். சூரியன் உனக்கு முன்பே தோன்றியவன். நீ, இப்போது துபாரகயுகத்தின் இறுதிக் கட்டத்தில் பிறந்தவன். நீ எப்படி சூரியனுக்கு உபதேசித்திருக்க முடியும்? நான் நம்பமாட்டேன் என்றார். அப்போது அர்ச்சுனனை நம்ப வைப்பதற்காக பகவான் விஸ்வரூபம் எடுத்தார். பின்பு பேசினார்.

அர்ச்சுனா! பலவகைப்பட்டதும் பல நிறங்களையுடையதும் நூறு நூறாகவும் ஆயிரம் ஆயிரமாகவும் உள்ள என் வடிவங்களை நீ பார்ப்பாயாக. ஆதித்யர்கள், வசுக்கள், உருத்திரர்கள், அச்வினிகள், மருத்துக்கள், பிற அசையும் பொருட்கள், அசையாப் பொருட்கள் முதலியவற்றையும் முன் காணாத பல அதிசயங்களையும் நீ பார். இவைகளை உன் ஊனக்கண்ணால் காண இயலாது. ஞானக்கண்களைத் தருகின்றேன் பார் என்றார். அர்ச்சுனன் அந்த பிரமாண்டமான வடிவைக்காட்டி ஞானக்கண்கள் அளித்த பின் பகவானை நம்பி மனம் தெளிந்தான்.

ஒரு சீடன் ஆசாரியனை முழுமையான நம்பிக்கையுடன் உபதேசம் பெறவேண்டும் என்பதற்கு மேற்கண்ட நிகழ்வு நல்ல உதாரணமாகும். சமூக அக்கறை கொண்ட ஓர் உயர்ந்த எண்ணம் கொண்ட குருநாதன் பல்வேறு சாதனைகள் வழி சிரமப்பட்டு பெற்ற ஞானத்தை தகுதிபெற்றவர்களுக்கு எப்போது உபதேசிப்பது என நித்தியம் தவித்துக் கொண்டே இருப்பார். அவர் அப்படி எதிர்பார்ப்போடு இருப்பதால் ஒவ்வொரு குருவும் தனக்கு நிகரான எத்தனையோ சீடர்களை உருவாக்கி சமுதாய வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருக்கின்றார்கள்.

தன்னலமின்றி உதார குணத்தோடு அன்போடும் ஞானம் இல்லாதவனுக்கு உபதேசத்தின் வழி ஞான ஒளியை ஏற்ற வேண்டும். இவ்வாறு செய்பவருக்கு இப்பூவுலகத்திற்கும் தானம் செய்த பலன் புண்ணியம் கிடைக்கும்.

-சிவனடியான்-








## யாழ். பல்கலைக்கழக மாணவர் கைது தொடர்பில்?

ஜூபா — கரவெட்டி

**மக்கள் யோசனையில் இருக்க அரசியல்வாதிகள் யோசனை இன்றி இருக்கின்றார்களே?**

மக்களுக்கு தங்கள் மீதும் தங்கள் தேசத்தின் மீதும் பற்று அதிகம். அதனால் அவர்கள் அதிகம் சிந்திக்கிறார்கள். ஆனால் அரசியல்வாதிகளுக்கு பணம், பதவி, தவிர எதிலும் பற்றில்லையே எப்படி சிந்திப்பார்கள். என்ன தான் சிந்திப்பது போல நடித்தாலும் சில செய்கை நடிப்பு என்பதைக் காட்டித் தந்து விடுமே.

திகழன் — யாக்கரு

**புலிகளைப் புகழும் சிங்கள ஆட்சியாளர்கள் மாணவர் கைதை வேடிக்கை பார்க்கிறார்களே?**

ஒரு அடி வீழ்ந்தவனிடம் போய் அடி பலமோ என்று கேட்க முடியாது. இன்னும் ஒரு அடி வீழ்ந்தால் தான் அதா இதா பலமான அடி என்று உணர முடியும்.

இப்போது நடந்தது கூட அது தான். இரண்டாவது அடி வீழ்ந்த போது தானே இதைவிட முதலாவது அடி பரவாயில்லை என்பது பலருக்குப் புரிகின்றது.இப்போது புரிந்து பலனேதும் இல்லையே.

தனுஸ் — உடுவில்

**அம்மாவுடன் இருக்கும் போது உள்ள நிம்மதி மனைவியுடன் இருக்கும் போது வருவதில்லையே ஏன்?**

மனைவி வைத்த ரசத்தைக் குடித்த கணவன் "என்னடி ரசம் இது. உப்பும் இல்லை புளியும் இல்லை. எங்க அம்மா வைக்கிற ரசம் இருக்கே அதைப் போல எதுவும் வராது."

சற்றுநேரத்தில் அதே ரசத்தை மகன் குடித்தான். அம்மா ரசம் சூப்பர் அம்மா. நீங்க ரசம் வைச்சா வீட்டு வாசலில் வரும் போதே வாசம் தூக்கும். ரசம் என்றால் என் அம்மா வைக்கிற ரசம் தான் ரசம்.

அம்மா என்கின்ற பந்தம் எல்லாவற்றையும் தாண்டியது. அவள் தான் எப்போதும் Best.

தர்ணிகா — பாக்கரு

**மே-18 இராணுவத்தால் இடையூறு இருக்காதாம். உண்மையோ?**

எமக்கு கைகள் தான் கட்டப்பட்டிருக்கிறதே தவிர கண்கள் நன்றாகத் தெரிகிறது என்பதை எங்கேயோ புத்தகத்தில் வாசித்த ஞாபகம்.

இது உயிர் துறந்த அப்பாவிப் பொது மக்களுக்காக மேற்கொள்ளும் பிரார்த்தனை. இடையூறு ஏற்படாதிருக்கும் வரை மகிழ்ச்சி.

## புலிகளைப் புகழும் சிங்கள ஆட்சியாளர்கள் மாணவர் கைதை வேடிக்கை பார்க்கிறார்களே?

நேதாஜி — வதிரி

**தமிழர்கள் மீது காட்டாத கரிசனையை முஸ்லிம் மக்கள் மீது காட்டுகின்றார்களே தமிழ்த் தலைமைகள்?**

வலி சுமந்த இனமொன்று தான் பட்ட வலியை இன்னொரு இனம் படுகிறது என்றால் தாங்கிக் கொள்ளாமல் துடிக்கிறது. ஆனால் எமது அரசியல்வாதிகள் இந்த நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி தாம் செய்த திருகுதாளங்களை மறைக்கப் பார்க்கின்றார்கள்.

அறிக்கைகள் பலமாக இருக்கின்றன எனும் போதே அதனுள் ஏதோ இருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். விளங்கிக் கொள்ளாவிட்டால் நாமென்ன செய்ய.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள் 021 567 1532 என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

சுதன் — குப்பிளான்

**ஜனநாயக வழியில் போராட்டம் செய்யாமல் கூட்டமைப்பின் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தால் எமக்கான தீர்வு கிடைக்குமா?**

இது ஒரு நல்ல கேள்வி. இந்த வாய் பார்க்கும் பழக்கம் தமிழர்களிடம் அதிகமாக இருக்கிறது. எங்கு எந்த இடத்திற்குச் சென்றாலும் நாமுண்டு நமது வேலை உண்டு என்று இல்லாமல் மற்றவர்கள் செய்வதை ஆவென்று பார்த்துக் கொண்டிருப்பது. இறுதியில் தமது வேலையைச் சரியாகச் செய்யாமல் கோட்டை விடுவது. இப்போது வரை எவ்வளவு துரோகங்களைச் செய்த இந்த கூட்டத்தை நம்பி அவர்கள் வாய் பார்த்துக் கொண்டிருக்கின்றார்களே.கடவுளை நோவதைவிட வேறில்லை.

சித்திரா — வட்டுக்கோட்டை.

**ஜனாதிபதியைத் தீர்மானிப்பதில் இராஜதந்திர முடிவுகளை தமிழர்கள் எடுக்கின்றார்களாம். இது எப்படி?**

எந்திரன் படத்தில் புளூசிப் உள்ள சிற்றியை ரெட்சிப் இற்கு மாற்றி அழிவுகளை ஏற்படுத்தியது போல ரெட் சிப்புடன் அழிவுகளுக்காகச் சுற்றும் ஒரு சிலரை புளூ சிப்புக்கு மாற்றி விட்டால் எல்லாம் சரி வரும்.

## மே-18 இராணுவத்தால் இடையூறு இருக்காதாம். உண்மையோ?

வட்சிகன் — தெடுத்தனை

**சரணடைந்தவர்களின் நிலை என்ன?**

தமது உறவுகளைத் தேடி காணாமல் போனவர்களின் போராட்டம் நூறு நாட்களைக் கடந்து சென்று கொண்டிருக்கின்றது. எந்த ஆட்சியாளர்களும் அதைப் பொருட்டில் கூட எடுத்ததாகத் தெரியவில்லை.

ஆனால் ஏனோ அவர்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை எமக்குச் சொல்லுங்கள் என்று கெஞ்சுகின்றார்கள். ஆனால் பலரும் அதைக் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை.
ஆக காணாமல் போனவர்கள் காணாமல் போனவர்களாகவே...

ரவி — சுழிபுரம்

**ஆசையைக் குறைத்தால் முன்னேறலாமா?**

இப்படித்தான் நான் ஒருவருக்கு அறிவுரை சொல்லி அனுப்பி விட்டேன். இரண்டு வருடங்களின் பின் என்னைச் சந்திக்க வந்தவர் என்னிடம் கேட்டார் நீங்கள் தானே சொன்னீர்கள் ஆசையைக் குறைத்தால் வாழ்வில் முன்னேறலாம் என்று.

நான் ஆசைகள் குறைத்து இரண்டு வருடங்களாகி விட்டது இன்னும் முன்னேறவில்லையே என்று.

அது சரி நீங்கள் எந்த ஆசையைக் குறைத்தீர்கள் என்று நான் கேட்டேன். அவர் சொன்ன பதில் "உழைக்கும் ஆசையை". எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

யனுசன் — ஸ்கந்தபுரம்

**யாழ். பல்கலைக்கழக மாணவர் கைது தொடர்பில்?**

நாட்டில் என்ன நடக்கிறது என்பது தான் இன்னும் புரியவில்லை. எதற்காக அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது என்பது இன்னும் புரியாமல் பலர் மண்டையைப் பிய்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எது நடந்தாலும் இறுதியில் தமிழனில் வந்தே முடிகின்றது. நடக்கட்டும், நாடகம் எதுவரை என்பதைப் பார்ப்போம்.

பிரவீன் — யாழ்ப்பாணம்

**நண்பன்-நண்பி என்பவர்கள் யாவர்?**

என்னதான் நட்பு என்று பீத்திக் கொண்டாலும் ஆண்- பெண் நட்பு இறுதிவரை நட்பாக இருப்பது 99 விகிதம் இல்லை என்பதே பொதுவான கருத்து.

உங்கள் கேள்விகளை 021 567 1532 / 076 636 3378 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்

## தீராத்துயர் கேளீர்

**கவியரசன், முத்தையன்கட்டு**

சொந்தங்கள் கண்முன்னே மரணமாகி
சோகங்கள் மிகையாகியது எம்முன்னே
காயப்பட்டு உயிருக்கு போராடிய
கருவில் சுமந்தவளையும் தவறவிட்டோம்
தன் தோளில் தூக்கி வளர்த்த
தந்தையையும் நாம் இழந்தோம்
கண்ணீர் விட்டழுது கருமணி சுருங்குது
கண்முன்னே உம்மை இழந்த கதையால்
காணாமல் போனோருக்கும் முடிவில்லை இங்கு
கண்ணீரும் நிற்கவில்லை இன்னமும் எங்கும்
முள்ளிவாய்க்கால் எங்கும் அழுகுரல் கேட்கிறது
முச்சிழந்த இடத்தின் சோகம் வாட்டுது
முத்தான சொந்தங்களை முடிவாய் இழந்தோம்
முகவரியை தொலைத்து
ஏக்கத்துடன் வாழ்கின்றோம்
நிம்மதி இழந்து பத்தாண்டாகிட்டுது
நீதி தேவதையும் நிரந்தரமாய் உறங்கிட்டு
நிலையில்லா வாழ்வில் நிழல்களும் கூடுது
நீத்தார் முகங்கள் கண்முன்னே வாழுது
அகம் முழுவதும் அவலநிலை கூடி நிற்க
ஆறுதல் சொல்ல எவரும்
இல்லாமல் தவிக்க
அழிந்தது எமது உறவுகளே வாரீர்
ஆற்றுப்படுத்த எவரும் இல்லை பாரீர்
இறந்த உறவுகளை நினைக்கிறோம்
இறைவன் திருவடியை
வேண்டி நிற்கின்றோம்
இவர்கள் ஆத்மா
நிம்மதியாக உறங்கவே
இனியொரு பிறவி
எவருக்கும் வேண்டாம்
அவலக் குரல்கள் கேட்டது போதும்
அன்பானவர்களை இழந்த நாளில்
அவர்களை நினைத்து ஒருத்தல் செய்வோம்
ஆண்டவன் பாதத்தில் சாந்தியடையட்டும்

## கவிதைக் கலசம்



## ஒற்றை மரம்

இந்த வாழ்க்கை ஓய்கிறதாய் விளம்பும்
நாய்களின் ஊளையும்
அடங்கிப்போகிறது..
மனிதர்களின் அவலக் கீச்சிடல்களும்
செத்துப் போய்க் கொண்டிருக்க
வாழ்வின் இறுதியை உறுதிப்படுத்த
இரவின் தனிமையில் தறப்பாள் கூட்டில்..

தூங்கவிடாது துரத்துகின்ற நினைவுகள்
குழந்தையொன்று வீறிட்டழுகின்றது
போர்வை விலகிப்போய்
குளிர் உறுத்துகிறதோ என நினைத்தேன்
தாய் உடல் சிதைந்து உயிர் பிரிந்ததை
அறியாது பாலுக்கு அழுத பாலகனை
நெஞ்சுருக பார்த்தேன்!

அதிகாலை பொழுது விடியும் கணம்
தூரத்தே கேட்கும் துவக்குச் சத்தங்கள்
விடியாத பொழுதை விடியவைத்தது
தறப்பாள் கொட்டகையை சரிபார்த்து
கஞ்சிக்கு கோப்பை அடுக்க வரிசையில்...
கண்பார்வை தூரத்தில் விழுந்து வெடித்த
செல் ஒன்று சிதறியோட வைத்தது

குண்டுகள் வந்து விழுந்த அந்த
நாழிகை பொழுது நாங்களும் வீழ்ந்தோம்
நிலை குலைந்தோம் எங்கள் நிலம் இழந்தோம்
எங்கள் உறவுகள் பலரை இழந்தோம்
என்னில் நேசம் வளர்த்த நண்பர்கள்
சிலரும் அவற்றில் அடங்கும்
கனவில்லை, ஹொலிவுட் படமில்லை மெய்யே

## மே—18




சுற்றத்தில் சிதறிய உடல்கள்
வழியே சொரிந்த உதிரம்
முற்றம் வரை பாய்ந்தோடியும்
தாங்கமுடியா மனக் குமுறல்களை
வெளிப்படுத்த கண்களில்
கண்ணீர் வற்றிப் போனதாலும்
யாருக்கும் உணரவைக்க
இயலவில்லை
என்றும் மறவோம்
இனப்படுகொலை அல்ல

மனிதநேயமே கொலை
செய்யப்பட்ட நாள் இன்று
சிதைக்கப்பட்ட கனவுகள் அல்ல
விதைக்கப்பட்ட விதைகள்
தேங்கிய இரத்தம் வழியிலேனும்
என்றேனும் தரை பிளக்கும்
செந்தளிர்கள்




தமிழ்ப்பிரியன் தனு
உரும்பிராய்

## கண்ணீரும் செந்நீரும்

கொட்டும் மழையாக
கொத்துக் குண்டுகள்
ஓயாமல் வெடித்துச் சிதறியதைய!
பல இலட்சம் அப்பாவிகளும்
இளம் பிஞ்சுகளும்
சிதறிப் போனதைய!

காயப்பட்ட அப்பாவிகளின்
உடலுக்குள்ளே
எத்தனை ஷெல் துண்டுகள்
கிடக்குதைய!
அத்தனையும் குறல்கட்டி சிதல்கட்டி
மரணவேதனை
தினம் தினம் கொடுப்பதை
யார் அறிவார்களோ?

அன்று அள்ளி அள்ளிக்
கொடுத்த கைகளும்
ஓடி ஓடி உழைத்த கால்களும்
இன்று அள்ளி சாப்பிட
கைகள் இல்லாமலும்
நடப்பதற்கு கால்கள் இல்லாமலும்
சிறகொடிந்த பறவைகளைப் போல
தரையிலே தினம் தினம் துடிப்பதை
யார் அறிவார்களோ?

எத்தனை எத்தனை கொடுமைகளும்
அவமானங்களும் தமிழ்மண்ணிலே
நடந்ததைய அத்தனையும்
சொல்லிலே சொல்ல முடியுமா?

கண்ணீரும் செந்நீரும் சேர்ந்து
எழுதிய முள்ளிக் காவியத்தை
படிக்க முடியுமா?
வைகாசி 18 துக்கதினத்தை
எக்காலத்திலும் மறக்க முடியுமா?

ச.பிரநிதன்
மட்டுவில்

## தீயினில் எரியாத...

பேரிரைச்சலுடன் வந்த
பெரும் அலை ஒன்று
நுரைகளைத் தள்ளிச் சென்றது
அவை நொடிகளில் உறைந்திட்ட
தடங்கள் ஆயிரம் கதை சொன்னது

உக்கி நெக்கிப் போய்க்கிடந்த
தறப்பாள்களில் குண்டுச்சன்னங்கள்
தைத்த ஓட்டைகள் மட்டும்
மலடாய்க் கிடந்தன

தப்பிய ஒரு சில தென்னைகள்
மகரந்த வாசனையை பரப்ப முடியாது
சோலை இழந்து சோடை பத்தி நிற்கிறது

பாலா பாலா பத்தி எரி...
எனும் போது உலகப்படம் வரையும்
நிலத்துப் பூச்சிகளோ
நெளிகிறது மிஞ்சிக் கிடந்த
எலும்புகள் நடுவே

பாலைவனமாய்க் காட்சிதரும்
கடற்கரை ஓரங்களில்
பச்சைவரி சாட்சி சொல்கிறது
பாவிகளின் இறப்பை

எடுத்து கால் வைத்த தடத்தில்
ஏதோ தடக்கிவிட
என்னவென எடுத்தபோது
சுட்டி ஒன்று
இறந்தவர்க்காய் என்னை
ஏற்று ஏற்று என்று
ஏங்கி நின்றது

இனமொன்று தன் இருப்பையும்
இனத்தையும் இழந்த பின்பும்
நிமிர்ந்து நிற்க முயல்கிறது
முட்டுக்கட்டைகளைத் தாண்டி

மாவை. நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 447




## சிகரமென எழுந்திடுவீர்

எந்த முகத்தில் மலர்வு
இமியும் இருக்கிறதா?
சந்ததியை அழிக்கச்
சதாவும் வஞ்சகத்தை
நிந்தித்தும் நிராகரித்தும்
நித்தியமாய் செய்வோர்
முந்தி இருந்த இனத்தின்
முகவரியை மறைப்போர்
சிந்தித்து சிரசிலறைய
சிகரமென எழுந்திடுவீர்

வாகை வளவன்
நாரந்தனை

## மௌனத்தின் தேடல் -448



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## ஏக்கம்

உயிர்த்த ஞாயிறு
உயிர் காப்பான் தேவன் என்று
நம்பிக்கையோடு
தேவாலயத்திற்கு சென்ற
எம் உறவுகளை
குண்டுத்தாக்குதலினால்
பறிகொடுத்துவிட்டு
தவித்து நிற்கும் சிறுவர்கள் இங்கே

க.செல்வமலர்
சிறுவர் இல்லம்

## இழப்பு

உரிமை இழந்த உறவுகளை இழந்த
உன்னுடைய தவிப்பை
உணருகின்றேன் மனிதா
துன்பத்தில் தோள்சாய துணைவி உண்டு
துயரினைத் துடைத்திட
உறுதிகொண்டு எழுந்திடு- இனி
இறப்பதைத் தவிர
இழப்பதற்கு ஏதுமில்லை

யோ.யனுசன்
ஸ்கந்தபுரம்

## மதவெறி

இனியும் வேண்டாமே
இந்த மதவெறி
சிந்திய குருதித்துளிகள்
கொஞ்சமல்ல
சிதறிப் போன
கண்ணீர்த்துளிகளுக்கு
சிந்தனைகள் அதிகமல்லோ
இறை படைப்பில்
யாம் எல்லாம் ஒன்றல்லோ
மதங்கள் வேறு வேறு என்றாலும்
மனிதம் என்பது ஒன்றுதானே
பிண்டங்கள் இல்லை- அந்தப்
பிஞ்சு உள்ளங்கள்
பிணங்களாக வாழ்கின்றன
இவ் ஜகத்தில் கதறும் ஓசை
கேட்கவில்லையோ?
கண்ணீரின் அர்த்தங்கள்
புரியவில்லையோ?
இனியும் வேண்டாமே
இந்த மதவெறி

நி.சிவமதுரா
யா/மா.மெ.ஆ.பா.

## கருணையில்லா கொடுமை

உயிர்த்த ஞாயிறன்று
கர்த்தரின் வழிபாட்டில்
கருத்தோடிருந்த மக்களை
கருணையில்லா
கொடுமனப் பாவிகள்
தற்கொலைக்குண்டுகளை
திட்டமிட்டு வெடிக்கவைத்து
சாகடிப்புச் செய்தனரே
குருதி வெள்ளத்தில் சிதறிய
உடல்களைக்
கண்ட உறவுகள்
தாங்க முடியா
வேதனையால்
கதறி அழுகின்றார்
கவலையோடு

துரை
தென்மட்டுவில்

## மனநலம்

காலம்தோறும்
காட்டுத் தீ போல்
கலங்க வைக்கும்
கலவரங்கள் நிகழும்
வயது வித்தியாசமின்றி
மனநலத்தைப் பாதிக்கும்
எரியும் நெருப்பில்
எண்ணெய் வார்ப்பதாய்
இன்று முகநூலும்
இதற்குத் தீனி போடும்
குறுக்கு வழியில்
குறுகிய காலத்தில்
இலாபம் தேடுபவர்கள்
இதற்குக் காரணம்

க.நாகராசா
நுணாவில்


## தீர்க்க முடியாத துயர்

அனைத்து மனிதரையும்
அதையும் தாண்டி உயிர்களையும்
இந்தப் பிரபஞ்சத்தையுமே
படைத்தது ஒரே இறைவன்தான்!
ஆனால் அறிவியல் மொழியாலும்
அரசியல் சித்தாந்தங்களாலும்
ஆன்மீகம் நம்பிக்கைகளாலும்
வேறுபட்ட சூழ்நிலைகளில்
உருவானதை
இறைவனுக்கு இணைவைத்து
சாட்சிக்கு வரமுடியாத அவனை
சண்டைக்கு காரணமாக்கி
அறியாமை அடிப்படை
வாதங்களால்
அப்பாவிகளின் வாழ்க்கை
தீர்க்க முடியாத துயரங்களில்

இ.ஜெ.பாலன்

சிறுகதை

# முதுமையில் தனிமை கொடியது



ப.சிவதர்சினி,
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.

வழமைபோல அன்றும் மணி ஒன்பதைத் தாண்டுகையில் பேருந்து தரிப்பிடத்தை நோக்கி இராட்சத வேகத்துடன் வந்து நின்றது. அதுவரை காத்திருந்தவர்கள் பேருந்தினுள் ஏறிக்கொண்டனர். நானும் அவர்களுடன் ஏறினேன். சுருக்கங்கள் விழுந்த தள்ளாடும் வயதிலும் தடுமாறாமல் தன் தலைமேல் அரிசிப்பொதியைச் சுமந்தபடி ஒரு ஆச்சியும் எங்களோடு பேருந்தில் ஏறுவதற்காக நின்றார்.

உஸ்... உஸ்...

பேருந்து நின்றது. நடத்துநரோ "கெதியா ஏறுங்கோ கெதியா ஏறுங்கோ..." எனக் கூச்சலிட்டுக் கொண்டே நின்றான். எல்லோரும் ஏறிவிட்டார்கள் ஆனால் ஆச்சி ஏறுவதற்கு கொஞ்ச நேரமெடுத்தது. ஏன் தெரியுமா? தலைமேல் அரிசிப்பொதி மட்டுமல்ல ஒற்றைக்கையில் ஓலையால் நெய்யப்பட்ட பையில் பலவிதமான காய்கறிகளும் இருந்தன. அவ்வளவு சுமைகளுடன் அந்த வயதில் பேருந்தில் ஏறுவதென்றால் சுலபமான காரியமா?

நடத்துநர் "ஆச்சி நீ இப்படியே நில் அடுத்த பஸ்ஸில் வா ..." என்றான். மனது கேட்கவில்லை. நான் பேருந்திலிருந்து இறங்கி ஆச்சியிடமிருந்த அவ் ஓலைப்பையை வாங்கிக்கொண்டே நானும் ஆச்சியும் அந்த பேருந்தில் ஏறி அருகருகே இருக்கையில் உட்கார்ந்தோம். பேருந்தும் புறப்பட்டது.

"புள்ள நன்றி அம்மா" என ஆச்சி என்னைப் பார்த்து புன்னகைத்த முகத்துடன் கூறினார். அவரின் முகத்தில் மகிழ்ச்சியின் சாயல் தென்பட்டது. சொல்ல வார்த்தைகளே இல்லை...

"அவரவர் வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம் மாற்றங்கள் அந்த நினைவுகள் நெஞ்சினில் திரும்பிட திரும்பிட ஏக்கங்கள்... அது ஒரு அழகிய நிலாக் காலம் கனவினில் தினம் தினம் உலாப் போகும், நிலவுகள் சேர்ந்து பூமியில் வாழ்ந்ததே அது ஒரு பொற்காலம்..."

பேருந்தில் வேகத்திற்கேற்ப பாடலும் மெல்லிய இசையுடன் இசைக்கத் தொடங்கியது. ஜன்னலினூடாக தலையை நீட்டி வெளியே பார்த்தேன். அப்போதுதான் மலர்ந்திருந்தன சில தாமரைப்பூக்கள். குளத்தைத் தாண்டுகையில் மெல்லிய குளிர்காற்று கேசத்தைத் கலைத்துச்சென்றது. அந்த அனுபவம் இனிமையைக்கொடுக்க பார்வையை பேருந்தின் உட்பக்கமாகச் செலுத்தினேன். விரல்களை வாயில் வைத்துச் சூப்பியபடி சுற்றும் முற்றும் தலையைத் திருப்பி பார்த்துக்கொண்டிருந்தாள் ஒரு சிறுமி. அவள் கண்கள் ஒரு கதையைச் சொல்லிக் கொண்டிருப்பதாய் எண்ணத் தோன்றியது.

அவள் கண்களில் வழிந்த ஆனந்தத்தைப் பருகியவாறே ஆச்சியின் பக்கம் பார்வையைத் திருப்பினேன். சுருக்கங்கள் தளர்ந்து புன்னகை பூத்த முகம் திடீரென சுருங்கி கண்களிலிருந்து கண்ணீர் சொட்டியபடி என்னைப்பார்த்த அந்தக் கண்களில் தேம்பிய கண்ணீர்த்துளியில் எத்தனையோ கேள்விகள்.

"ஆச்சி ஏன் திடீரென அழுகிறீங்க" எனக் கேட்க "இப்ப பஸ்ஸில போட்ட பாட்ட கேட்டியா புள்ள என்ன ஒரு வரிகள். வாழ்க்கையில் எத்தனை மாற்றங்கள் என கடந்தகால வாழ்க்கைக்கே அந்தப் பாடல் கொண்டுபோய் கொணர்ந்திட்டு. கடந்த காலங்களை நினைத்து கண்ணீர் என்னை அறியாமலே சிந்துகிறது. சிந்திய கண்ணீரை சேலைத் தலைப்பின் நுனியால் துடைத்தவாறே, என்னைப் பார்த்து "எத்தனை பேர் உங்கட வீட்டில்" என ஆச்சி கேட்ட கேள்வியில் எத்தனை ஏக்கங்கள்?

எங்கட வீட்டில எட்டுப்பேர். அம்மா, அப்பா, அக்கா, மூன்று அண்ணாக்கள், ஒரு தங்கச்சி என நான் கூற ஒருவித மகிழ்ச்சியுடன் "அட என்ர குடும்பத்தைப்போலதான் உங்கட குடும்பமும். வீட்டில் எல்லோரும் சேர்ந்து இருக்கும் போது சின்னச் சின்ன குறும்புகள், சின்னச்சின்ன சண்டைகள் என சந்தோஷமாய் இருக்குமே. ஏக்கத்துடன் என்னைக்கேட்க ஆச்சியின் கேள்விகள் என்னடா வீட்டில் நிறையப்பேர் இருக்கிறார்கள் என்றால் தள்ளாடு வயதான காலத்தில் இந்த ஆச்சி தலையில் அரிசி மூட்டையும் கையில் ஓலையால் நெய்யப்பட்ட பையினுள் காய்கறிகளும் சுமந்தபடி செல்கிறாரே! ஏன் உதவுவதற்கு யாரும் வரவில்லை எனக் கேட்க மனம் எண்ணியது.

"புள்ள என்ன மௌனமாய் இருக்கிறாய்" ஆச்சியை நினைத்து மனதில் எண்ணியதை "ஆச்சி உங்கட வீட்டிலும் எங்கட வீட்டைப்போல நிறையப் பேர் என்றால்; ஏன் இந்த வயதான காலத்திலும் வீட்டுச் சமையல் பொருட்களை வாங்குவதற்கு தனியாக உங்களை அனுப்பியுள்ளனர். ஏன் யாரும் துணைக்கு வரவில்லை" என ஆச்சியிடம் கேட்க, ஆச்சி திடீரென ஜன்னல் ஓரமாய் திரும்பி மௌனம் சாதித்தார்.

ஏதோ தவறாக நான் ஆச்சியிடம் கேட்டுவிட்டதாய் எண்ணத் தோன்றியது. சற்று நேரம் ஏதோ அந்த ஆச்சி நான் கேட்ட கேள்விகளிற்கு பதிலளிக்காமல் இருந்ததை மனதினுள் உறுத்தியவாறே இருந்தது. இருந்தும் மௌனமாக இருந்தேன். சிறிது நேரம் ஆச்சி ஜன்னல் ஓரமாக வெளியுலகை ரசித்துக்கொண்டு வந்தார்.

திடீரென "புள்ள நீ கேட்ட கேள்விக்கு பதில் இல்லை" எனக் கூறியவாறே மறுபடியும் கண்கள் கலங்கியபடி என்னைப்பார்த்து "எனக்கும் ஆறு பிள்ளைகள் நான் கல்யாணம் செய்து என்ர கணவரோட என்ர ஆறு பிள்ளைகளோட முப்பது வருஷமாய் இருந்த காலம் அந்தக்காலம். இப்ப பிள்ளைகள் மூன்று வெளிநாட்டில். மூன்று இங்கதான், கல்யாணம் முடிச்சதும் எல்லாம் தனித்தனியாக வீடு கட்டி போயிட்டினம், நானும் என்ர புருசனும் தான் ஒரு வீட்டில் இருக்கிறோம். தங்கட வீட்டு வேலையைப் பார்க்கவே இன்டைக்கு நேரம் இல்லாமல் இருக்கினம்.

மாதம் மாதம் காசு மட்டும் பிள்ளைகள் தந்திடுவாங்க, வெளிநாட்டில இருக்கிற பிள்ளைகள் மாதத்தில மூன்று தடவை ரெலிபோன் எடுத்து கதைப்பாங்க, இங்க இருக்கிற பிள்ளைகள் மாதத்தில் இரண்டு தடவை வீட்ட வந்து எங்களைப் பார்த்திட்டுப் போவாங்க. என்ன செய்றது பிள்ளையளுக்கும் வேலை கூடிப்போய்ச்சு. ஆயிரம் தான் இருந்தாலும் பிள்ளைகளோட இருக்கிறதைப் போல ஒரு சந்தோஷமும் இல்லை. உடலளவில ஆரோக்கியமாய் இருந்தாலும் மனதளவில் சந்தோசமில்லை" என ஆச்சி கூறிய வார்த்தைகளில் என்னை அறியாமல் என் கண்கள் கலங்கின.

இவ் வரிகள் ஒவ்வொன்றும் அவ் ஆச்சி உறவுகள் இருந்தும் அநாதையாக முதுமையில் தனிமையின் கொடுமைகளை அனுபவிப்பதை உணர முடிந்தது.

முதுமையில் தனிமை கொடியது. இன்றைய அவசரயுகத்தில் எல்லோரும் அருகில் இருந்தாலும் சரி இல்லை என்றாலும் சரி பல வயோதிபர்கள் தனிமையில்தான் வாழ வேண்டியிருக்கிறது. பிள்ளைகள் நினைக்கிறார்கள் பெற்றோர்களின் வயோதிபக் காலத்தில் பெற்ற கடனிற்கு பணம் கொடுத்தால் போதும் பசி தீர்ந்துவிடுமென்று.

அவர்கள் எண்ணுவதில்லை தங்களுடைய வயது மட்டும் அதே இடத்தில் நின்று விடப்போவதில்லை என்ற உண்மையை. இருந்தும் இல்லாத உறவுகள் இவ்வுலகில் பல உருவாகிக்கொண்டே செல்கின்றன.

பேருந்து நின்றது ஆச்சி இறங்குமிடம் வந்தது. "புள்ள அது தான் என்ர வீடு ஒரு நாளைக்கு வா" என கண்களிலும் வார்த்தைகளிலும் ஏக்கங்களுடன் கூறியபடி அப் பேருந்தை விட்டு இறங்கிச் சென்றார். இவ்வாறு எத்தனை வயோதிபர்களின் வாழ்க்கை பேருந்துகளில் ஒலிக்கும் பாடல்களுடன் கடந்தகால நினைவுகளை மீட்டியவாறு யாருமறியா கண்ணீர்த்துளிகளுடன் செல்கிறதோ?

# ஈழத்தமிழர்களும் அகதிமுகாம் வாழ்வும்

தமிழக அகதி முகாமிலிருந்து பத்திநாதன்



1983ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம், போராக உருமாறிய பிறகு, முதன்முறையாக ஈழத்திலுள்ள தமிழர்கள் 'அகதிகளாக' வெளியேற ஆரம்பித்தார்கள். அப்போது ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் அகதிகளாகத் தமிழகம் வந்தார்கள்.

அந்தக் காலகட்டத்தில், இவ்வளவு பெரிய கூட்டம் இலங்கையிலிருந்து இடம்பெயர வேண்டுமென்கிற அரசியல் தேவை இலங்கையிலுள்ள விடுதலைப் புலிகளுக்கும் இருந்தது, இந்திய அரசுக்கும் இருந்தது.

கொல்லப்பட்டவர்களை வைத்து எப்படிப் போர் உரையாடல் நடக்குமோ, அதுபோல அகதிகளைவைத்தும் உரையாடல் நடத்த விரும்பினார்கள். ஆனால், சிங்கள அரசாங்கம் அகதிகளாக மக்கள் செல்வதை விரும்பவில்லை. ஏனென்றால், அவர்களுக்கு அது சாதகமாக இருக்கவில்லை.

1990ஆம் ஆண்டில் நான் அகதியாக இந்தியா வந்தபோது, இந்தியாவில் அப்போதிருந்த அரசு நிர்வாகம், அகதிகளைக் குடியமர்த்துவதற்குச் சிரமப்பட்டது. குறுகிய காலத்துக்குள் இலட்சக்கணக்கானவர்கள் வந்ததால், அரசு நிர்வாகத்துக்குச் சிரமம் இருந்தது.

ஓலைக் கொட்டகையில், கல்யாண மண்டபங்களில், நெல் மூட்டைகள் வைக்கப்பட்டிருந்த குடோன்களில், கோழிப் பண்ணைகளில் என கிடைக்கிற இடத்தில் தங்கவைக்கப்பட்டோம். நான் கோழிப் பண்ணையில்தான் தங்கவைக்கப்பட்டேன். தொண்டு நிறுவனங்களும் கிறிஸ்தவ அமைப்புகளும் அரசும் உதவிசெய்து எங்களுக்கு ஒரு தற்காலிக வாழ்க்கையை உருவாக்கிக் கொடுத்தார்கள். அதுதான் இன்று வரை தொடர்கிறது.

கூட்டம் கூட்டமாகத் தங்கும்போது ஏற்படுகிற உளவியல் பிரச்சினை, பாலியல் பிரச்சினைகள், அடிப்படை வசதிகள் என இம்மாதிரி பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அந்தச் சூழ்நிலையில், வாழ்ந்துகொண்டிருந்த அகதிகளின் நிலை, ராஜீவ்காந்தி மரணத்திற்குப் பிறகு ஒரே நாளில் மாறியது.

அப்போது நான் மதுரையிலுள்ள அகதிகள் முகாமிலிருந்தேன். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் எந்த நேரத்திலும் வந்து முகாம்களிலுள்ள எங்களைத் தாக்கலாம் என்கிற நிலை இருந்தது.

ஓலைக்கொட்டகைகளைத் தீவைத்துக் கொளுத்திவிடுவார்கள் என்ற பயமிருந்தது. அன்றிரவு யாருமே தூங்கவில்லை. உயிர் பயத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தோம். துப்பாக்கி ஏந்திய பொலிஸ் பாதுகாப்பு அப்போது எங்களுக்குப் போடப்பட்டது.

அதற்குப் பிறகு, ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா முற்றிலும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகக் கடுமையான மனநிலையிலிருந்தார். 'பிளெமிங்கோ ஆபரேஷன்' என்கிற பெயரில் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து, அகதிகளாக இல்லாமல் தனிப்பதிவில் இருந்த ஈழத்தமிழர்களை வளைத்துக்கட்டி சிறப்பு முகாம்களில் அடைத்தார். கூடுதலான சிறப்பு முகாம்கள் உருவாக்கினார். கடலோரப் பகுதிகளிலிருந்த முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்றினார்கள்.

1991 - 1995 காலகட்டத்தில், ஜெயலலிதா கிட்டத்தட்ட 54,000 அகதிகளைக் கட்டாயப்படுத்தி இலங்கைக்கே திருப்பி அனுப்பினார். அதற்குப் பிறகு கருணாநிதி ஆட்சிக்கு வந்தார். சில சலுகைகள் கொடுக்கப்பட்டாலும் இன்றுவரை அகதிகள் முகாம் கட்டுப்பாடுகள் அப்படியேதான் இருக்கின்றன.

அதன் பின்பு, இலங்கையில் போர் உக்கிரமடையும் போதெல்லாம் அகதிகள் வர ஆரம்பித்தார்கள். இப்படி அகதிகளாக 1983 - 2012 வரை 3,04,269 பேர் தமிழகம் வந்தார்கள் என்றும், தற்போது 2016 அரசு கணக்குப்படி 107 முகாம்களில் 64,144 நபர்களும், முகாமிற்கு வெளியே 36,861 நபர்களும் இருப்பதாகச் சொல்கிறது. இடப்பெயர்வில் அரசுகளின் புள்ளிவிபரங்கள் எப்போதும் சரியாக இருந்ததில்லை.

நான் இருந்த முகாமில் காலையில் கையொப்பமிட்டு மாலை வந்து கையொப்பமிட வேண்டும். இப்படிப் பல கடுமையான விதிகள் இருந்தன. 2009இற்குப் பிறகு, அவை சற்று கண்டுகொள்ளப்படாமலிருக்கிறது. ஆனாலும், மாநில எல்லைகளில் இருக்கக்கூடிய முகாம்களில் இன்னும் இந்த விதிகள் பின்பற்றப்படுகின்றன.

இன்னொன்று பொருளாதாரப் பின்னடைவு. ஒரு நல்ல நிறுவனத்தில் வேலைக்குப் போக இயலாது. பெரும் நிறுவனங்கள், அகதி என்றால் வேலை தரத் தயங்குவார்கள். அப்படியே வேலை கொடுத்தாலும், முகாம் கட்டுப்பாடுகளால் தொடர்ந்து வேலை செய்யமுடியாது. அசையும் அசையாச் சொத்து எதுவும் வாங்க இயலாது.

தமிழகத்தில் உள்ள அகதிகளின் பிள்ளைகளுக்கு மருத்துவம், விவசாயம் படிக்க இப்போதும் அனுமதி இல்லை. இதனால், கல்லூரி வரை படித்த அகதிகள்கூட இங்கே உடல் உழைப்பு சார்ந்த வேலைக்குப் போகிற கட்டாயம் எழுகிறது. இன்று அகதிகளின் தேசியத் தொழில் 'பெயின்ட் அடிப்பது' என்றாகிவிட்டது.

மாதத்தில் முதல் ஞாயிறு, மூன்றாவது ஞாயிறு, உதவித்தொகை கொடுக்கும்போது என மாதத்திற்கு மூன்று முறை அதிகாரிகள் வந்து பரிசோதனை செய்வார்கள். அப்போது குடும்பத்தில் உள்ள அத்தனைபேரும் வந்தாக வேண்டும்.

இதனால், வெளியூரில் வேலைக்குச் சென்றவர்கள்கூட அவசரமாக முகாமிற்குத் திரும்புவார்கள். இந்த நடைமுறைகள் அகதிகளுக்கானது இல்லை. சட்டவிரோதமாகக் குடியேறியவர்களுக்கானது. இதுதான் அகதிகளிடம் இன்று மிகுந்த மன உளைச்சலை உருவாக்கும் விடயமாக இருக்கிறது.

அகதிகள் இடப்பெயர்வில் முக்கியமானது ஆவணங்கள் பிரச்சினை. ஆவணங்களின் அடிப்படையில்தான் ஓர் அரசு செயற்பட வேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. மிக மோசமான ஒரு தருணத்தில்தான் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மக்கள் அகதிகளாக வெளியேறுகிறார்கள்.

ஆவணங்கள் தொலைந்துபோயிருக்கும், எரிந்து போயிருக்கும், கடலில் போயிருக்கும்... அந்தச் சூழலில் எப்படி ஆவணங்களைப் பத்திரமாக எடுத்துவர முடியும்? ஆனால், இதைப் புரிந்துகொள்ளாமல் அரசு அதிகாரிகள் மிகமோசமாக இன்று வரை அகதிகளை அலைக்கழிக்கிறார்கள்.

போர்ச்சூழல் காரணமாக இடப்பெயர்வு ஆகும் மக்களின் தகவல்களை வாய்மொழி அடிப்படையில் பதிவுசெய்ய வேண்டும் என்பது மனிதாபிமான அடிப்படையில் செய்யவேண்டிய கட்டாயம் இருக்கிறது.

ஆனால், பல நேரங்களில் அதிகாரிகளிடம் அந்த மனிதாபிமானம் இருக்கிறதாவென சந்தேகம் எழுகிறது. மோசமான அலட்சியத்தால் சில அதிகாரிகள், கடுமையான மனவுளைச்சலை உருவாக்கி விடுகிறார்கள்.

இலங்கை அரசாங்கம் முறையான மீள்குடியேற்றத்தைத் திட்டமிட்டுச் செய்யவில்லை. இங்கு இருக்கிற உடைமைகளை விட்டுச்சென்று அங்கு போய் மீண்டும் அகதி வாழ்க்கை வாழ யார் விரும்புவார்கள். நிலமில்லாத, வீடில்லாத, ஏன்... முகவரிகூட இல்லாத மக்களும் இருக்கிறார்கள். போக முடியாததற்கு இன்னும் பல காரணங்கள் இருக்கின்றன.

ஆயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் இங்குள்ள தமிழ்நாட்டுத் தமிழர்களைத் திருமணம் செய்திருக்கிறார்கள். இவர்களும் இவர்களைச் சார்ந்தவர்களும் ஊருக்குப் போவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. வேலைவாய்ப்பு, பொருளாதாரம் சார்ந்து இயங்கக்கூடியவர்கள் உடனடியாக அவற்றை விட்டுச் செல்லவும் முடியாது.

படிப்பைப் பாதியில் விட்டு அங்கே செல்ல இயலாது. இவர்களுக்கெல்லாம் இந்திய அரசு, குடியுரிமை வழங்க வேண்டும். ஆவணங்களைக் காட்டி பயமுறுத்தக் கூடாது என்று சொல்கிறேன்.

இன்றைக்கு அகதிகளிடையே அதிகமாக ஒலிக்கக்கூடிய குரல், 'இந்தியக் குடியுரிமை வேண்டும்' என்பதுதான். ஏனென்றால், 35 ஆண்டுகளாக இங்கேயே வாழ்ந்து வருபவர்களின் மனநிலையை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? இந்தியாவுக்கு தார்மீகமான ஒரு பொறுப்பும் இருக்கிறது. இந்திய அரசு இதைத் தட்டிக் கழித்துவிடவே முடியாது.

வரலாற்றில் இப்படி இடம்பெயர்ந்தவர் எல்லோருமே தாயகம் திரும்பிவிடுவதில்லை. இப்படியே இந்த முகாம்களை வைத்திருப்பதும் நியாயமில்லை. விரைவாக அகதிகள் முகாம்களுக்கு முடிவுகட்ட வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ராஜீவ்காந்தி மரணத்தைக் காட்டி இன்னும் எத்தனை வருடங்கள் கட்டுப்பாடாக வைத்திருக்கப் போகிறீர்கள்.

இலங்கையில் போர் முடிந்த 2009ஆம் ஆண்டு வரை வைத்திருந்ததைக்கூட ஒரு வகையில் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், இன்னும் ஏன் இந்தக் கட்டுப்பாடு. ராஜீவ்காந்தி மரணமோ, மற்ற மற்ற சம்பவங்களோ இதில் எதிலுமே எந்த அகதியும் சம்பந்தப்படவில்லை. எந்தத் தீவிரவாதச் சம்பவங்களிலும் தொடர்பில்லாத சாமானியர்கள்தான் இங்கே அகதிகளாக இருந்துகொண்டிருக்கிறோம்.

'அகதி' என்பது சொல்லாடல்களுக்குத்தானே தவிர அப்படி நாங்கள் நடத்தப்படுவதில்லை. சட்டவிரோதமாகக் குடியேறியவர்களை நடத்தும் சட்டத்தை அடிப்படையாக வைத்துதான் எங்களை இந்திய அரசாங்கம் நடத்துகிறது.

அந்த முறையைத்தான் கடைப்பிடிக்கிறது. அந்த அரசாணைதான் இப்போது வரை மத்திய அரசிடம் இருக்கிறது. அதை மாற்றினால் மட்டும்தான் தமிழகத்திலுள்ள அகதிகளை செட்டில் செய்வதைப் பற்றி யோசிக்க முடியும்.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, வளர்ந்த நாடுகளில் எங்கேயும் போர் நிகழவில்லை. வளரும் நாடுகளில்தான் வளர்ந்த நாடுகள் போரைச் செய்து பார்க்கிறார்கள். அகதிகள் உருவாக்கமும் பெருக்கமும் வளரும் நாடுகளில்தான் நிகழ்கிறது.

ஆக, வளரும் நாடுகள் தங்களுடைய பொருளாதாரம் மற்றும் புறக்காரணிகளையும் கவனத்தில்கொண்டு அகதிகளுக்கான சட்டத்தை உருவாக்க வேண்டும். ஏற்கனவே ஐ.நாவால் உருவாக்கப்பட்ட அகதிகள் சட்டம், மேற்கத்தேய நாடுகளால் மேற்கத்தேய நாடுகளுக்காக உருவாக்கப்பட்டது.

அகதிகள் உருவாக்கத்தைத் தவிர்க்க வேண்டும், போர்கள் நடக்காமல் இருக்க வேண்டும் என்பது பேரவாவாக இருந்தாலும், தவிர்க்க முடியாமல் உருவாகும் அகதிகளுக்கும் நாடற்றவர்களுக்கும் சட்டப் பாதுகாப்பும் உத்தரவாதமான கௌரவமான வாழ்க்கையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது மனிதச்செயல்.

எங்களால் இலங்கைக்கும் போக முடியவில்லை, இங்கேயும் சுதந்திரமாக வாழ முடியவில்லை, மற்ற நாடுகளுக்கும் போக இயலவில்லை. கதவில்லாத அறையில் அடைத்து வைத்த மனநிலையில்தான் நாங்கள் இருக்கிறோம். ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்க முடியும். வெளியே போக இயலாது!

ஈழத்தில் பதற்றத்தைத் திட்டமிட்டு உருவாக்கி, எங்களை வெளியேற்றினார்கள். இத்தனை இலட்சம் பேர் வெளியேற்றப்பட்டால் அதைவைத்து டிமாண்ட் செய்யலாம் என்கிற அரசியல் அப்போது இலங்கையில் செய்யப்பட்டது. அந்த அரசியலே இப்போது பயனில்லாமல் போய்விட்டது.

அதன் விளைவாக இங்கே நாங்கள், காலையில் எழுந்து ஒரு டீ குடிக்க வேண்டுமென்றால்கூட ஆவணங்களை உடன் எடுத்துப்போக வேண்டியிருக்கிறது. வண்டியில் சுதந்திரமாகப் போக இயலவில்லை. திரையரங்கில் இரவுக் காட்சி பார்க்க முடியவில்லை.

லைசன்ஸ் இல்லை என்பதால் வாகனம் ஓட்ட முடியவில்லை. இதெல்லாம் சின்னச் சின்ன விடயங்கள்போல உங்களுக்குத் தெரியலாம். ஆனால், இந்தச் சின்னச் சின்ன விடயங்களில் ஒளிந்திருக்கும் உளவியல் பிரச்சினை மிகப்பெரியது.

விமர்சனத்துக்குட்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜனநாயக முறை இன்று உலகம் முழுதும் இருக்கிறது. நாங்கள் குடியுரிமை சட்டத்தின்கீழ் வராததால், வாக்குப் போடுவது என்கிற ஜனநாயகப் பங்களிப்பு மறுக்கப்படுகிறது.

30 ஆண்டுகளுக்கும் மேலாக நாங்கள் வாழ்கிற நாட்டில், எங்களை யார் ஆள வேண்டும், எந்தக் கட்சி ஆட்சியமைக்க வேண்டும் என நாங்கள் நினைக்கத் தகுதி அற்றவர்களா? ஜனநாயகம் எல்லோருக்கும் பொதுவானதுதானே? நாங்கள் ஏன் புறக்கணிக்கப்படுகிறோம்.

குடியுரிமையற்றவர்கள் மற்றும் நீண்டகாலமாக இங்கேயே வாழும் பிறநாட்டவர்கள், நாடற்றவர்களும் வாக்களிக்கும் உரிமையை உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா உருவாக்க வேண்டும். 'நோட்டா' போல அது மொத்த உலகத்துக்கும் முன்மாதிரியாக இருக்கும். இது அவர்கள் பிரச்சினைக்கான தீர்வையும் கொடுக்கும்.

சமூகச் செயற்பாட்டாளர்கள், ஜனநாயகவாதிகள், மனிதவுரிமை ஆர்வலர்கள் இவர்களெல்லாம் சர்வதேச அளவில் இது குறித்துப் பேசவேண்டும். ஜனநாயகம் வலியவர்களுக்கானது மட்டுமல்ல, எங்களுக்கும்தான்!

# பதினொருவர் அணியில் ராகுல் வேண்டும் காரணம் சொல்லும் திலிப் வெங்சர்க்கார்



உலகக்கோப்பைத் தொடரில் 4ஆவது இடத்துக்குப் பொருத்தமான வீரராக கே.எல் ராகுல் இருப்பார் என இந்திய அணி தேர்வுக் குழுவின் முன்னாள் தலைவர் திலிப் வெங்சர்க்கார் கூறியுள்ளார்.

உலகம் முழுவதும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களின் கவனம் இங்கிலாந்து பக்கம் திரும்பியுள்ளது. உலகக்கோப்பைத் தொடரில் தங்களின் பேவரைட் அணி எப்படி விளையாடப் போகிறது என அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். ஆனால், இந்திய அணியில் இன்னும் 4 ஆவது வீரருக்கான இடம் குறித்த விவாதம் முடியவில்லை. ஐ.பி.எல் தொடர் தொடங்குவதற்கு முன்னதாகவே இந்திய அணியின் 4 வீரர் ஸ்பொட்டுக்குப் பிரச்சினை இருந்தது. இந்திய அணியின் கப்டன் கோலி, ஒரே ஒரு இடம் தான் பிரச்சினை. மற்றபடி இந்திய அணி உலகக்கோப்பை தொடருக்கு தயார் என முன்னதாகக் கருத்து தெரிவித்திருந்தார்.

ராயுடுவுக்கு பதிலாகத் தமிழக வீரர் ஓல் ரவுண்டர் விஜய் சங்கர் தேர்வு செய்யப்பட்டார். அதனால் அவர்தான் 4ஆவது வீரராகக் களமிறங்குவார் எனக் கூறப்பட்டது. ஆனால், நடந்துமுடிந்த ஐ.பி.எல் தொடரில் அவரது பர்போர்மன்ஸ் குறிப்பிடும்படியாக அமையவில்லை. ஆனால் உலகக்கோப்பை அணியில் இடம்பிடித்துள்ள கே.எல் ராகுல் சிறப்பாக விளையாடியுள்ளார்.

இதனால் 4ஆவது இடத்துக்கான இந்த ரேஸில் இவர் முந்துகிறார் எனப் புலர் கருத்து தெரிவித்து வந்தனர். தமிழக வீரர் தினேஷ் கார்த்திக்கும், விக்கெட் கீப்பராக இல்லாமல் துடுப்பாட்டவீராக அணி நிர்வாகம் எங்கு களமிறங்கச் சொன்னாலும் தயாராக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இதனால் 4ஆவது வீரருக்



கான தேர்வு இந்திய அணி நிர்வாகத்துக்குச் சற்றுக்கடினமானதாகத்தான் இருக்கும். ஆடுகளத்தின் தன்மையைப் பொறுத்து வீரர்களுக்குச் சுழற்சி முறையில் வாய்ப்பளிக்கப்படலாம் எனவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்திய அணி தேர்வுக் குழுவின் முன்னாள் தலைவர் திலிப் வெங்சர்க்கார் உலகக்கோப்பை தொடரில் 4ஆவது வீரராக கே.எல் ராகுல் தகுதியான வீரராக இருப்பார் எனக் கணித்திருக்கிறார். அதற்கான காரணங்களையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர். "இந்திய அணியில் தொடக்க ஆட்டக்காரர்கள் இடத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை. தவான் மற்றும் ரோகித் அந்த இடத்தைப் பார்த்துக் கொள்வார்கள். மூன்றாவது இடத்தில் கப்டன் கோலி. எந்தப் பிரச்சினையும் இல்லை. 4 ஆவது இடத்துக்கு ராகுல் பொருத்தமான வீரராக இருப்பார். 4ஆவது இடத்தில் ஸ்பெஷலிஸ்ட் துடுப்பாட்டவீரர் தேவை. ராகுல் டெக்னிக்கலாக ஸ்ட்ரோங்கான வீரர்.

அவர் தொடக்க வீரராகக் களமிறங்கி அனுபவம்கொண்டவர் என்பதால், ஒருவேளை இந்தியா டொப் ஓடர் வேகமாக ஆட்டமிழந்துவிட்டாலும், புதிய பந்தில் அவரால் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும். மேலும் இது நீண்ட தொடர். அதனால் தேவைப்பட்டால் சில போட்டி களில் அவர் ஓப்பனிங் கூட இறங்கலாம். அவர் ப்ளேயிங் லெவனில் இருக்க வேண்டும் என்றார்.

தினேஷ் கார்த்திக், கே.எல் ராகுல், விஜய் சங்கர்... இவர்களில் 4 ஆவது இடத்துக்கு உங்களின் சொய்ஸ் யார்...? ஏன்...? திலிப் வெங்சர்க்கார் போன்று காரணத்துடன் பதிவிடுங்கள் நண்பர்களே..!









# தமிழக படைப்பாளிகளுக்கு அது ஒரு கதை ஈழத்தில் பிறந்த எமக்கு இரத்தமும் சதையும்

## சீறும் "சினம் கொள்" இயக்குநர்



"எம் விடுதலைப் போராட்டத் தையோ, எம் மக்களின் கதையையோ தமிழகத் தமிழர்களால் எக்காலத்திலும் உருவாக்க முடியாது. தமிழகத்தில் இருக்கக்கூடிய படைப்பாளிக்கு அது ஒரு கதை. ஈழத்திலிருந்து வரக்கூடிய இயக்குநருக்கு அது இரத்தமும் சதையுமான வாழ்க்கை. தமிழகம்தான் எங்கள் தாய்வீடு. நான் இங்குதான் சினிமா கற்றேன். அந்த நன்றி எனக்கு எப்போதும் உண்டு. ஆனால் எங்கள் சினிமாவை எங்களால்தானே உரு வாக்க முடியும்." இயக்குநர் ரஞ்சித் ஜோசப்பின் பேச்சில் அத்தனை ஆதங்கம். ஈழத்தமிழர்களின் தற்போதைய வாழ்வைச் சொல்லும் 'சினம் கொள்' திரைப்படத்தை இயக்கியுள்ளார்.

இது இந்தியத் தயாரிப்பில் எடுக்கப்பட்ட முதல் முழுநீள ஈழ சினிமா. முழுக்க ஈழ நிலப்பரப்பில் எடுக்கப்பட்ட திரைப் படத்தில் நடித்தவர்கள் அனை வருமே ஈழத் தமிழர்கள். இந்தியாவில் தணிக்கை பெற்று 'U' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள 'சினம் கொள்', தேசிய விருதுத் தேர்வுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.




**"நீங்கள் யார், ஈழத்தில் எந்த ஊர்... உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்?"**

"பிறந்து வளர்ந்தது, யாழ்ப்பாணத் தில் உள்ள நீர்வேலி. யுத்தம் ஆரம் பிக்கப்பட்ட காலகட்டத்தில் அங்கிருந்து 91ஆம் ஆண்டு கொழும்புக்கு இடம் பெயர்ந்தோம். கொழும்பிலிருந்து 93ஆம் ஆண்டு என் 16ஆவது வயதில் கனடாவுக்கு அகதியாகச் சென்றோம். ஸ்கூல், காலேஜ் அனைத்தும் கனடாவில்தான். பிலிம் அண்டு டெலிவிஷனில் டிகிரி கோர்ஸ் சேர்ந்தேன். கோர்ஸ் முடித்துவிட்டு குறும்படங்கள் எடுத்தேன். பிறகு கனடாவில் உள்ள தமிழ்த் தொலைக் காட்சி ஒன்றில் வேலை செய்தேன். 2005ஆம் ஆண்டு இறுதியில் திரைக் கதை பற்றிய லெக்சர் கொடுப்பதற்காக வன்னிக்கு அழைக்கப்பட்டேன். நான் கைந்து மாதங்கள் வன்னியில் தங்கியிருந்தேன். அப் போது அரசியல் துறை சார்ந்தவர்களுடன் கதைக்கும்போது, 'சினிமா என்ற இந்த ஊடகத்தை விடுதலைப் போராட்டத்துக்கு எப் படிப் பயன்படுத்தலாம்' என்று பேசினோம். அந்தவகையில்தான் தமிழ்நாடு சென்று இயக் குநர் ஒருவரிடம் உதவி இயக்குநராகச் சேருவது என்று முடிவெடுத்தேன்."

**"யாரிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்தீர் கள்?"**

"2007இல் இந்தியா வந்து கவிஞர் அறிவுமதி அண்ணன் மூலம் இயக்குநர் சசியிடம் உதவி இயக்குநராகச் சேர்ந்து 'பூ' படத்தில் வேலை செய்தேன். இன்று எங்களுடைய மண் சார்ந்து, மொழி சார்ந்து ஒரு படம் எடுத்திருக்கிறேன் என்றால் அதற்கு கனடாவில் கற்ற சினிமாவைவிட சசி அண்ணாவிடம் கற்ற அனுபவங்கள்தான் முக்கியமான காரணம்."

**" 'சினம் கொள்' எந்தப் புள்ளியில் தொடங்கியது?"**

'இலங்கை அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனவர்களைப் பற்றி ஆவணப்படம் செய்ய ணும். இங்கு வருகிறீர்களா' என்று 2017இல் ஈழத்து எழுத்தாளர் தீபச் செல்வன் என்னை அழைத்தார். 2005 இற்குப் பிறகு நான் ஈழம் பக்கமே போகவே இல்லை. திரும்ப உள்ளே போகும்போது ஒருவேளை கைது செய்யப்படலாமோ என்ற அச்சம். என்னதான் நடக்கிறதென்று பார்ப்போம் என்று துணிந்து போனேன். அங்கு டிஸ்கஷனின் போது, 'இதை ஏன் நாம் முழுநீளப் படமா பண்ணக்கூடாது' என்ற எண்ணம். அதற்கு இலங்கைப் பணத்துக்கு ஒரு கோடி ரூபாய். இந்தியப் பணத்துக்கு 40 இலட்சம் தேவை என்பது புரிந்தது. நண்பர்களும் உதவ முன்வந்தார்கள். 'சினம் கொள்' தொடங்கிவிட்டோம்.

இறுதிக்கட்டப்போரில் கைது செய்யப்பட்ட ஒரு போராளி, ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு விடுவிக்கப்படுகிறான். 'போராட்டம் மௌனிக்கப்பட்ட 2009 இற்குப் பிறகு ஈழத்தமிழனுடைய நிலை என்ன?' என்ற கேள்வியை அவன் பார்வையில் மூன்றுவிதமான கருத்துகளோடு முன்வைக்கிறேன். ஒன்று, 'எந்நேரத்திலும் சுடப்படுவாய். செத்துப் போகத் தயாராகவே இரு' என்று மக்களை பய உணர்வோடே வைத்திருப்பது. அடுத்து, தமிழ் நிலப்பரப்பில் கஞ்சா, அல்கஹோல், நீலப்படம் போன்ற பண் பாட்டுச் சீரழிவுகள். மூன்றாவது, போரா ளிகளின் தற்போதைய நிலை. சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட போராளிக ளின் பொருளாதார நிலை பரிதாபகரமாக உள்ளது. ஒருவேளைச் சாப்பாட்டுக்கே அல்லல்படுகிறார்கள். விடுவிக்கப்பட்ட போராளிகளில் இதுவரை 100 இற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். 'என் இறுதிக்காலத்தில் மாவீரர்களின் குடும்பங்களுக்காகவும் காயப்பட்டு உடல் அவயவங்களை இழந்த போராளிகளுக்காகவும் வாழ்வதுதான் என் இலக்கு' என்று தலைவர் பிரபாகரன் சொல்லியிருக்கிறார். அதற்கு சர்வதேச ரீதியில் ஒரு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி வைத்திருந்தார். இன்று அவர் இல்லை என்ற சூழலில் அவர் கட்டியெழுப்பிய அந்தப் பொருளாதாரம் என்ன ஆனது? வெளிநாடுகளில் உள்ள அந்தப் பொருளாதாரக் கட்டமைப்புகள் அனைத்துமே அதற்கான பொறுப்பாக இருந்தவர்களின் சொந்தச் சொத்தாக மாறி விட்டன என்பதே உண்மை. 'சினம் கொள்' பட வில்லனே அப்படி ஒரு புலம் பெயர்ந்த தமிழர்தான். இப்படியான பிரச்சினைகளை ஓரளவுக் கேனும் சர்வதேச சமூகத்தின் முன் இந்தப் படம் வைக்கும்.

வசனம் மற்றும் பாடல்களை எழுத் தாளர் தீபச்செல்வன் எழுதியிருக்கிறார். இசை என்.ஆர்.ரகுநந்தன், ஒளிப்பதிவு மாணிக்கம் பழனிக்குமார், படத்தொகுப்பு அருணாசலம். 'ஆண்டவன் கட்டளை' படத்தில் நடித்த அரவிந்தன் தான் 'சினம் கொள்' நாயகன். நாயகி, நர்வினி டேவிட், டென்மார்க்கில் வசிக்கும் ஈழப் பெண். இவர்களுடன் தமிழக நடிகர் தனஞ்செயனும் நடித்திருக்கிறார்."

**"ஈழத்தில் படப்பிடிப்பு நடத்த அனு மதி கிடைத்ததா?"**

"ஸ்க்ரிப்டை இலங்கைத் திரைப்படக் கூட்டுஸ்தாபனம் ஏற்றுக்கொள்ளுமா என்ற தயக்கத்திலேதான் கொடுத் தோம். படப் பிடிப்பு நடத்த அனுமதித்த னர். 15 நாட்கள் ஷூட் டிங் முடித்திருந்த நிலையில் திடீரென்று ஒருநாள் இலங்கை பிலிம் போர்டில் இருந்து 'ஷூட்டிங்கை நிறுத்துங்கள். மீறிச் செய்தால் கமராவைப் பறிமுதல் செய்வோம், கைது செய்வோம்' என்று சொன்னார்கள். நீண்ட முயற்சிகளுக்குப் பிறகு, 'ஷூட் பண்ணும் போது எங்கள் கண்காணிப்பாளர் ஒருவர் உங்களுடனேயே இருப்பார். அவரிடம் காட் சிகளைச் சொல்லி அனுமதி பெற்ற பிறகே ஷூட் செய்ய வேண்டும்' என்ற நிபந்தனையுடன் அனும தித்தார்கள். அப்படித்தான் படத்தை முடித்தோம்."

> "எத்தனையோ ஆயிரம் குடும்பங்களில் தலைவன் கிடையாது, தலைவி கிடையாது, பிள்ளைகள் கிடையாது. மீதம் இருப்பவர்களுக்கும் கைகால்கள் கிடையாது. தமிழர் பகுதிகளில் இன்று தமிழ் இரண்டாம் நிலைக்குப்போய், எங்கும் சிங்களம்தான்.

**"2005 இற்குப் பிறகு 12 வருடங்கள் கழித்து 2017இல் ஈழம் சென்றீர்கள். எப்படி இருந்தது அந்த உணர்வு?"**

"எத்தனையோ ஆயிரம் குடும்பங்களில் தலைவன் கிடையாது, தலைவி கிடையாது, பிள்ளைகள் கிடையாது. மீதம் இருப் பவர்களுக்கும் கைகால்கள் கிடையாது. தமிழர் பகுதிகளில் இன்று தமிழ் இரண்டாம் நிலைக்குப்போய், எங்கும் சிங்களம்தான். எங்கு பார்த்தா லும் இராணுவம். சுதந்திரமாக இருக்கிறோம் என்ற எண்ணமே உங்களுக்கு வராது. யாரோ ஒருவர் உங்களைக் கண்காணித்துக்கொண்டே இருக்கிறார்கள் என்ற எண்ணம் தான் வரும்."

**"இலங்கையில் சமீபத்தில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?"**

"என் பார்வையில் இது ஒரு திட்டமிடப் பட்ட சதி. தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தில் சிங்களப் பேரினவாதம் சில முஸ்லிம்களைப் பயன்படுத்திக்கொண்டது. சிங்களவர்களைத் தவிர தமிழர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் எனச் சிறுபான்மை இனங்கள் நிம்மதியாக வாழ முடியாது என்ற சூழலை இலங்கை உருவாக்கியுள்ளது என்பதே உண்மை."

ஜூனியர் விகடன்

facebook

# குளத்தில் முதலைகள்



பகல் பொழுது போனால் இரவு. இருட்டு நிறைந்த காலப்பொழுதுகள். அதில் நல்ல இரவு, கெட்ட இரவு என்பது எல்லாம் கிடையாது. அதை அனுபவிக்கும் மனிதரிடம் தான் இருக்கு. இந்தக் கதையில் வரும் கதாபாத்திரங்களுக்கு நடக்கப் போகும் சம்பவங்கள் அது நல்ல இரவா அல்லது கெட்ட இரவா என முடிவு செய்யப் போகிறது.

நடு இரவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. சாலை ஓரத்தில் தெரு விளக்கின் கீழ் இரு மோட்டார் சைக்கிள்கள் நின்று கொண்டிருக்கின்றன. அந்த மோட்டார் சைக்கிளில் 30 வயது எட்டி இருக்கும் இரு முரட்டு ஆசாமிகள் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேச்சில் எந்த மரியாதையைக்குரிய வார்த்தையும், ஒழுக்கம் நிறைந்த மனிதர்களாகவும் காட்டவில்லை. மிக மோசமான ஒரு தலைமுறை வளர்ந்து கொண்டு இருக்கிறது என்பது அவர்கள் பேசும் மொழியும் செய்கைகளும் மிக அப்பட்டமாக படம் பிடித்து காட்டுகின்றன.

அந்த இரண்டு பேரில், ஒருவனின் போன் அலறுகிறது. அலறுகிறது என்றால் இவர்களை அழைக்கும் நபர் அலறுகிறார். போனை எடுக்கலாமா? வேண்டாமா? என யோசித்துக் கொண்டே இருக்கும்போது, போன் அலறுவது நின்று விடுகிறது. இருவரும் தங்களை கலவரத்தோடு பார்த்துக் கொள்கிறார்கள். மீண்டும் போனும் போன் அடிப்பவரும் அலறுகிறார்கள். வேறு வழி இல்லை. பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். போனை எடுக்கிறான். போனை எடுத்ததும் நல்ல நல்ல செந்தமிழ் வார்த்தைகளால் அலறுகிறார். தமிழுக்கு அமுதென்று பேர் என்பதை நன்கு அறிந்த மேதை அவர்.

அவன் கிடைச்சானா இல்லையா? இல்லை அண்ண' காசு கட்டி 15 நாள் ஆச்சு. ஆளே காணோம். நீங்கள் எல்லாம் என்ன வட்டி கொலேக்டர் ஒருத்தனை பதினைந்து நாளா கண்டு பிடிக்க முடியலைனா போய் சாவுங்கடா. இன்னைக்கு ராத்திரிக்குள்ள அவன் எங்க இருந்தாலும் கண்டுபிடிச்சு தூக்கிட்டு வர்றீங்க. இல்ல செருப்பால அடிப்பேன். நல்லா திங்கறதுக்கு தாண்டா நீங்க எல்லாம் லாயக்கு. சோத்து மாடுங்க. உங்களை நீங்க கேங்ஸ்டர்ஸ்-ன்னு வெளியில் சொல்லிக்காதீங்க.

போன் கட் ஆகிறது. கத்துகிறார் மச்சி அவன் மட்டும் கையில் கிடைத்தான், செத்தாண்டா அவன். மூஞ்சி மொகறை எல்லாம் உடைச்சு புடுவேன். வட்டிக்கு காசு வாங்கும் போது கெஞ்ச வேண்டியது. இப்ப நாம அலைய வேண்டியதா இருக்கு. பதினைந்து நாளா வீட்டுப் பக்கமும் வரவில்லை. வீட்டிலும் யாரும் இல்லை.'

அவனை பேசி விட்டானே மணி அவனை புடிப்போம்.' மணியை எங்கே போய் தேடுவது.

அந்த கேம் கடையில் தான் இருப்பான். மணியை புடிச்சு உதைக்கிற உதையிலே காசு வாங்குன குமார் வந்து சேரணும்' இருவரும் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்புகிறார்கள்.

வட்டி வசூலிக்கும் அந்த இரு ஆபிசர்களும் நீண்ட கடை வரிசையில் நடுவில் இருக்கும் ஒரு இருமாடி கடையின் முன் மோட்டார் சைக்கிளை நிறுத்துகிறார்கள். கடையின் முகப்பில் ஒரு மாமாக் ஸ்டால் மெலிதான வெளிச்சத்தில் இயங்குகிறது. OPEN என்கிற ஆங்கில எழுத்து LED விளக்கின் பலகையில் ஓடியும், நகர்ந்தும், நடந்தும் பல கோணங்களில் வட்டம் அடித்துக் கொண்டிருந்தது. அந்த மாமாக் கடையின் பின்புறம் முழுவதும் அடைக்கப்பட்டு, ஒரு சிறு கதவு மட்டும் இரும்பால் செய்யப்பட்டிருந்தது.

அந்த கதவை திறந்து ஆபிசர்ஸ் இருவரும் உள்ளே நுழைகிறார்கள். உள்ளே வரிசையாக பல கணனிகள் இருந்தன. பர்மா, இந்தோனேசியா பணியாளர்கள் கேம் கடை ஊழியர்களாக வேலை செய்து கொண்டிருந்தார்கள். டிங் டோங், பீம் பீம், டவுங் டவுங் என பலவித சத்தங்கள் அந்த கணனியில் வந்து கொண்டிருந்தது. அந்த கடை முழுவதும் நாற்பது கணனிகளுக்கு மேல் இருக்கும். ஆனால் ஒரு கணனி கூட கோசமாக இல்லை. எல்லோரும் மிக தீவிரமாக கணனியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்த கடை முழுவதும் சிகரெட்டின் புகை வேறு சூழ்ந்திருந்தது. மிக மெல்லிய வெளிச்சம் கடை முழுவதும் பரவியிருந்தது. கேம் கடை என்பது கள்ள சூதாட்ட மையம் அல்லது மிக எளிமையாக பணம் போட்டு பணம் எடுக்கும் எந்திரம் என்றும் சொல்லலாம். பத்து போட்டு நூறு எடுக்கலாம். ஆயிரம் போட்டு நாசமாய் போகலாம். ஆக மொத்தம் சூதாட்ட மையம்.

ஆபிசர்ஸ் இருவரும் அந்த மெல்லிய வெளிச்சத்தில் மணி என்பவனை தேடிக் கொண்டிருந்தார்கள். ஒரு மூலையில் தனியாக மணி என்பவன் கணனியில் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் அருகில் போனார்கள். ஓங்கி தலையில் ஒரு தட்டு தட்டினார்கள். படார் என மணி கணனியின் திரையில் மோதிக் கொண்டான். தடார் மடார் என சத்தம் கேட்கவும் கடையின் மொத்த கண்களும் இந்த மூவரையும் பார்த்தது. அதற்குள் சீனன் ஒருவன் வேகமாக வந்து, மூவரையும் கடையை விட்டு வெளியே போய் சண்டை போடும் படி கத்தினான்.

மணி மிகவும் பயந்து போய் இருந்தான். தலையில் ஓங்கி தட்டியதில் வெட்கத்தாலும், வலியினும் கண்கள் கலங்கி, மனதுகுள் அழ ஆரம்பித்துவிட்டான். இன்று பெருசா ஏதோ நடக்கப் போகிறது என்று அவன் உள்மனது சொல்லியது. ஆபிசர்ஸில் ஒருவன் மணியின் இடது கையை பிடித்து இறுக்கிக் கொண்டே, வெளியே இழுத்து போக முயற்சித்தான். இன்னொரு ஆபிசர் மணியின் சிலுவார் பக்கெட்டில் கையை விட்டு கைபேசி, மணிபர்ஸ், டாக்சி சாவி எஞ்சியிருந்த சில பத்து வெள்ளி நோட்டுகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டான். வேறு வழி ஏதுவும் தோன்றாதவனாய் மணி அவர்களுடன் கடையை விட்டு வெளியே போனான். மணிக்கு அழுகை அழுகையாய் வந்தது.

மணிக்கு வயது 45 இருக்கும். டாக்சி ஓட்டுநர். பலராலும் உறிஞ்சி பிழியப்படும் மிக பாவமான தொழில் செய்பவர்கள் தான் இந்த டாக்சி ஓட்டுநர்கள். டாக்சி ஓட்டுநர்களின் கதையை சொல்ல இந்த ஒரு கதை போதாது. இந்த ஒரு கிரகம் போதாது. அவர்களின் புலம்பல்களை கேட்க ஏழு கடல் ஏழு உலகம் தேவை. மணிக்கு நல்ல திடகாத்திரமான உடம்பு தான். பாவம் மனம் தான் பிஞ்சு போயிருந்தது.

(தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1723

Search for people, places and things

### அனோஜன்

ஏன் அண்ணே இப்படி வெளில சுத்துறீங்க? வெயில் எப்படி அடிக்குதுன்னு பாருங்க... அட போப்பா இது கொஞ்சநேரம்தான் அடிக்கும்... வீட்டுக்குப் போனா பொண்டாட்டி தொடர்ந்து அடிக்கும்



### மனோஜ்

சின்ன வயசில பேய்னா ரொம்பப் பயம்... வளர்ந்தோன்னதான் தெரிஞ்சுது மனுசங்க அதைவிடப் பயங்கரமானவங்கன்னு



### தர்சிகன்

ஆமை வேகத்தில் வந்து முயல் வேகத்தில் சென்றால் அதற்குச் சம்பளம் என்று பெயர்



### புவிராஜ்

அறிவை நினைச்சா அப்படியே புல்லரிக்குது



### குலசீலன்

80 இற்கு மேலே போகக்கூடாதுன்னா 160 வரை எதுக்கு மீற்றர்ல வச்சிருக்கிறாங்க




### கவிமாறன்

குழந்தை தொழிலாளி குற்றம்னா அப்ப ஏன் டீச்சர் மட்டும் ஹோம்வேர்க் கொடுக்கிறாங்க



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சலனம்

அன்பார்ந்த சங்குநாத வாசகர்களே உங்கள் அனைவருக்கும் ஜிம்மிக் குட்டியின் வணக்கங்கள் உரித்தாகட்டும். வெய்யில் தன் கொடுமையை நிறுத்திறபாடாக் காணேல்லை. தண்ணியைக்குடி குடி என்று தொண்டைத் தண்ணி வத்தக் கத்தினாலும் சனம் கேக்குதேயில்லை. இளநீரைக் குடிக்கிறதெண்டா எண்பது, தொண்ணூறு, நூறு எண்டு விலையேறிக் கொண்டு போட்டுது. பெரியவர் அடிக்கடி தொலை நோக்கிலை சிந்தித்துத் தான் சொல்லுறவர் பிள்ளையின் பிறந்த நாளுக்கு செவ்விளநீர்க்கன்று, மாங்கன்று என்று நடுங்கோ எண்டு. முதலாவது பிறந்த நாளுக்கு நடுற கன்று பாலர் வகுப்புக்குப் போகேக்கை தண்ணீர்ப் போத்தலுக்கை இளநீரை ஊத்திக் கொண்டு போக உதவும். ஓமோம் "தாளுண்ட நீரைத் தலையாலை'' தருவதெண்டு சும்மா சொல்லேல்லைப் பாருங்கோ... இருபத்தொரு வயதிலை ஏதோ திறப்பு பிறந்தநாள் எண்டு...அது தான் கீபேத்டே எண்டு கொண்டாடினம். விளங்கேல்லையே வாக்குரிமை பெற்றுவிட்ட பெருமிதத்திலை வீடியோ பிடிச்சு, பாட்டுப்பெட்டி போட்டு ஊரெல்லாம் அழைச்சுக் கொண்டாடினம். இருபத்தொரு இளநீர் மரம் நாட்டியிருந்தால் பதினைஞ்சு மரமாவது காய்க்கத் தொடங்கியிருக்கும்.

புற்று நோயாளர் காப்பகங்களுக்குக்குலைகுலையா வெட்டிக் குடுத்துத் தாக சாந்தி செய்யலாமே... ஊகூம் இதையெல்லாம் ஆர் கேக்கினம். ம்...எனக்கும் நாக்கு வரண்டு போச்சுது. தண்ணி குடிச்சிட்டு வாறன்...

அது யார்...லட்சுமிப் பாட்டி வருகிறா... என்ன கொடுமை அழுது கொண்டு வருகிறா...பாவம்.

"ஐயா...அவள் மோசம் செய்து போட்டாள். ஐயோ நான் நம்பியெல்லோ வளர்த்தனான். அவள் அறுத்துக் கொண்டு ஓடிட்டாள் ஐயா"

அவலமான குரலிலை வயித்திலையும் நெஞ்சிலையும் அடிச்சுக் கொண்டு கதறுற சத்தம் கேட்டுப் பெரியவர் எழும்பிறார்...

''என்ன லட்சுமி...பதறாதை... திண்ணையிலை இரு...இந்தா தண்ணியைக் குடி... ஆழமா மூச்செடுத்து விடு...முகத்தைத் துடை.... ம்...இப்ப சொல்லு..."

கேவிக்கேவி அழுதபடி தூணோடை சாய்ஞ்சு விட்டத்தைப் பார்த்தபடி இருக்கிறா...பெரியவரும் அழட்டும் எண்டு மௌனமா இருக்கிறார்... பாட்டிக்கு ஒரு பேர்த்தி. இப்பதான் பதினெட்டு முடிஞ்சு ஏ.எல். சோதினையும் எடுத்துப் போட்டு தையலுக்குப் போய் வாறவள். கறுப்பி எண்டு செல்லமா அவளைக் கட்டிப் பிடிச்சு சாப்பாடு கூட ஒரு வாய் ஊட்டி விடுவா... இப்ப... என்ன நடந்துதோ...ம்... எல்லாம் கடவுள் செயல்...ஏதோ சொல்லப் போறா...

''பொத்திப் பொத்திச் சிறகுக்கை வைச்சு வளர்த்தன்...தாய் முகம் காணாதவள் எண்டு. இப்ப அவள் என்ரை தலையிலை மண்ணை வாரிக் கொட்டிப் போட்டுப் பறந்திட்டாள் ஐயா... ஒரு தேத்தண்ணி கூட வைக்க மாட்டாள் ஐயா...மூண்டு நாளா நான் பச்சைத் தண்ணி பல்லிலபடாமை புலம்புறன்...''

பெரியவர் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு நீண்ட பெருமூச்சை விடுறார்...ம். ஏதோ சொல்லப் போறார்.

"லட்சுமி...கிளிக்கு சிறகு முளைச்சிட்டுது. அது உறவு தேடிப் பறந்து போட்டுது. சமைக்கத் தெரியாட்டி என்ன...? கொஞ்ச நாளைக்குப் பசியே தெரியாது. மோகமாக இருந்தால் முப்பது நாள்... வேகமாக இருந்தால் அடிவாங்கிக் கொண்டு திரும்பி வருவாள். நேசமாக இருந்தால் அடுத்த வருசம் பேரனைக் கொண்டு வந்து உன்ரை படியிலை வைப்பாள்... நீ ஒண்டை விளங்கிக்கொள்ளு காதல் தானெண்டால் அதுக்கு சாதி, மதம், நிறம், குணம், அந்தஸ்து ஒண்டும் பெரிசாத் தெரியாது. சந்தன மரத்தை வெட்டிக் கொண்டு போறவன் அரைச்சுப் பூசுவான். தாய் மரத்துக்கு அதாலை பயனில்லை. கோப தாபங்கள் எல்லாம் காலத்தாலை தான் மாற்ற முடியும்.



நல்லா இருந்தால் வாழ்த்து. கெட்டுப் போனால் மறைமுகமாக ஏதாவது உதவி செய். பிள்ளை வயிற்றோடு திரும்பி வந்தால்...பொறு பொறு முறைக்காதை...திரும்பி வந்தால் அரவணைச்சு ஏற்றுக் காப்பாத்து.


எல்லாம் வயசுக் கோளாறு. கண நேர சலனம் எவரையும் எதையும் யோசிக்க விடாது. நீ வடிவாக் குளிச்சு முழுகிக் கோயிலுக்குப் போய் ஒரு கட்டி கற்பூரத்தைக் கொளுத்திப் போட்டு மனதை அமைதிப்படுத்திக் கொண்டு ஒரு பிடி சோறு தின்ன...எல்லாம் நல்லபடி நடக்கும். ம்...இப்ப தேத்தண்ணியைக் குடி..."

பெரியவர் சாய்ந்து கொள்ளுறார்... லட்சுமிப் பாட்டி தேத்தண்ணி குடிச்சிட்டு முகத்தைத் துடைக்கிறா... ம்...அப்ப நாம் வாறன். கடவுள் காக்க.

**திருமதி.பாரதி கணேஷ்**
**சுன்னாகம்.**

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : கன்னத்தில் முத்தமிட்டால்
இயற்றியவர் : வைரமுத்து
இசை : ஏ.ஆர்.ரஹ்மான்
பாடியவர் : எம்.எஸ்.விஸ்வநாதன், பல்ராம், மாணிக்க விநாயகம்



விடை கொடு எங்கள் நாடே
கடல் வாசல் தெளிக்கும் வீடே
பனை மர காடே, பறவைகள் கூடே
மறுமுறை ஒரு முறை பார்போமா?
உதட்டில் புன்னகை புதைத்தோம்
உயிரை உடம்புக்குள் புதைத்தோம்
வெறும் கூடுகள் மட்டும் ஊர்வலம் போகின்றோம்

விடை கொடு எங்கள் நாடே
கடல் வாசல் தெளிக்கும் வீடே
பனை மர காடே, பறவைகள் கூடே
மறுமுறை ஒரு முறை பார்ப்போமா?
உதட்டில் புன்னகை புதைத்தோம்
உயிரை உடம்புக்குள் புதைத்தோம்
வெறும் கூடுகள் மட்டும் ஊர்வலம் போகின்றோம்

கந்தல் ஆனாலும் தாய் மடி போல்
ஒரு சுகம் வருமா? வருமா?

கந்தல் ஆனாலும் தாய் மடி போல்
ஒரு சுகம் வருமா? வருமா?
சொர்க்கம் சென்றாலும் சொந்த ஊர் போல்
ஒரு சுதந்திரம் வருமா? வருமா?
கண் திறந்த தேசம் அங்கே
கண் மூடும் தேசம் எங்கே?

கண் திறந்த தேசம் அங்கே
கண் மூடும் தேசம் எங்கே?

பிரிவோம் நதிகளே பிழைத்தால் வருகிறோம்
மீண்டும் தாயகம் அழைத்தால் வருகிறோம்
கண்ணீர் திரையில் பிறந்த மண்ணை
கடைசியாக பார்க்கின்றோம்

விடை கொடு எங்கள் நாடே
கடல் வாசல் தெளிக்கும் வீடே
பனை மர காடே, பறவைகள் கூடே
மறுமுறை ஒரு முறை பாரப்போமா?
உதட்டில் புன்னகை புதைத்தோம்
உயிரை உடம்புக்குள் புதைத்தோம்
வெறும் கூடுகள் மட்டும் ஊர்வலம் போகின்றோம்




தெலுங்கில் சுப்பர் ஹிட் ஆன டெம்பர் படத்தினை தமிழில் ரீமேக் செய்து அயோக்கியா என்கிற பெயரில் தற்போது வெளிவந்துள்ளது. படம் எப்படி இருக்கு? வாருங்கள் பார்ப்போம்.

சென்னையில் சட்ட விரோதமாக பல தொழில்கள் செய்து வரும் காளிராஜன் (பார்த்தீபன்). தனக்கு இடைஞ்சலாக எந்த பொலிஸும் வரக் கூடாது என்பதற்காக மோசமான ஒரு இன்ஸ் பெக்டரை கொண்டு வரும்படி மினிஸ்டரிடம் கேட கிறார். அவரும் கர்ணன் (விஷால்) தூத் துக்குடியில் இருந்து சென்னை நீலாங் கரைக்கு ட்ரான்ஸ்பர் செய்கிறார்.

பணத்திற்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற மனநிலையில் இருப்பவர் விஷால். முதலில் பணம் வாங்கிக் கொண்டு பார்த்தீபனுக்கு உதவினாலும். ஒரு சமயத்தில் விஷால் பார்த்தீபனின் 4 தம்பிகள் சேர்ந்து ஒரு பெண்ணுக்கு செய்த கொடூரம் பற்றி தெரிந்து கொதித்தெழுகிறார்.



அனைத்து பிரச்சினைகளையும் தாண்டி ஆதாரம் திரட்டி அவர்களுக்கு தண்டனை வாங்கி கொடுத்தாரா என்பது தான் மீதி படம்.

தினம் தோறும் பெண்கள் மீது நடக்கும் குற்றங்கள் பற்றி செய்திகள் வந்தவண்ணம் இருந்தாலும் அதைத் தடுக்க மிக கடுமையான தண்டனை மட்டுமே ஒரே வழி என்பதை வலியுறுத்தியுள்ளது படம்.

தெலுங்கில் ஜூனியர் என்டி ஆர் டெம்பர் படம் பார்த்தவர்களுக்கு விஷாலை அந்த ரோலில் பொறுத்தி பார்க்க சற்று சிரமம் இருக்கலாம். இருந்தாலும் விஷாலின் நடிப்பு முதல் பாகத்தில் நெருடலாக இருந்தாலும். இரண்டாவது பாகத்தில் பாராட்டும் அளவுக்கு உள்ளது.

தெலுங்கு படத்தை அப்படியே செராக்ஸ் காபி எடுத்திருந்தாலும். கிளைமாக்ஸில் பெரிய மாற்றத்தை செய்துள்ளனர். வசனங்களும் கிட்டத்தட்ட தெலுங்கில் இருந்து எடுத்தது தான் என்றாலும் பல வசனங்கள் படம் பார்ப்பவர்களை நிச்சயம் யோசிக்க வைக்கும்.

ஹீரோயின் ராஷி கண்ணாவுக்கு படத்தில் பெரிய வேலை இல்லை. விஷாலின் பொலிஸ் ஸ்டேஷனில் நேர்மையான ஏட்டாக இருக்கும் கே.எஸ்.ரவிக்குமார் நடிப்பில் ஈர்த்துள்ளார். நடிகர் பார்த்தீபனின் காமெடி கலந்த வில்லன் கதாபாத்திரத்தில் கச்சிதமாக பொருந்தியுள்ளார்.

தற்போது சமூகத்திற்கு தேவையான கதை. கதை தான் இந்த படத்தின் முதல் ஹீரோ.

குறை சொல்ல முடியாத அளவுக்கு இருந்த ஒளிப்பதிவு மற்றும் பின்னணி இசை.

பரபரப்பே இல்லாமல் செல்லும் முதல் பாதி படம் என்பதை தவிர குறிப்பிட்டு சொல்லும் அளவுக்கு படத்தில் பெரிய மைனஸ் எதுவும் இல்லை.

மொத்தத்தில் அயோக்யா தற்போதைய சமூகத்திற்கு சொல்லப்பட வேண்டிய முக்கிய கதை.




இயக்குநர் ராஜேஷ் படங்கள் என்றாலே ஒரு சில முக்கியமான விடயங்கள் இருக்கும். ஆனால் அந்த விஷயங்கள் எல்லாம் வேண்டாம் என்று சிவகார்த்திகேயன் கூற முழுக்க முழுக்க காமெடியை மட்டுமே நம்பி அவர் எடுத்துள்ள படம் Mr. லோக்கல்.

சரி லோக்கலாக சிவகார்த்திகேயன் எப்படி கலக்கியுள்ளார் என்பதை பார்ப்போம்.

சிவகார்த்திகேயன் ஒரு தனியார் கார் கம்பனியில் வேலை பார்க்கிறார். சிவகார்த்திகேயன் அம்மா ராதிகா ஒரு சீரியல் நடிகையிடம் போட்டோ எடுக்க வேண்டும் என்று நினைக்கின்றார்.

அவரை அழைத்துக் கொண்டு அந்த நடிகையிடம் பார்க்க போக. அப்போது நயன்தாரா அவர்களை காரில் இடித்துவிடுகிறார்.

அப்போது தொடங்குகிறது இருவருக்குமான மோதல். பிறகு என்ன அந்த மோதல் காதலாகி கடைசியில் எப்படி இந்த ஜோடி கைகோர்கிறது என்பதே மீதிக்கதை.

சிவகார்த்திகேயன் ஒரு இடத்தில் கேட்பார் நம்ம ஊருக்கு என்ன தான் ஆச்சு என்று. அதேபோல் நமக்கும் கேட்க தோன்றுகின்றது நம்ம சிவகார்த்திகேயனுக்கு என்ன தான் ஆச்சு என்று. தொடர் ஹிட் படங்களால் டாப் கியரில் சென்றவருக்கு போதாத காலம் போல.

கடந்த அனைத்து படங்களிலும் எப்படி ஹீரோயின் பின்னாடியே சுற்றுவாரோ அதேபோல் தான் இதிலும். என்ன ஒரு படி மேலே சென்று படம் முழுவதும் நயன்தாராவை டார்ச்சர் செய்கிறார். கூடவே நம்மையும்.

ராஜேஸ் படம் என்றாலே காமெடி என்று நம்பி போகலாம். ஆனால். இனி ராஜேஸ் படம் போகலாமா என்ற நிலை உருவாகிவிட்டது.

ரோபோ ஷங்கர் பொண்டாட்டியிடம் அடிவாங்கும் ஒரு காட்சியை தவிர படத்தில் எங்கு தேடினாலும் காமெடி இல்லை. ஏன் யோகி பாபுவே டக் அவுட் ஆகி செல்கிறார்.

நயன்தாரா பல பெண்களுக்கு முன் உதாரணமாக திகழ்ந்து வருகிறார். அதற்கு ஏற்றால் போல் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கதாபாத்திரத்தில் கலக்கி வந்த இவர். இதில் ஏன் இப்படி ஒரு நீலாம்பரி கதாபாத்திரத்தை தேர்ந்தெடுத்து வழக்கம் போல் ஆணவம் இழந்து. ஆண்களுக்கு வாக்கப்படும் ஒரு சாமானியப் பெண்ணாக நடித்தார் என்று தெரியவில்லை. கண்டிப்பாக அவர் தேர்ந்தெடுக்கக் கூடாத கதை இது.

ராஜேஷ். சந்தானம் இல்லாமல் காமெடி வறட்சியில் இருப்பது அப்பட்டமாக தெரிகிறது. அதற்காக SMS. ஒரு கல் ஒரு கண்ணாடி காட்சிகளை அப்படியேவா வைப்பது?

ஹிப்ஹாப் ஆதிக்கு என்ன கோபம் என்று தெரியவில்லை, தான் இசையமைத்த ஒவ்வொரு படங்களில் இருந்து ஒரு பாட்டை எடுத்து இதில் போட்டு மேட்ச் செய்துவிட்டார். ஒளிப்பதிவு மட்டுமே கலர்புல்லாக இருக்கிறது.

அப்பறம் சிவகார்த்திகேயன் நீங்கள் படத்தில் செய்வது காதல் இல்லை. ஸ்டாக்கிங். கதை தேர்வில் கொஞ்சம் கவனமாக இருங்கள். கிட்ஸ் ரசிகர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் மட்டும் போதாது.

படத்தின் ஒளிப்பதிவு. கை விட்டு எண்ணும் அளவிற்கான ஒரு சில கவுண்டர் டயலாக்ஸ்.

நயன்தாரா ஸ்கிரீன் ப்ரசன்ஸ். எந்த ஒரு கதாபாத்திரமாக இருந்தாலும் சிறப்பாக செய்கின்றார்.

படத்தின் கதை. திரைக்கதை என அனைத்தும். கொஞ்சமாவது சிவகார்த்திகேயன் போன்ற பெரிய நடிகர். நயன்தாரா போல் ஆளுமை நிறைந்த நடிகை வைத்துக்கொண்டு நல்ல கதைக்கும் காட்சிக்கும் மெனக்கெடுத்து இருக்கலாம்.

மொத்தத்தில் மிஸ்டர் லோக்கல் நல்ல கூட்டணி அமைந்தும். எதிர்பார்ப்பை எட்ட முடியவில்லை.




# இலங்கைத் தொடர் குண்டுவெடிப்புகள் உலகமயமாகும் பயங்கரவாதம்

> “ இங்கு பணம் மட்டுமே காரணம் அல்ல. இறையியலில் ஏற்றப்படும் போதை, மரணமற்ற பெருவாழ்வு பற்றி பெருங்கதையாடலுடன் இணைந்தது இது. எல்லா மதங்களிலும் அடிப்படைவாதம் மதத்தைக் காக்க மரணிப்பதை அமரத்துவம் (அயசவலசனழஅ) என்ற பெரும் பிம்பமாகக் கட்டமைக்கிறது. அப்பிம்பம் தரும் இதமே அவர்களது ஆழ்மன வேட்கையாக, விருப்பாகப் பதிகிறது. தற்கொலைதாரி இந்த அமரத்துவ மதவாதக் கருத்தியலால் கட்டப்படுகிறான் ”

இலங்கையில் நடந்த தொடர் குண்டுவெடிப்புகள், மனித குலத்தின் உச்சபட்ச கொடூரங்களில் ஒன்று. தேவாலயங்கள், சுற்றுலாப் பயணிகள் தங்கும் ஹோட்டல்கள் தாக்கப்படுவதில் உள்ள உள்நோக்கம் குறித்த குழப்பம் முக்கியமானது.

எந்தவித எதிர்பார்ப்பும் உள் நோக்கமும் இல்லாமல் தேவாலயங்களைத் தாக்குதல் என்பதும், இலங்கை அர சுக்குத் தெரியாமல் இது நடந்து விட் டதான தோற்றம் எல்லாம் ஏற்படுத்தும் சந்தேகம் முக்கியமானது.



தொடர்ந்து ஆறுமாத காலமாக, இந்திய உளவுத்துறையான ரோ (RAW) மற்றும் இலங்கை உளவுத்துறை எச்சரித்தும், இலங்கை அரசு இதில் கவனமற்று இருந்துள்ளது ஏன்? என்ற கேள்விகள் எழுகின்றன.

முன்பு ஈழத்தமிழ் போராளிகளைத் தனிமைப் படுத்த, இலங்கைப் பேரினவாதிகளே இத்த கைய குண்டுவெடிப்புகளை நிகழ்த்திய வரலாறுகள் உண்டு. இலங்கையில் பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகிய நான்கு மதத்தினரே முக்கியமான மதத்தினர்கள் என்றாலும், பௌத்தர்களே சிங்கள இனமாகவும், மதமாகவும் உள்ளனர்.

தமிழீழ இனப்போரில் நிகழ்ந்த பேரழிவுக்குப் பின் நடத்தப்பட்டிருக்கும் இத்தாக்குதல், இலங்கையின் அரசியலில் மற்றொரு பரிணாமத்தைக் காட்டுகிறது. இன முரண்களிலிருந்து மத முரண்களை நோக்கி நகர்த்தப்படு வதன் வழியாக தேசியப் போராட்டங்கள், மதப்போராட்டங்களாக மாற்றப்பட்டு எல்லை தாண் டிய தான ஒரு உலகளாவிய தன்மை உருவாக்கப்படுகிறது.

இலங்கையில் அண்மைக்காலங்களில் உருவாகி வளரும் மத ரீதியிலான சக்திகள், மகிந்த ராஜபக்ஷவின் அரசைக் கைப்பற்றும் வெறி, மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்திற்கும் அரசிற்கும் உள்ள முரண்பாடுகள், பௌத்த சிங்கள அதிகார வர்க்கத்திற்குள் நிலவும் முரண் மற்றும் இஸ்லாமிய தீவிரவாதம் பேசும் அடிப்படைவாத அமைப்புகளின் வளர்ச்சி, எனப் பல காரணிகள் இதில் கவனம் செலுத்த வேண்டிய புள்ளிகள்.

இத்தொடர் குண்டுவெடிப்புகளில் இஸ்லாம் என்கிற பொதுமைப்படுத்துதல் எத்தனை ஆபத்தானதோ, அத்தனை ஆபத்தானது இந்நிகழ்வின் புவிசார் அரசியலையும், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் உலகளாவிய அரசியலையும் அதன் சார்புகளையும் வெளிப்படுத்தாமல் பேசுவது.

பொதுவாக, மத அடிப்படைவாதத்திற்கும் அம்மதங்களுக்கும் சம்பந்தமில்லை. இது இந்து, பௌத்த, யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்கள் அனைத்துக்கும் பொதுவானது. மத அடிப்படைவாதம் என்பது, நவீனத்துவ சமூகத்தால் கைவிடப்பட்ட, பகுத்தறிவுசார் மதச்சார்பற்ற அரசுகளுக்கு எதிராக உருவான ஒருவகைப் பின்நவீன அரசியல் விளைவு.

மத அதிகாரத்தைக்கொண்ட புனித அரசுகள் உருவாக, இறைவனின் ஆட்சியதிகாரத்தைக் கொண்டு வரும் நோக்கை வெளிப்படுத்துவதாக இவ்வமைப்புகள் அறிவித்துக் கொண்டாலும், அடிப்படையில் இவை புவிசார் அரசியலில் உருவாக்கப்பட்டிருக்கும் உலக முதலாளித்துவத் தின் ( global capitalism) அடியாள் படைகளாகச் செயற்படுபவை.

முதலாளித்துவத்தைப்போல, மத அடிப்படை வாதமும், பயங்கரவாதமும் தேசம் கடந்த நிகழ்வுகளாக மாறியுள்ளன. அதை ஒரு குறுகிய தேசத்திற்குள்ளோ, அங்குள்ள மதங்கள், மதநம்பிக்கையாளர்கள் அல்லது மக்களிடம் சுருக்கிப் பார்ப்பது பிரச்சினையின் ஆழத்தைப் புரிந்துகொள்ள உதவாது.

ஒரு குறிப்பிட்ட நாட்டின் இளைஞர்கள் பலியாவதற்குக் காரணம், அங்குள்ள பொருளியல் நிலை உருவாக்கும் நெருக்கடி, வேலையின்மை, வாழ்வின் துயரங்களுக்கு தீர்வின்மை எனப் பல காரணங்களும், அதனால் தூண்டப்படும் உணர்ச்சிகளுக்கு அடிமையாவதுமே. இதன் பொருள், அடிப்படையில் மதங்கள் சிறந்தவை, மத அடிப்படைவாதம் மட்டுமே மோசம் என்பதல்ல.

ஒருகாலத்தில், அரசில் அதிகாரம் செலுத்திய மதங்களைத் தற்போது உலக முதலாளித்துவம் தனது புவிசார் அரசியலுக்குக் கையாளும் நடவடிக்கையின் ஒரு வெளிப்பாடே இந்நிகழ்வுகள். பயங்கரவாதம், தீவிரவாதம், மத அடிப்படைவாதம் ஆகியவற்றை ஒரு தேசத்திற்குள் சுருக்கிவிட முடியாது. அது ஒரு சர்வதேச, உலகமய நிகழ்வாகும் என்கிற புரிதல் அவசியம்.

வெடிகுண்டு வைத்த தற்கொலைப்படையினரில் இருவர், தொழில் அதிபரின் மகன்கள். கோடீஸ்வரர்களான இவர்கள் எப்படி தம் உயிரை மாய்த்துக் கொள்ளச் சம்மதிப்பார்கள்? இங்கு பணம் மட்டுமே கார ணம் அல்ல. இறையியலில் ஏற்றப்படும் போதை, மரணமற்ற பெருவாழ்வு பற்றி பெருங்கதையாடலுடன் இணைந்தது இது.

எல்லா மதங்களிலும் அடிப்படைவாதம் மதத் தைக் காக்க மரணிப்பதை அமரத்துவம் (martyrdom) என்ற பெரும் பிம்பமாகக் கட்டமைக்கிறது. அப்பிம்பம் தரும் இதமே அவர்களது ஆழ்மன வேட்கையாக, விருப்பாகப் பதிகிறது. தற்கொலைதாரி இந்த அமரத்துவ மதவாதக் கருத்தியலால் கட்டப்படுகிறான்.

தற்போதைய உலகமயச் சூழலில், இத்தகையத் தொடர் குண்டுவெடிப்புகள் ஒரு புதிய போர்வடிவமாக மாறியுள்ளன. தற்கொலைத் தாக்குதலும், இலக்கற்று ஒரு பயங்கரத்தை உருவாக்கும் வண்ணம் நிகழ்த்தப்படும் குண்டுவெடிப்புக ளும், உலக முதலாளிய அமை ப்பு இன்று ஒரு நாட்டின் சந் தைகளை, மூலவளங்களைக் கைப்பற்ற உருவாக்கியிருக்கும் உளவுத்துறை வழியிலான உள்நாட்டுப் போர் முறையே. இது இந்நூற்றாண்டின் மத அடிப்படைவாதத்தின் பின்னணி அரசியலாகும்.

இம்முறை, தேவாலயங்களோடு இலங்கையின் முக்கியப் பொருளாதாரமான சுற்றுலாப் பொருளாதாரத்தைக் குறிவைத்து, சுற்றுலாப் பயணிகள் தங்கியுள்ள விடு திகள் தாக்கப்பட்டு, பல நாடுகளின் சுற்றுலாப் பயணிகளும் கொல்லப்பட்டுள்ளனர். இங்கு தாக்குதலின் பின்னணியில் மத அடிப்படை வாதிகளின் மத வெறுப்புணர்வு மட்டுமே இல்லை.

இலங்கையின் சுற்றுலாப் பொருளாதாரத்தை குலைக் கும் நோக்கமும் உள்ளது. ஆக, இக்குண்டுவெடிப்புகளின் பின்னுள்ள திட்டமிடலில், இலங்கையை ஒரு ஈரான், ஆப்கான் போன்ற நாடாக மாற்றி, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் நுழைவிற்கான கதவைத் திறப்பதா கவும் உள்ளது. அதாவது இலங்கை 'குளோபல் வோர் அன் டெரர்' என்ற வலயத்தில் இணைக்கப்படுகிறது. இத்தகைய நிகழ்வுகள் நடைபெறாமல் இருக்க, மதங்களின் பெயரால் வெளிப்படும் ஜனநாயகமற்ற அனைத்துக் காரணிகளையும் உடனடியாகக் கண்டு களைவது முக்கியம்.


இந்தக் குண்டுவெடிப்புகளின் பின்னணியில் உள்நா ட்டு, வெளிநாட்டு, பன்னாட்டு என எந்த அரசியல் செயற் பட்டாலும், எந்த மதம் செயற்பட்டாலும், அது மக்கள் விரோதமானது. அதைச் சமூகத்திலிருந்து அப்புறப்படுத் துவது ஒவ்வொருவரின் கடமையாகும். 'தாங்கள் மதம் விடுதலைக்கானது' என நம்பும் ஒவ்வொரு மதவாதியும் செய்யவேண்டிய பணி. ஒவ்வொரு தனிமனிதரும் செய்யவேண்டிய பணி!

நன்றி: தடம்

# புழுவின் விலை ஒன்பது இலட்சம் இமயமலையின் கறுப்புத் தங்கம்

யானை இறந்தாலும் ஆயிரம் பொன், இருந்தாலும் ஆயிரம் பொன்" என்பார்கள். இது யானைக்கு மட்டும் அல்ல. சின்னஞ்சிறிய புழுவுக்கும் பொருந்தும். இமயமலை சரிவுகளில் உள்ள புற்களில் வளரும் ஒரு வகை புழுக்கள் தங்கத்தைவிட விலை மதிப்பு வாய்ந்தவை. புழுக்களுக்கு இத்தனை மதிப்பு வரக் காரணம் ஒரு வகை பூஞ்சணம். ஒபியோ கார்டிசெப்ஸ் சைனென்சிஸ் (Ophio Cordyceps Sinensis) என்ற பூஞ்சணம் புழுக்களை தாக்கும். இந்தப் பூஞ்சணம் புழுக்களில் வளரத் தொடங்கியதும் புழுக்கள் இறந்துவிடும். இறந்த புழுக்களின் உடலில் பரவும் பூஞ்சணம் வேகமாக வளரும். தலைப்பாகத்திலிருந்து மிளகாய் காம்பு போல பூஞ்சணம் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும்.

கடல் மட்டத்திலிருந்து 3500 முதல் 5400 மீற்றர் உயரத்தில் மலைச்சரிவுகளில் உள்ள புல்வெளிகளில் இருக்கும் ஒரு வகை புழுவை இந்தப் பூஞ்சணம் தாக்குகிறது. பூஞ்சணம் தாக்கிய புழுக்கள், காய்ந்த குச்சியைப் போல



செத்து விழுந்து விடும். இப்படி பூஞ்சணம் தாக்கி இருந்த புழுக்களைச் சேகரிப்பது இமயமலை சரிவுகளில் பெரும் வேலைவாய்ப்பாக இருக்கிறது. திபெத் பீடபூமி பகுதியில் வருமானம் வரக்கூடிய தொழிலாக இருக்கிறது. இந்தப் புழுக்கள் மூலமாகத் தயாரிக்கப்படும் உணவு மற்றும் மருந்துப்பொருட்கள் திபெத் வருமானத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. திபெத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இது 8.5 சதவிகிதம் இடம்பிடிக்கிறது.

இந்தப் பூஞ்சணம் பற்றிப் பேசிய பூச்சியியல் வல்லுநர் நீ. செல்வம், "இமயமலையின் கறுப்புத் தங்கம் என இந்தப் புழு அழைக்கப்படுகிறது. இதற்குக் காரணம். ஒபியோ கார்டிசெப்ஸ் சைனென்சிஸ் பூஞ்சணம்தான். இந்தப் பூஞ்சணம் புழுக்களைத் தாக்கியதும் புழுவின் உடலில் பல மாற்றங்கள் நிகழும். ஒரு கட்டத்தில் புழு இறந்து விடும். இறந்த புழுவின் உடலில் இந்தப் பூஞ்சணம் வளரும். வளர்ந்த பூஞ்சணம் புழுவின் தலைக்கு வெளியே குச்சி போல நீட்டிக்கொண்டிருக்கும். இமயமலை சரிவுகளில் தான் இது காணப்படுகிறது. இந்தியா, திபெத், நேபாளம், பூட்டான், இதையொட்டியுள்ள சீனப் பகுதிகளில் இருக்கும் புற்களில் உள்ள ஒரு வகை புழுக்களின் மீதுதான் இது தாக்குதலைத் தொடுக்கிறது.

இன்றைய திகதியில் பூஞ்சணம் தாக்கி இறந்த புழுக்களின் விலை தங்கத்தின் விலையை விட அதிகம். இதைச் சேகரிப்பது அத்தனை சுலபமான காரியமில்லை. மலைச் சரிவுகளில் உள்ள புல்வெளிகளில்தான் இவை கிடைக்கும். 5 இஞ்ச் ஆழத்தில் இருக்கும்.

அந்தப் புல்வெளிகளில் கீழே படுத்து ஊர்ந்துகொண்டே தேடவேண்டும். புற்களுக்கு இடையில் மெல்லிய குச்சி போல வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் பூஞ்சணம். அதைத் தேடிச் சேகரிக்க வேண்டும்.

இந்தப் புழுக்களைச் சேகரித்து பொடியாக்குகிறார்கள். அதிலிருந்து, டொனிக், மாத்திரைகளைத் தயாரிக்கிறார்கள். கார்டிசெப்ஸ் என அழைக்கப்படும் இந்தப் பொருட்களில்தான் இருக்கிறது விடயம். இதைச் சாப்பிட்டால் உடலில் அதிக சக்தியை உற்பத்தி செய்யும். விளையாட்டுப் போட்டியில் போதை ஊக்க மருந்துகளுக்குப் பதிலாக இதைப் பயன்படுத்தலாம் என்றெல்லாம் நம்பிக்கைகள் இருக்கின்றன. சீன மருத்துவத்தைப் பொறுத்தவரை இதில் பல மருத்துவக் குணங்கள் அடங்கியிருக்கின்றன.

சீனாவில் இந்தப் புழுவிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்கள் அதிகளவு விற்பனையாகின்றன. அதேநேரம் சீனாவின், உணவு மற்றும் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம், இந்த பொருட்களில் கன உலோகம், நச்சுப் பொருட்கள் இருக்கின்றன. எனவே அளவாகப் பயன்படுத்துங்கள் என எச்சரிக்கை விடுத்துள்ளது. அதையும் மீறி இதன் வியாபாரம் சக்கைப்போடு போடுகிறது. 2004 ஆம் ஆண்டு கணக்குப்படி திபெத்தில் ஒரு குடும்பத்தின் வருமானத்தில் 40 சதவிகிதம் இந்தப் பொருட்களால் கிடைத்ததாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது உலகம் முழுவதும் இந்தப் பொருட்கள் வரவேற்பைப் பெற்றுள்ளன. 2008 ஆம் ஆண்டு திபெத்தில் ஒரு கிலோவின் விலை இந்திய மதிப்பில் 1,50,000 ரூபாயாக இருந்தது. தற்போது ஒரு கிலோவின் விலை 9,00,000 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. 1980 ஆம் ஆண்டு சீனாவில் ஒரு கிலோ ஆயிரத்து 800 யுவான் விலை இருந்தது. 2013 ஆம் ஆண்டு 5 இலட்சம் யுவான் எனப் பல மடங்கு விலை உயர்ந்தது. தற்போது ஒன்லைனில் பொருட்களை விற்பனை செய்யும் பிரபல நிறுவனங்களும் இந்தப் பொருட்களை விற்பனை செய்கின்றன" என்றார்.

முன்புபோல இப்போது இந்த பூஞ்சணம் இப்போது அங்கு பெருமளவு கிடைப்பதில்லை. மனிதனுக்குத்தான் எதுவும் எவ்வளவு இருந்தாலும் போதாதே. சீன அரசு சில ஆண்டுகளுக்கு முன்னர், இந்த பூஞ்சணத்தை அழிந்துவரும் உயிரினங்கள் பட்டியலில் இணைத்திருக்கிறார்கள்.

# இது நம்ம கதைகள்... 48

## விட்டுக் கொடுப்பு



கடந்த வாரம் அன்னையர் தினத்தைக் கொண்டாடினோம். ஒவ்வொருவர் வாழ்விலும் அன்னையின் வகிபங்கு புனிதமானது. எனவே அன்னையரை அந்த ஒருநாளில் மட்டுமல்ல. ஆயுள் முழுவதும் இதயத்தில் சுமக்க வேண்டியது எம் கடமையாகும்.

அன்னை நம்மெல்லோருக் கும் அன்பின் அடையாளம். அன்னையின் அன்பினில் பாசம், கரிசனை, பரிவு, பொறுமை, தியாகம், விட்டுக்கொடுப்பு என பல அர்த்தங்கள் பொதிந்திருப்பதை நம் அனுபவத்தில் உணர்ந்துள்ளோம். இதில் விட்டுக்கொடுப்பு என்பது இன்று எம்மத்தியில் அருகிவிட்டது. இதற்குக் காரணம் அது பலவீனத்தின் அடையாளமென நாம் கருதுவதே. உண்மையில் விட்டுக்கொடுப்பு என்பது சரணாகதியல்ல. அது பலத்தின், ஜீவகாருண்யத்தின் ஆயுதம். போர்க்களத் தில் நிர்க்கதியாகி நின்ற இராவணனிடம் "இன்று போய் நாளை வா" என இராமன் மொழிந்தது இத்தகைய விட்டுக் கொடுப்பே. இந்த வகையில் விட்டுக்கொடுப்பு முரண்பாடின்றி பரஸ்பரம் பிரச்சினை தீர்த்தலுக்கான ஒரு மார்க்கமாகும்.

இன்றைய வாழ்வின் வசதிகளும், உயரிய கல்வியும் அதன் இலக்குகளுக்கு மாறாக ஒரு திசையில் அல்லது குறுகிய வழியில் சிந்திக்கும் மனிதர்கள் பலரையே நம்மிடையே உருவாக்கியுள்ளன. இதனால் வறட்டுக் கௌரவமும், பிடிவாதமும் நம்மிடையே தலைவிரித்தாடுகின்றன. விட்டுக்கொடுப்பு செல்லாக்காசாக செல்வாக்கிழந்துள்ளது. வீட்டிலும், நாட்டிலும், தொழில் தளங்களிலும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு அருகிப்போனதால் சிறிய சச்சரவுகளும் முரண்பாடுகளாகி வழக்காடும் நிலை தோன்றியுள்ளது. இதனால் தேவையற்ற நெருக்கடிகள் வெடிக்கின்றன, செழிப்பான வாழ்வை கொந்தளிப்பாக்குகின்றன, அழிவுக்கு வழிகோலுகின்றன.

இனி இவ்வாரக்கதை.

உலகின் மிகப் பெரும் வல்லரசு நாட்டின் மிகப் பிரமாண்டமான நவீன போர்க்கப்பலொன்று நடுநிசி நேரம் கடலைக் கிழித்துக் கொண்டு விரைகின்றது. அந்த நாட்டின் கடற்படைத் தளபதியே அக்கப்பலை வழி நடத்திச் செல்கிறார். பல யுத்தங்களைச் சந்தித்து எண்ணற்ற எதிரிக் கப்பல்களை நிர்மூலமாக்கி வீரப் பதக்கங்களை நெஞ்சில் சுமப்பவர் அவர். சர்வதேச ரீதியில் "சமர்களின் நாயகன்" என பெயர் பொறித்தவர் நம்ம கதைநாயகன்.



திடீரென கப்பலின் சமிக்ஞை அதிகாரி நம்ம நாயகனிடம் பதற்றத்துடன் ஓடி வருகின்றார். "ஐயா நாம் பயணிக்கும் பாதையில் எதிர்ப் புறமிருந்து மங்கலான ஒளி தெரிகின்றது. ஏதோவொரு சிறிய கடற் கலமாகவிருக்கலாம். யாராவதொருவர் பாதையை மாற்றாவிட்டால் பாரிய விபத்து ஏற்படும். நாங்கள் பாதையை மாற்றுவோமா?" என்று பவ்வியமாகக் கேட்டார். இதைக் கேட்டதும் நம்ம நாயகனுக்கு கோபம் மூக்குநுனிக்கு வந்துவிட்டது "முட்டாள் தனமாகப் பேசாதே. அவர்களுக்கு வழிவிட்டுக் கொடுக்க நாம் என்ன சாதாரணமான கடற்படையா? எங்கள் பெயரைக் கேட்டாலே சும்மா அதிருமில்ல.... அவர்களுடன் வயர்லெஸ் தொடர்பெடு. அவர்களின் பாதையை மாற்றும்படி நான் கட்டளையிடுகின்றேன்" என்றார் நம்ம நாயகன் இறுமாப்புடன். அவர் நெஞ்சின் பதக்கங்கள் அந்த இருளிலும் மின்னின.

தொடர்பெடுக்கப்பட்டது. "நான் முதல்நிலை வல்லரசு நாட்டின் கடற்படைத் தளபதி அட்மிரல் பேசுகின்றேன். பல போர்க்களங்களை வென்றவன் நான்.

எங்கள் முதற்தரப் போர்க்கப்பல் பயணிக்கும் பாதையில் நீங்கள் நிற்கிறீர்கள். உங்கள் பாதையை மாற்றாவிடில் நிர்மூலமாக்கப்படுவீர்கள் என உங்களை எச்சரிக்கின்றேன்" என்றார் நெஞ்சை நிமிர்த்தியவாறு. மறுபுறத்திலிருந்து பதில் வந்தது. "நான் மிகச்சிறிய நாடொன்றின் சாதாரண கடற்படைச் சிப்பாய். எந்தப் போர்க்களத்தையும் இதுவரை சந்திக்காதவன். ஆயினும் எம்மால் ஒரு அங்குலம் கூட நகர முடியாது. நீங்கள் பாதையை மாற்றாவிட்டால் அழிவு உங்களுக்கே" என்றான் மறுபுறத்திலிருந்து பதில் சொன்னவன். நம்ம தளபதிக்கு கோபம் தலைக்கேறியது. "ஒரு அற்ப நாட்டின் சாதாரண சிப்பாய்க்கு இவ்வளவு திமிரா. அவனுக்கு நம் வல்லமையைக் காட்டுவோம். சுடுகலங்களை தயார் நிலையில் வைத்திருங்கள். எச்சரிக்கை குண்டை சுடுங்கள்" என்று ஆவேசமாகக் கட்டளை பிறப்பித்தார். எச்சரிக்கைக் குண்டு சுடப்பட்டது. மீண்டும் வயர்லெஸ் தொடர்பெடுத்தார். "யார் என்று தெரிகின்றதா, இவன் யார் என்று புரிகின்றதா. இது வெறும் எச்சரிக்கை தான். இன்னும் ஐந்து விநாடிகளுக்குள் நீங்கள் பாதையை மாற்றாவிட்டால் முற்றாக அழிவீர்கள்" என்றார் ஆணவத்துடன்.

"ஐயா ஐந்து விநாடிகளல்ல, ஐம்பது வருடங்கள் நீங்கள் அவகாசம் தந்தாலும் எம்மால் பாதையை மாற்ற முடியாது. ஏனென்றால் இது கடற்கலமல்ல, கடற்பாறையில் அமைக்கப்பட்டுள்ள எம் நாட்டுக் கலங்கரை விளக்கக் கோபுரம். அதற்குக் காவலாகவே நான் இங்கு கடமை யாற்றுகின்றேன். நீங்கள் உங்கள் போர்க்கப்பலின் பாதையை மாற்றாவிட்டால் இக்கற்பாறையில் மோதுண்டு அது அழிவது நிச்சயம்" என்று மறுமுனையிலிருந்து பரிதாபத்துடன் பதில் சொன்னான் சிப்பாய். ஆணவம் தன் கண்ணை மறைத்ததை யுணர்ந்து தலைகுனிந்தார் நம்ம தளபதி.

அர்த்தமுள்ள விட்டுக்கொடுப்புக்கள்
மகிழ்ச்சியான வாழ்வின் கவசங்கள்.

எம்.எக்ஸ்.அன்ரன்




# குறட்டையால் ஏற்படும் பாதிப்புக்களை குறைக்க





ஒவ்வொரு மனிதனுக்கும் தூக்கம் ஒரு வரப்பிரசாதம் - மனித வாழ்வெனும் விருந்திற்குத் தலையாய போசாக்கை அளிக்கும் ஆழ்ந்த உறக்கமானது நாள் முழுக்க வேலை செய்யும் உடலின் அனைத்து உறுப்புக்களுக்கும் ஓய்வினை வழங்குவதுடன் களைப்பைக் குறைத்து உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்ச்சியை வழங்குகின்றது.

ஒவ்வொரு தனிநபரும் தம் வாழ்வில் 1/3 பகுதியைத் தூக்கத்திலேயே செலவிடுகின்றார்கள். எனினும் தூக்கத்தில் அவர்களை அறியாமல் ஏற்படுகின்ற பிரச்சினை குறட்டை. இது வயது வித்தியாசம் இன்றி எல்லோரிலும் ஏற்படக் கூடியது.

ஒருவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது பலமான குறட்டை கேட்கும். அது அவருக் குக் கேட்காதுவிடினும் மற்றவர்களை இம்சைப்படுத்தும். பொதுவாக நாம் மூச்சுக் காற்றை வெளிவிடும் போது அது தொண்டை. அண்ணம். வாய்வழியாக வெளியேறுகிறது.

எனினும்நாம்உறங்கிய பின்பு நமது சுவாசக்குழாயில் உள்ள தசைகள். இழையங்கள் சற்றுத் தளர்ச்சியடைகின்றன. இதனால் காற்றுவெளியேறும் பாதை குறுகின்றது. இந்த அடைபட்ட அழுத்தம் நிறைந்த காற்றானது. எந்தவிதத் தடையும் இன்றி வெளியேறுகின்றது.

எனினும் நாம் உறங்கிய பின்பு நமது சுவாசக் குழாயில் உள்ள தசைகள். இழையங்கள் சற்றுத் தளர்ச்சியடைகின்றன. இதனால் காற்று வெளியேறும் பாதை குறுகின்றது. இந்த அடைபட்ட அழுத்தம் நிறைந்த காற்றானது தளர்ச்சியடைந்துள்ள சுவாசக்குழாய். தொண்டையின் பின்புறத் தசைகள். அண்ணம் போன்றவற்றில் மோதித் தடைப்பட்டு அதிர்வை ஏற்படுத்தி வெளிவரும்போது குறட்டை ஒலி வெளிப்படுகின்றது.

ஒரு புல்லாங்குழலின் துவாரங்களைச் சிறிது அடைத்த வண்ணம் ஊதும்போது இசையுண்டாகின்றதோ அதேபோல் நமது மூச்சுக் குழலில் அடைபட்ட அழுத்தத்துடன் உள்ள காற்றானது வெளிவரும் போது சில தடைகளை ஏற்படுத்தும்போது குறட்டை ஒலியாக வெளிவருகிறது.

இந்தக் குறட்டைச் சத்தமானது சிலருக்கு 40-60 டெசிபெல் (Desibel) வரை செல்கின்றது. இது ஒருவருக் குத் தரமற்ற தூக்கத்தை ஏற்படுத்துகின்றது. அத்துடன் தூக்க சுற்றுக்கள் குழப்பமடைவதால் ஒவ்வொருவரும் அவர்களது தனிப்பட்ட வாழ்வில் பல அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

குறட்டைதான் மூச்சுவிடமறத்தல் என்னும் நோய்க்கு மூலகாரணம் ஆகிறது. அதாவது மூச்சுவிடுதல் எனும் ஒழுங்கான அனிச்சைச் செயலில் தடை ஏற்படும்போது இடையிடையே ஒன்றிரண்டு மூச்சு வெளிவராமலே தடையாகின்றது. இதனால் அவர்களின் குருதியில் போதிய ளவு பிராணவாயுவை (ஒட்சிசன்) பெறமுடியாத ஆபத்துக்குள்ளாகின்றனர்.

கீழ்குறிப்பிட்ட வகையினர் கூடுதலாகக் குறட்டை விடுவதாக அவதானிக்கப்பட்டுள்ளனர். கட்டையான கழுத்துடையோர். சிறிய நாடி மற்றும் தொங்கும் கீழ்த்தாடையுடையோர். அதீத எடை உடையவர்கள். கொழுத்த கழுத்து உடையவர்கள். சிலவகையான ஒவ்வாமை உடையவர்கள். பிறவிக்குறைபாடு உடையவர்கள். மூக்கத் தண்டுச் சுவர் வளைந்து இருப்பவர்கள். சுவாச வழி மூக்குப் பகுதியில் நீர்க்கட்டிகள் அல்லது நீர்ச்சதைகள் (Polyps) இருத்தல். கடுமையான தடிமல். மூக்கடைப்பு இருப்பவர்கள். குழந்தைகள் சிறுவர்களில் டொன்சில் வீக்கம். அடினேயிட் வீக்கம் உடையவர்கள். அண்ணச் சதை வளர்ந்திருத்தல் மற்றும் புகைப்பிடிப்பவர்கள். மது அருந்துபவர்கள். தூக்க மாத்திரை பாவிப்பவர்கள். தைரொயிட் சுரப்பி நோய்க் குறைபாடு உடையவர்கள். வாயினால் மூச்சு விடுபவர்கள். அண்ணச்சதை தடித்து இருப்பவர்கள். மார்பு நோய்கள் ஏற்பட்டுச் சளி கூடுதலாக உள்ளவர்கள். இப்படியானவர்கள் குறட்டை ஒலியை ஏற்படுத்தியபடி உறங்குவார்கள்.




எமது நலமான வாழ்வுக்குக் குறட்டையை எம்மிடம் இருந்து பிரிப்பதற்கு நாம் சில முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

**அவையாவன:**

- அதீத நிறையுடையோர். கொழுப்புடையோர் தங்கள் உடல் நிறையைக் குறைக்க முயற்சிக்க வேண்டும்.
- தினமும் காலையிலும் மாலையிலும் உடற்பயிற்சி செய்தல்.
- மூச்சுப் பயிற்சியைத் தினமும் - மணித்தியாலத்துக்கு மேலாகச் செய்து வரல் வேண்டும். உதாரணமாக : பலூன் ஊதுதல். புல்லாங்குழல் ஊதுதல். ஸ்பைரோ மீற்றர் கருவியால் மூச்சுப்பயிற்சி செய்தல் மற்றும் யோகா மூச்சுப் பயிற்சி செய்தல்.
- தூங்கும்போது உயரமான தலையணை வைத்தலைத் தவிர்த்தல். அதாவது 4 அங்குல உயரம் இருந்தால் போதும்.
- சாப்பிட்டவுடன் படுக்கைக்குச் செல்லக் கூடாது.
- புகைபிடிக்கும் பழக்கம் உடையவர்கள் அதைத் தவிர்த்தல் வேண்டும். முக்கியமாக மாலையிலும். இரவிலும் மது அருந்துதலைத் தவிர்த்தல் வேண்டும்.
- மது அருந்தும் பழக்கம் உடையவர்கள் அதனைக் குறைத்தல் வேண்டும்.
- வாயால் மூச்சுவிடும் பழக்கம் உடையவர்கள் அதனை மாற்றி மூக்கால் மூச்சுவிடும் பழக்கத்தை உருவாக்கல் வேண்டும்.
- அதீத பருமன் உடையவர்கள் பக்கவாட்டில் படுக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அவர்களின் முதுகுப் பகுதிக்குள் தலையணை வைத்தல். அல்லது சிறிய அண்டும் பொருட்களை முதுகுப் பக்க உடையுள் வைத்து தைத்து விடுவதன் மூலம் மல்லாந்து படுப்பதைக் குறைக்கலாம்.
- பற்களுக்கு இடையில் இடை வெளிகள் இருப்பின் பல் வைத்திய நிபுணரிடம் காட்டுதல்.
- காது. மூக்கு. தொண்டை பிரச்சினைகள் குறைபாடுகள். அங்கவீனங்கள். சில சதை வளர்ச்சிகள். கட்டிகள் இருப்பின் காது மூக்கு தொண்டை (ENT) வைத்திய நிபுணரிடம் ஆலோசனை பெறுதல் மற்றும் சத்திர சிகிச்சைகள் செய்வதன் மூலம் இக்குறைபாடுகளைத் தீர்க்கலாம்.
- சிலர் தூக்கத்துக்காக வைத்திய ஆலோசனை இன்றி தூக்க மாத்திரை போடும் பழக்கத்தைத் தவிர்த்தல்.
- மூளையின் செயற்பாடுகளின் மாற்றங்கள். பாதிப்புக்கள். வலிப்பு நோய் உடையவர்கள் அதற்குரிய சிகிச்சையை ஒழுங்காகப் பெறுவதன்மூலமும் குறட்டையைக் குறைக்கலாம்.
- இரவு உணவு அதிகளவு எடுத்தலைத் தவிர்த்தல் நன்று. மிதமான காரமற்ற. எண்ணெய் அற்ற உணவு சிறப்பானது.

இவைபோன்ற நடை முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் குறட்டையைக் குறைத்துச் சுகமான ஆரோக்கியமான வாழ்வு வாழலாம்.

ச.சுதாகரன்
தாதிய உத்தியோகத்தர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்